ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப்
அன்ட் அசோசியேட்ஸ்

- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION

2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

UNIVERSITY OF JAFFNA LIBRARY 10 DEC 2002 PERIODICALS DIVISION

17 ஜுன் 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 28

# தலைவர் மீது அதிரடி இராணுவ நடவடிக்கை

## சிங்களக் கொமாண்டோக்களுக்கு இந்தியக் கறுப்புப்பூனைகள் விசேட பயிற்சி!

## மேற்பார்வையாளராக ஜே.ஆர் மகன் ரவி ஜயவர்த்தனா

### சமாதானப் போர்வையில் ரணிலின் சதி முயற்சி

ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும் தமிழீழ மக்களின் தேசியத் தலைவருமான மேதகு பிரபாகரனை உயிருடன் பிடிக்க அல்லது சுற்றி வளைத்துத் தாக்கி அழிப்பதற்கான சதித்திட்டம் ஒன்று புதுடில்லியில் வரையப்பட்டுள்ளதாக நம்பரமான செய்திகள் வெளியாகியுள்ளன. ஒரு புறத்தில் சமாதானம் பேசிக் கொண்டு மறு புறத்தில் தமிழீழத்தின் "ஆத்மா" என்று கருதப்படும் எமது தேசியத் தலைவர் பிரபாகரனைக் கைதியாக்க அல்லது தாக்கி அழிக்கும் சதி நோக்கத்தோடு அதிரடி நடவடிக்கை ஒன்றை இந்தியக் கூட்டுறவுடன் மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ரணில்விக்கிரமசிங்க இறங்கியுள்ளமை எந்தவொரு சிங்களத் தலைமையையும் நம்ப முடியாது என்ற அடிப்படை உண்மையை மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டது என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அண்மையில் மேதகு (4ம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரனின் வன்னி இல்லப் பாதையில் கண்ணிவெடிகள்: கண்காணிப்புக்குழுவிடம் தமிழ்ச்செல்வன் முறைப்பாடு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரும் தமிழீழத் தேசியத் தலைவருமான மேதகு பிரபாகரன் அவர்கள் தம் குடும்பத்துடன் வன்னிப்பகுதியில் தங்கியிருக்கும் இல்லத்துக்குச் செல்லும் பாதையில் கண்டெடுக்கப்பட்ட கண்ணி வெடிகள் குறித்து ஆதாரபூர்வமான முறைப்பாடு ஒன்று நோர்வே தலைமையிலான கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள இடத்துக்குச் செல்கின்ற பாதையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்கண்ணி வெடிகள் விடுதலைப் புலிகளின் உளவுத்துறைப் பிரிவைச் சேர்ந்த கடாபி என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தீவிர புலன்விசாரணைகளையடுத்து மேற்படி கண்ணி வெடிகள் சிங்களப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஆழ ஊடுருவல் தாக்குதல் குழுவினராலேயே அங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்திய உளவுப்பிரிவான "றோ" அமைப்பே இதனைச் செய்ததாக அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரை நிறுவன ஏடுகள் செய்தி வெளியிட்டிருந்த போதிலும் சிங்களப்படைத்தரப்பே இதற்குப் பொறுப்பு என்று புலன் விசாரணைகள் மூலம் தெளிவாகியுள்ளது.

அரசு - புலிகளுக்கிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளின்படி இத்தகைய ஊடுருவல் குழுக்களைப் பாவித்துத் தாக்குதல்கள் நடத்துவது திட்டவட்டமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வது ( 30ம் பக்கம் பார்க்க)

# எம்.பி. நியமனம் தொடர்பாக தமிழ்க்கூட்டமைப்பு புலிகளிடம் காவடி

மறைந்த தமிழர் கூட்டணித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்பத் தமிழ்க்கட்சிகள் மத்தியில் கடும் போட்டி நிலவுகின்றது. தமக்கிடையில் ஏற்பட்டுள்ள போட்டியைத் தீர்த்து வைத்து புதிய உறுப்பினர் யார் என்று தீர்ப்புச் சொல்லும் பொறுப்பினைத் தாமாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் இக்கட்சிகளும் இக்கட்சிப் பிரமுகர்களும் கையளித்துள்ளனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தம்மைப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று விண்ணப்பக்கடிதங்களையும் முறையீடுகளையும் வன்னியில் உள்ள விடுதலைப்புலிகள் அரசியல் தலைமைக்கு அனுப்பி வருகின்ற இக் கண்றாவிகள் தற்போது புலிகளின் கடைக்கண் கடாட்சம் வேண்டி நேரடியாகக் கிளிநொச்சிக்கு "காவடி" (7ம் பக்கம் பார்க்க)

# பலப்படுத்தப்படும் படைநிலைகள்: பலவீனமான சமாதான நகர்வுகள்

ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் நகர்வுகள் சமாதானம் நோக்கியதாகத் தென்பட்ட போதிலும் மறுபுறத்தில் யுத்தத்திற்கு தயாராகும் முயற்சிகளும் நடைபெறுவதாகவே தெரிகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை இவற்றக்குத் தடையாக அமையவில்லை என இவர்கள் இதற்குக் காரணம் கூறுகின்றனர். அப்படியானால் இப் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மறு பக்கில் யுத்தத் தயாரிப்பிற்கு சாதகமான வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது. சமாதானம் என்ற போர்வையில் அனைவரது கண்களையும் கட்டி விட்டு ஸ்ரீலங்கா அரசு யுத்தத்திற்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றதா என்ற சந்தேகம் தற்போது மக்கள் மத்தியில் எழுவதைத் தவறு என்றும் சொல்லிவிட முடியாது. ஏனெனில் ஆட்சியைக் கைப்பற்றியது முதல் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சியின் செயற்பாடுகள் அதிர்ச்சியளிப்பதாகவே காணப்படுகின்றன. பல வருடங்களாக மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொருளாதாரத் தடை (30ம் பக்கம்)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை
வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்

Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax. (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

THE INSURANCE CLAIMS SPECIALISTS

# தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யாத தீர்வுத்திட்டத்தை அமெரிக்க – இந்திய ஆதரவுடன் ஸ்ரீலங்கா அரசு திணிக்க முயல்கிறதா?

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றாத தீர்வுத்திட்டமொன்றை இந்தியாவினதும் அமெரிக்காவினதும் ஆசீர்வாதத்துடன் அரசாங்கம் அமுலபடுத்த முயற்சிக்கும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் தற்போது இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் ஆரம்பத்தில் இருந்த வேகத்தில் தற்போது நகரவில்லை என்ற கருத்தும் தமிழ்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் இறுதிப்பகுதியில் ஆரம்பமாகும் என முதலில் தெரிவிக்கப்பட்ட போதும் பல மாதங்கள் பின்போடப்பட்டிருக்கிறது. ஜூலையில் ஆரம்பமாகும் என இப்போது எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள பல விடயங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் பின்னடிப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்திடமிருந்து கடந்த சில மாதங்களில் பல தடவைகள் குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன.

விடுதலைப்புலிகள் மீதான தடையானது பேச்சவார்த்தை ஆரம்பமாவதற்கு பத்து நாட்களுக்கு முன்னரே நீக்கப்படுமென கடந்தவாரம் அரசாங்கம் அறிவித்திருந்தது.இது பேச்சவார்த்தைக்கான உறுதியான திகதியை அறிவித்த பின்னரே தடை நீக்கப்படுமென்ற ஒருவகை நிபந்தனை விதிக்கும் சமிஞ்சையாகும். ஆனால் இது சிங்கள் கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்துவதற்கு அரசாங்கம் விடுத்த அறிவித்தல் என்று மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் எதிரிசிங்க கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான பின் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எதிரான எதிரணிகளின் கடுமையான எதிர்ப்புக்கள் பிசுபிசுத்துப் போய்விடுமென அரசதரப்பு எதிர்பார்ப்பதாகக் கருதப்படுகின்றது.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகள் வடகிழக்கில் அமைக்கப்படும் இடைக்கால நிருவாகசபையை மையப்படுத்தியே இருக்கும் என்று சமீபகாலம் வரை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்டிருப்பதாகவும் தோன்றியது. ஆனால் இப்போது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் நிலைப்பாட்டிற்கு அரசாங்கம் வந்துள்ளதாக தென்படுகிறது. பேச்சுவார்த்தையின் போது பிரச்சனைகள் குறித்து பேசப்பட வேண்டும் திருமதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தார். இப்போது அரசாங்கமும் அத்தகைய கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

விடுதலைப்புலிகள் கேட்பதையெல்லாம் பிரதமர் வழங்குவதற்கு தீர்மானித்து விட்டார் என ஜே.வி.பி., பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஒரு பிரிவினர் கடுமையாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

உண்மையிலேயே நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டே பிரதமர் பெப்ரவரியில் விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொண்டார் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சமாதான முன்னெடுப்பு மூலம் அதிகளவு வெளிநாட்டு முதலீட்டை கவரமுடியுமென அரசு முயற்சிக்கிறது. இதனை விட பிரதமர் சில தந்திரோபாயங்களையும் மிகச் சாதுரியமாகக் கைக் கொள்வதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவாரத்தைக்கு முயற்சிக்கும் அதே சமயம் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச ரீதியிலான ஆதரவையும் அவர் திரட்டி வருகிறார். இதனைவிட இந்த விடயத்தில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு நகர்விற்கும் ஆதரவைப் பெற்று வருகிறார்.

செப் 11 இல் இடம் பெற்ற அமெரிக்கத் தாக்குதலின் பின் ஏற்பட்டிருக்கும் சர்வதேச நிலைப்பாடுகள் அரசாங்கத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. புலிகளுடன் மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாக ரணிலின் கரத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இப்போது அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகிறது. இதன்மூலம் பலமான நிலையில் இருந்து கொண்டு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமென அரசு எதிர்பார்க்கின்றது என ஓய்வுபெற்ற தமிழ்அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்காவுடனான இராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கைகளை அரசு வலுப்படுத்தி வருகிறது. அடுத்தமாதம் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் கொழும்புக்கு அண்மைக்காலமாக அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அடிக்கடி வந்து போகும் விடயமும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அரசிற்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் முறிவடைந்து யுத்தம் வெடித்தால் அமெரிக்கப் படை பாதுகாப்புப் படைகளுக்கு உதவலாமென்ற ஊகங்களும் வெளிப்படுத்தப் படுகின்றன.

பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளை அமெரிக்கா சேர்த்திருப்பது ஊகத்தை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க தனது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரதமர் இந்தியாவுக்கு அவ்வப்போது அறிவித்து வருகிறார். அத்துடன் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கு திருமலை எண்ணெய்க்குதத்தை விடுவதற்கான உடன்படிக்கையும் கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்மூலம் திருமலையில் எண்ணெய்க் குதங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொள்ள முடியும். இதன்மூலம் இந்தியப் படைகளின் பிரசன்னத்திற்கும் இடமளிக்கப்பட்டுள்ளதாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் முறிவடைந்து புலிகள் திருமலை நகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சியெடுத்தால் அதனை இந்தியப் படைகள் மூலம் பலவீனப்படுத்த முடியும் என்று உத்தரவாதம் வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவையும் அமெரிக்காவையும் இந்த நடவடிக்கைகளில் மறைமுகமாக உள்ளீர்ப்பதன் விடுதலைப்புலிகள் தொடர்பாக அரசாங்கம் தனக்கொரு "காப்புறுதி" செய்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேசமயம் இந்தியா மற்றும் அமெரிக்காவின் ஆதரவைப் பலமாகத் திரட்டிக் கொள்ளும் அரசாங்கம் தமக்கு நீதியான தீர்வொன்றை முன் வைக்காதென்ற அச்சம் தமிழ்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. அத்துடன் விடுதலைப்புலிகள் மட்டுமே தமிழ் மக்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்ற வலுவான அபிப்பிராயம் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுவதாக "டெக்கான் ஹெரல்ட்" பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

---

## ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

## வாசகர்களே! விளம்பரதாரர்களே!

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**பரமேஸ்: (416)266 - 9919**

## வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.
(905) 653 - 3000 (416) 266 - 9919

---




## ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம்

**3057 Universal Drive - Mississaugh - Ontario L4X 2E2**
**Tel (905) 602 - 2068 / 629 - 2050 Fax (905) 629 - 4428**

Web site: www.ambaltemple.org

தொடர்புகளுக்கு:
சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

பூசை நேரம்
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

கோவில் திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

**தொலைபேசி:**
(905) 653 - 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
**தொலைநகல்:**
(905) 653 - 4031
**தலைமையகம்:**
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

**பிரதம நிர்வாகி:**
எஸ்.பாலச்சந்திரன்

**பிரதம ஆசிரியர்:**
எஸ்.எஸ்.குகநாதன்

**கனடா பதிப்பு:**
**பிரதம ஆசிரியர்**
T.K.பரமேஸ்வரன்

**சுவிஸ்சர்லாந்து**
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

**ஜேர்மனி**
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

**அவுஸ்திரேலியா**
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

**லண்டன்**
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# ஐ.நா. செயலாளர் கோபிஅனான் யாழ் செல்வார்?

"சில சமயம் ஒன்றாக யாழ்ப்பாணம் போக முடியும்" இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபிஅனான்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் அனானைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை அனான் பாராட்டியுள்ளதுடன் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் டிரோன் பெர்னாண்டோவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தருமாறு அனானுக்கு டிரோன் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை யேற்றுக் கொண்ட போதே நாம் யாழ்ப்பாணத்துக்குப் போகமுடியும் என்று அனான் கூறியதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெலகீசன் அடுத்தவாரம் கொழும்பு வரவுள்ளார்.

தாய்லாந்து பேச்சுக்கான திகதியை முடிவுசெய்தல், புலிகள் மீதான தடைநீக்கம், பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் என்பனவே இவரது விஜயத்தின் போது ஆராயப்படவுள்ள விடயங்களாகும்.

எனினும் கொழும்பு வரும் ஹெலகீசன், வன்னி செல்வாரா என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து சட்டமாஅதிபர் திணைக்களம் இறுதிக்கட்ட ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

தாய்லாந்துப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் தான் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இதேநேரம் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான முதல் சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்தில் பெரும்பாலும் மூன்று நாட்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வடக்கு கிழக்கில் இந்திய எரிபொருள் விற்பனை நிலையங்கள்

## திருமலை குதங்களில் இருந்து எண்ணெய் விநியோகம் செய்யவும் ஏற்பாடு

திருகோணமலையில் குத்தகைக்குப் பெற்றுள்ள எண்ணெய்க் குதங்களில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எரிபொருள் விற்பனை நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்திய எண்ணெய்க்கூட்டுத்தாபனத்தின் இலங்கை முகவர் நிறுவனமான "டேவிட் பீரிஸ் மோட்டேர்ஸ்" நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் பிரிவு முகாமையாளர் சிடத் றொட்றிகோ இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கைச் சந்தையில் தனது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவற்கான முகவராக டேவிற் பீரிஸ் மோட்டேர்ஸ் நிறுவனத்தை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் நியமித்தது. கடந்த ஆறு மாத காலத்துக்கு முன்பு இந்த நியமனம் செய்யப்பட்டது.

சேவோ ரக இயந்திர எண்ணெய்யை இந்திய எண்ணெய்க்கூட்டுத்தாபனம் முதலில் இலங்கையில் சந்தைப்படுத்தியது. பெற்றோல், மண்எண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களை விற்பனை செய்ய திருகோணமலையில் களஞ்சிய வசதியைப் பெற்றுள்ளது.

தமது நிறுவனத்தின் சேவை தொடர்பாக றொட்றிக்கோ மேலும் தெரிவித்ததாவது திருகோணமலையில் உள்ள 103 எண்ணெய்த் தாங்கிகளை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் குத்தகைக்குப் பெற்றுள்ளது.

அவற்றில் 17 தாங்கிகளே உடனடியாகப் பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றில் எரிபொருட்களைக் களஞ்சியப்படுத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்கு புறம்பாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தனது பணியை மேற்கொள்ளும்.

முதலில் வடக்கு கிழக்கில் எரிபொருள் விற்பனை நிலையங்களை நிறுவ உத்தேசித்துள்ளோம். திருகோணமலையில் பழுதடைந்த நிலையில் உள்ள எண்ணெய்க்குதங்கள் திருத்தப்பட்டதும் எமது சேவை விஸ்தரிக்கபபடும் என்றார்.

# கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக துரைரத்தினசிங்கம்!

அமரர் மு.சிவசிதம்பரத்தின் இடத்துக்கு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த துரைரத்தினசிங்கம் தான் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்கப்பட இருக்கிறார். இவரை நியமிப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைமை பச்சைக்கொடி காட்டி விட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச்சபை விரைவில் கூடி முறையாக முடிவெடுத்து துரைரத்தினசிங்கத்தின் நியமனத்தை அறிவிக்கும்.

எந்தச் செய்தியானாலும் அதனை முந்தித்தரும் உங்கள் அபிமான ஈழநாடு கடந்தவாரத் தனது வெளியீட்டில் துரைரத்தினசிங்கமே நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

துரைரத்தினசிங்கம் கடந்த 2002 ஆம் ஆண்டு டிசம்பர் தேர்தலில் தமிழர் கூட்டணி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர். திருமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். தமிழ்கட்சிக் கூட்டமைப்பில் உள்ள காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்அணி) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை பெற முயற்சி செய்தனர். கூட்டமைப்புக்கு தேர்தலில் ஒரேயொரு தேசியப்பட்டியல் எம்.பி. நியமனம் கிடைத்தால் நான்கு கட்சிகளும் தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அந்த நியமனம் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை. கூட்டணிக்குத் தான் என்றாகி விட்டது.

இந்நிலையில் திருமலையில் தமிழ் எம்.பி. இரா.சம்பந்தன் மாத்திரம் தான். ஆகவே தேசியப்பட்டியல் எம்.பி. பதவி திருமலை மாவட்டத்திற்கே கிடைப்பது பொருத்தம் என்று கூட்டணியின் முக்கியஸ்தர்கள் முடிவு செய்தார்கள். இது பற்றி அவர்கள் புலிகளின் தலைமையுடன் கலந்தாலோசனை நடத்தினார்கள். திருமலைக்கு தேசியப்பட்டியல் எம்.பி. பதவி கிடைப்பதை புலிகளின் அரசியல் தலைமை அங்கீகரித்தது.

# வலிகாமம் வடக்கு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி பேரணி! மறியல்!

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து நீண்டகாலமாக இடம் பெயர்ந்து வசிக்கும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி அடுத்த வாரம் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

யாழ்.அரச செயலகத்தை நோக்கி பேரணி ஒன்றை நடத்தவும், வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக மீண்டும் மறியல் செய்யவும், வலி வடக்கு புனர் வாழ்வுக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

வலி. வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த காலங்களில் பல கட்டங்களாக இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் குடாநாட்டின் ஏனைய இடங்களுல் வசித்து வருகின்றன.

இவர்களது சொந்த இருப்பிடங்கள் அழிக்கப்பட்டும் ஆக்கிரமிக்கப் பட்டும் உள்ளன. தங்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கேட்டு இந்த மக்கள் பலமுறை சாத்வீகப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் அரசு அதற்கு செவிசாயக்கவில்லை.

கடைசியாக வலி.வடக்கு மக்கள் கடந்த மாதம் 15ம்திகதி பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போது மீண்டும் போராட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. போராட்டச் செயற்பாடுகள் குறித்து ஆலராயும் கூட்டம் நேற்று ஞாயிறு நடைபெற்றது.


TORONTO - COLOMBO
RETURN TRIP

ONLY
1285.00
(Tax included)

SkyRoute
TRAVEL SERVICES INC.

1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

(Taxes are extra and the fares are subject to change without notice)

416-439-4000

IATA
Reg: 04488805 / 04652780
TICO

# தலைவர் மீது அதிரடி இராணுவ நடவடிக்கை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேதகு பிரபாகரன் அவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை தொடர்பாக இந்திய நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்தியாவில் ஓங்கி ஒலித்து வரும் குரலின் பின்னணியுடன் பின்னிப் பிணைந்துள்ள விதத்திலேயே தற்போதைய அதிரடி நடவடிக்கைக்கான சதித்திட்டம் அமைந்துள்ளது என்று அறியப்படுகின்றது.

ஸ்ரீலங்கா கொமாண்டோக்களுக்கு இந்தியக் கரும்பூனைகள் அளிக்க இருக்கும் பயிற்சி என்ற ரீதியில் வெறுமனே ஒரு சாதாரண செய்தி போலவே இவ்விடயம் தொடர்பான தகவல்கள் பல ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்ற போதிலும் இதன் பின்னணியில் உள்ள பயங்கர சதித்திட்டம். நோக்கம் பற்றி எந்தச் செய்தியானாலும் அதனை முந்தித் தருகின்ற உங்கள் அபிமான ஈழநாடு விபரமான செய்திக் கட்டுரை ஒன்றை இங்கே வெளியிடுகின்ற அதே வேளை சமாதானப் போர்வையில் தமிழீழ விடுதலையை நசுக்க நடைபெற்று வருகின்ற முயற்சிகள் குறித்துத் தமிழ்மக்கள் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும் என்றும் உரிமையுடன் கேட்டுக் கொள்ளுகின்றது.

புதுடில்லியில் உருப்பெற்ற சதிமுயற்சி பற்றிய மேலதிக தகவல்களும் அதற்கான பின்னணியும் பின்வருமாறு.

இம்மாதம் 8ம்திகதி முதல் 12ம்திகதி வரை ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அரசியல் முக்கியத்துவம் இல்லாத நல்லெண்ண விஜயம் தான் இது என்பதை சித்தரிக்கவோ என்னவோ தன் மனைவி மைத்திலி விக்கிரமசிங்கவையும் தன்னுடன் அழைத்துச் சென்றார் ரணில்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்படுகின்ற சிங்களப் பேரினவாதிகளில் பெரும்பாலானோர் அத்தகைய நடவடிக்கைகளில் இறங்க முன்னர் அதற்கான ஆசிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு தரிசனம் வேண்டி தீர்த்த யாத்திரை மேற்கொள்ளும் இடம் ஒன்று இருக்கிறது. அது தான் பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா எழுந் தருளிப் பக்தகோடிகளுக்கு திவவிய தரிசனம் அளிக்கும் புட்டபத்தியாகும்.

ஜயசுக்குறு நடவடிக்கைக்கு முன்னர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் இராணுவத்தளபதி தலுவத்தையும் இவ்வாறே செய்து ஆசி பெற்றனர். ஆனால் இத்தகைய ஆசிகளைப் பெற்ற பின்னரும் ஜயசிக்குறு பரிதாபகரமான தோல்விகளையே தழுவியது. தமிழர் தரப்பில் உள்ள நியாயமும் தர்மமும் போராளிகளின் ஆத்மபலமும் தியாகமுமே ஜயசிக்குறுவை தோல்வி காணச் செய்தது.

ரத்வத்தை பாணியில் சென்று தரிசனம் செய்த ரணில் தம்பதியருக்கும் உடன் சென்ற முக்கியஸ்தர்களுக்கும் வழமை போல் தங்கச் சங்கிலிகள், பதக்கங்கள், மோதிரங்கள் போன்றவற்றை வழங்கி அருள் பாலித்தார் புடடபரத்தி நாதன்.



புதுடில்லி சென்ற ரணில் குழு திருகோணமலை எண்ணெய்க்குதத்தை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம். ஏற்கனவே உள்ள இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்தல். போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இதேவேளை தலைவர் பிரபாகரனைப் பிடித்துக் கொண்டு வர இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று தமிழ்நாடு சட்டசபை மூலம் தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் ரணில் சென்று சந்தித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகள் மேலோட்டமாக நடைபெற்றாலும் மிகப் பாரதூரமான செயற்பாடு ஒன்றிற்கான அடித்தளமும் ரணிலின் இந்திய விஜயத்தின் போது இடப்பட்டது. இச்சதித்திட்டத்தின் பரிமாணங்கள் மிகப் பயங்கரமான அடிப்படைகளைக் கொண்டவையாக உள்ளன.

இதன்படி ஸ்ரீலங்காப் படைத்தரப்பின் விசேட தாக்குதல் அணியினரான அதிரடிப்படைக் கொமாண்டோப் படைப்பிரிவுக்கு இந்தியாவில் விசேட பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. சிங்களப்படைத்தரப்பின் கொமாண்டோ படைப்பிரிவினருக்கும் விசேட தாக்குதல் அணியினருக்கும் வரலாறு பல திருப்பங்களைக் கொண்டது.

சிங்கள பௌத்த பேரினவாத உணர்வுகளின் அப்பட்டமான வடிவமாக விளங்கிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் சிங்களக் கொமாண்டோக்களை உருவாக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகனும் இராணுவ விவகாரங்களில் தன்னை நிபுணர் என்று கருதிக் கொள்பவருமான ரவி ஜயவர்த்தனாவின் நிர்வாகத்தின் கீழ் பொலநறுவை மாவட்டத்தில் உள்ள மின்னேரிய காட்டுப்பகுதியில் 38 ஏக்கர் காணியில் இதற்கான பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது.

க.பொ.த உயர்தரம் படித்த. ஆங்கிலம் தெரிந்த 50 பேர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டார்கள். அத்துடன் ஏற்கனவே இராணுவத்தில் இருந்த சில பொறுக்கியெடுக்கப்பட்ட இடைநிலை அதிகாரிகளும் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பிரித்தானிய விசேட கொமாண்டோ நிறுவனம் ஒன்றில் இருந்து நிபுணர்கள் வந்து பயிற்சி அளித்தனர். கொமாண்டோக்களின் இந்தப் பயிற்சிகள் விரிவடைந்தன. கூடுதல் எண்ணிக்கையில் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நுட்பமான மேலதிக பயிற்சிக்கு இந்தச் சிங்களக் கொமாண்டோக்கள் பாகிஸ்தானுக்கும் இஸ்ரேலுக்கும் அனுப்பப்பட்டனர். நாளடைவில் இந்தப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு கணிசமான படைப்பிரிவு ஒன்றே 53ம் படைப்பிரிவு என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

இதன் உருவாக்கத்திற்கும் பயிற்சிக்கும் அமெரிக்கா பெரும் உதவி வழங்கியதுடன் தொடர்ந்தும் உதவி செய்து வருகின்றது. விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கக்கூடிய "பிரம்மாஸ்திரம்" என்று வர்ணிக்கப்பட்ட இந்த 53ஆம் படைப்பிரிவு ஜயசிக்குறு முதல் அக்கினிஹீலா வரை நடைபெற்ற போர்களில் பலத்த அடி வாங்கியது.

விடுதலைப்புலிகளின் பல்வேறு தந்திரோபாய வியூகங்களினாலும் நேரடிப் போராற்றலினாலும் இந்தக் கொமாண்டோக்கள். விசேட தாக்குதல் அணிகளைக் கொண்ட 53ம் படைப்பிரிவு துவம்சம் செய்யப்பட்டு சின்னாபின்னமாகியது.

அதிரடி நடவடிக்கைகளுக்கான பயிற்சி பெற்ற 53ம் படைப்பிரிவை வெறுமனே சிப்பாய்களாகக் களத்தில் இறக்குவது தகுந்த நடவடிக்கை அல்ல என்று இதன் அன்றைய மேலதிகாரி பிரிகேடியர் காமினி ஹெட்டியாராய்ச்சி அமைச்சர் ரத்வத்தையிடம் ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனை நிராகரித்த ரத்வத்தை ஹெட்டியாராய்ச்சியையும் கட்டாய விடுமுறையில் அனுப்பி வைத்தார்.

1983 கப்டனாக இருந்து இந்தக் கொமாண்டோ பிரிவுடன் இணைந்து கொண்ட காமினி ஹெட்டியாராய்ச்சி தொடர்ந்தும் அப்படைப்பிரிவில் செயலாற்றினார்.

ரத்வத்தையின் தவறான கொள்கையினால் சிறந்த படைப்பிரிவான 53ம் படைப்பிரிவு சீர்குலைந்து போவதைத் தடுக்கவே ஹெட்டியாராய்ச்சி ஆட்சேபனை தெரிவித்தார். அதனால் ஓரம் கட்டப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்ததும் காமினி ஹெட்டியாராய்ச்சிக்கு மேஜர் ஜெனரல் பதவி உயர்வு வழங்கி மீண்டும் 53ம் படைப்பிரிவில் பொறுப்பதிகாரியாக நியமித்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மகனும் தன் மைத்துனருமான ரவி ஜயவர்த்தனாவைப் பாதுகாப்பு விவகார ஆலோசகராக நியமித்தார்.

ஜே.ஆர். மறைவுக்குப் பின் பிரேமதாசாவினால் ஓரங்கட்டப்பட்டிருந்த ரவி ஜெயவர்த்தனா சுமார் 12வருட கால இடைவேளைக்குப் பின் மீண்டும் பாதுகாப்புக் கடிவாளத்தைக் கையில் ஏந்திக் கொண்டார்.

இதேவேளை சந்திரிகாவும் மாமன் ரத்வத்தையும் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளின் மூலம் சிங்களப்படைத்தரப்பினால் விடுதலைப்புலிகளைப் போர்க்களத்தில் வெற்றி கொள்ள முடியாது என்பது புலனாகியது. ஜயசிக்குறு தோல்வி முதல் அக்கினி ஹீலா படுதோல்வி வரை இந்த உண்மை நன்கு வெளியாகின.ஆனால் கபடத்தனமாக ஆழ ஊடுருவல் குழுக்கள் மூலம் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நடவடிக்கைகள் மேற்கொண்ட சிங்களப்படைத்தரப்பு மூத்த தளபதியான கேணல் சங்கர். கடற்புலி பிரதித்தளபதி லெப்.கேணல் கங்கைஅமரன். கிழக்கு மாகாண உளவுப்பிரிவு பொறுப்பாளர் மேஜர் நிசாம் போன்ற விடுதலைப்புலி முக்கியஸ்தர்களைக் கொலை செய்தது.

அத்துடன் தமிழ்ச்செல்வன் பால்ராஜ். ஜெயம். கருணா. கரிகாலன் போன்ற மூத்த தளபதிகள் கபடத்தனமான கண்ணிவெடித் தாக்குதல்களில் மயிரிழையில் தப்பினர். இந்தப் பின்னணியில் சிங்களப்படைத்தரப்பு நேரடிப் போர் நடவடிக்கைகளை விட இத்தகைய ஊடுருவும் தாக்குதல்களை மேற்கொள்வதே சிறந்ததென்ற முடிவுக்கு வந்துள்ளது.

இது இவ்விதமிருக்க (7ம் பக்கம் பார்க்க)



# அரசியல் பணிகளை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தீவகத்திற்குள் பிரவேசம்!

# அல்லைப்பிட்டியில் மக்கள் திரண்டு நின்று மகத்தான வரவேற்பு!!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுப்பகுதியில் அரசியல் பணிகளை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் இயக்கப்போராளிகள் அனுமதிக்கும் விவகாரத்தில் இரு தரப்புக்கும் இடையில் புதிதாக இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் போராளிகள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை காலை தீவகம் செல்கின்றது. அங்கு அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்க மக்கள் தயாராகி வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு அமைய குடா நாட்டில் தங்கள் அரசியல் பணிகளை ஆரம்பிக்க வந்த விடுதலைப்புலிப் போராளிகள் தீவுப் பகுதிக்குச் செல்ல அங்குள்ள கடற்படையினர் அனுமதி மறுத்ததையடுத்து. இந்த விவகாரம் சிக்கலான ஒரு கட்டத்தை எட்டியிருந்தது.

தீவுப்பகுதிக்குச் சென்ற போராளிகளை அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து கடற்படையினர் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். போராளிகளை வரவேற்பதற்காகப் பொதுமக்கள் அங்கு திரள்வதையும் படையினர் தடுத்து விட்டனர்.

தீவுக்கூட்டங்களை அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்று வடபிராந்தியக் கடற்படைத்தளபதி அறிவித்த அந்தப் பகுதிக்குள் புலிகள் பிரவேசிப்பதாயின் அவர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் என்ற பெயரில் பன்னிரெண்டு நிபந்தனைகளை கடற்படையினர் கண்காணிப்புக் குழு ஊடாகப் புலிகளுக்கு வழங்கியிருந்தனர்.

நிபந்தனைகள் விதித்ததன் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை படையினர் மீறியதாகப் புலிகள் குற்றஞ் சுமத்தினர்.

இதனால் நெருக்கடி நிலைமை உருவானது. தீவக நிலைமை தொடர்பாக இரு தரப்புக்களுக்கும் இடையே மீண்டும் ஓர் இணக்கத்தை ஏற்படுத்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு முயன்று வந்தது. இது விடயத்தில் தற்போது இரு தரப்புகளும் ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளதாகக் கண்காணிப்புக்குழு கூறுகின்றது.

கடற்படையினர் விதித்த நிபந்தனைகளுக்குப் பதிலாக மாற்று யோசனை ஒன்றைக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் முன்வைத்து அதற்கு அரசு புலிகள் கடற்படை ஆகிய முத்தரப்புக்களினதும் இணக்கத்தைப் பெற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த இணக்கத்தின் அடிப் படையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இன்று தீவுப் பகுதிக்குள் பிரவேசிக்கவுள்ளனர் என்று கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகப் பிரதித்தலைவர் ஹோஹான் பக்லண்ட் தெரிவித் தார்.

கண்காணிப்புக்குழுவின் மாற்று யோசனைகள், புதிய நிபந்தனைகள் தொடர்பான விபரங்களை வெளியிட கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் மறுத்து விட்டனர்

## படைமுகாம்களைப் பலப்படுத்தும் ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர்

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் முகாமிட்டுள்ள ஸ்ரீ லங்கா பாதுகாப்புப்படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

சரசாலை, கனகன்புளியடிச்சந்தி, வண்ணாத்திப்பாலம் போன்ற பகுதிகளில் காவலரண்கள் அமைத்தும் முட்கம்பிச் சுருள்கள் போடப்பட்டு பலப்படுத்தப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இதேபோல அரியாலை பொன்னம்பலம் வீதியில் உள்ள சில வீடுகளில் படையினர் நிலைகொண்டு முகாம் அமைத்துள்ளதுடன் முள்ளிப்பகுதியில் புல்டோசர்களைப் பயன்படுத்தி அரண்கள் அமைப்பதாகவும் ஆனந்தன் வடலி வீதி, நெடுங்குளம் பகுதியில் மீண்டும் வீதித்தடைகள் போட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் மீனவர்களுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தின் எதிரொலியாக மீனவர்கள் தொண்டமானாறு - இன்பருட்டி வீதிக்குக் குறுக்கே வீதித்தடை போட்டு மறியற் போராட்டத்தில் குதித்தனர்.

இந்த விடயத்தைக் கேள்வியுற்று 542 ஆவது படையணி அதிகாரி அங்கு வந்து மீனவரின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். மீனவரின் கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டதை யடுத்து வீதித்தடைகள் அகற்றப்பட்டன செய்திகள் தெரிவிக்கின்றன.

# சயனைட் அணிந்து செல்ல தடையில்லை

## தொலைத்தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கும் இராணுவம்

தீவுப்பகுதிக்குள் செல்லும் விடுதலைப்புலிப் போராளிகள் தங்களோடு தொலைத்தொடர்புக் கருவிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். புலிகள் பன்படுத்துவதற்கான தொலைத்தொடர்பு வசதிகளை படையினரே அங்கு வழங்குவர்.

தகவலறிந்த வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. போராளிகள் தங்களோடு சயனைட் வில்லைகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கடற்படையினர் முன்னர் நிபந்தனை விதித்திருந்தனர். ஆனால் புதிய இணக்கப்பாட்டின்படி புலிகள் சயனைட் வில்லைகளை அணிந்து வருவதைப் படையினர் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்திற்குள் பிரவேசித்துள்ள போராளிகளோடு கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவரும் உடன் சென்றுள்ளார். தீவகத்தில் பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் அங்கு அலுவலகம் அமைத்துச் செயற்படுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு அல்லைப்பிட்டியில் போராளிகளுக்கு பொதுமக்களால் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது. இதனையடுத்து வேலணை துறையூரில் பிற்பகல் மூன்று மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

1990 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் தீவகத்தில் உயிரிழந்த போராளிகளின் புகழுடல்கள் விதைக்கப்பட்ட சாட்டிப் பகுதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். பொதுமக்கள் பலரும் அங்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

# இந்தியாவின் ஜனாதிபதியாக தமிழ் விஞ்ஞானி அப்துல்கலாம்

இந்திய குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி) பதவிக்காக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டின் அணுவிஞ்ஞானி அப்துல்கலாமை ஆதரிப்பதாக முக்கிய எதிர்கட்சியான காங்கிரஸ் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இந்தியக் குடியரசுத் தலைவராக விஞ்ஞானி அப்துல்கலாம் தெரிவாவது நிச்சயமாகி விட்டது.

அப்துல்கலாமை எதிர்ப்பதாக அறிவித்திருந்த இடதுசாரிகள் லட்சுமி என்னும் சுதந்திரப் போராட்டவீராங்கணையை தமது வேட்பாளராக அறிவித்துள்ளது.

இந்நிலையில் டில்லியில் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்த செய்தியாளர்களிடம் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயப்பால் ரெட்டி காங்கிரஸின் இம்முடிவை அறிவித்தார். காங்கிரசின் இந்த முடிவை மார்க்சிஸ்ட் தலைவர் சுர்ஜித்துக்கு கட்டி மூத்த தலைவர்கள் நட்வர்சிங், மன்மோகன்சிங் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் துணைத்தலைவர் பதவி தொடர்பாக ஆளும் கட்சியுடன் சமரசம் ஏற்படுத்திக் கொண்டதால் தான் அப்துல்கலாமை ஆதரிக்க காங்கிரஸ் முடிவு செய்ததா? என்ற செய்தியாளர்களின் கருத்தை ஜெயப்பால் ரெட்டி நிராகரித்தார்.

குடியரசுத் தேர்தல் வேறு, துணைத்தலைவர் தேர்தல் வேறு இரண்டுத் தனித்தனி விடயங்கள் என்றார் அவர்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தினால் தோலவியடைந்து விடுவீர்கள் என்ற நிலையில் அப்துல் கலாமை ஆதரிக்கின்றீர்களா? என்ற செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த ஜெயப்பால், தோல்வியைப் பற்றி நாங்கள் எண்ணவிலலை. தோல்வியைக் கண்டு அஞ்சுவதும் இல்லை. தோல்வி என்பது எங்கள் முடிவை தீர்மானிக்காது என்றார் அவர்.

வாஜ்பாயை சோனியாகாந்தி சந்தித்த போது அப்துல்கலாமை நிறுத்துவது குறித்து தெரிவித்தாரே தவிர ஆலோசனை ஏதும் நடக்கவில்லை. ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் முறையல்ல இது என்றும் ஜெயப்பால் சாடினார்.

விஞ்ஞானி அப்துல் கலாமை தேசிய முன்னணி குடியரசுத் தலைவருக்கு வேட்பாளராக நியமித்ததை தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி, அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

### விமானி ராஜீவ் இந்தியாவின் பிரதமராகும் போது விஞ்ஞானி கலாம் குடியரசுத் தலைவராகக் கூடாதா?

இதேவேளை விஞ்ஞானி அப்துல் கலாமை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டதற்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததற்கு மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு கண்டனம் தெரிவித்தார்.

விமானி ராஜீவ் பிரதமராகும் போது விஞ்ஞானி குடியரசுத் தலைவராகக் கூடாதா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மட்டக்களப்பில் படையினர் தங்கியுள்ள கோவில்கள், பாடசாலைகள் விபரம்:

## ஜோசப் எம்.பி.யிடம் பிரதமர் கோருகின்றார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நிலைகொண்டுள்ள கோயில்கள், பாடசாலைகள் பொதுக்கட்டிடங்கள் தொடர்பான விபரங்களை பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மட்டக்களப்ப மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

இது தொடர்பான விரிவான விபரங்களை உடனடியாக ஜோசப் பரராஜசிங்கம் பிரதமருக்கு அனுப்பி வைத்தார். இந்த விபரப்பட்டியலின் பிரகாரம் மாவட்டத்தில் தற்போது கொம்மாந்துறை ஸ்ரீதேவி ஆலயம், கொம்மாந்துறை ஸ்ரீசக்தி விநாயகர் ஆலயம், குருமண்வெளி ஸ்ரீசக்தி விநாயகர் ஆலயம், குருமண்வெளி பேச்சியம்மன் கோவில், குருமன்வெளி மாரியம்மன் கோவில், மாமாங்கப் பிள்ளையார் கோவில், புதூர் சித்திவிநாயகர் கோவில் என ஏழு ஆலயங்களில் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினர், விமானப்படையினர் முகாமிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் வாலிபச்சங்கக் கட்டிடத்திலும் இராணுவத்தினர் தொடர்ந்து முகாமிட்டுள்ளனர்.

இதேநேரம் பிள்ளையாரடி அரச தமிழ்க்கலவன் பாடசாலை (இராணுவம்) மொரக்கொட்டாஞ் சேனை வித்தியாலயம் (இராணுவம்) பெரியகல்லாறு மெதடிஸ் மிசன் அரச தமிழ்க்கலவன் பாடசாலை (பொலிஸ்) மண்டூர் 13வது கொலனி பாடசாலை (எஸ்.ரி.எப்) புதூர் சித்திவிநாயகர் வித்தியாலயம் (விமானப்படை) கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயம் (இராணுவம்) செட்டிபாளையம் மகா வித்தியாலயம் மகாவித்தியாலயம் (எஸ்.ரி.எப்) என எட்டுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் படையினர் முகாமிட்டுள்ளனர். இதேவேளை மட்டக்களப்பு நகரசபைக் கட்டிடம், நகர மண்டபம் உட்பட பல கட்டிடங்களில் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

# பொ.ஜ.மு. குழு யாழ் செல்லும்

சமாதான முன்னெடுப்புக்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல என்பதைத் தமிழ்மக்களுக்கு நேரடியாக எடுத்துக் கூறவுள்ளோம். அதற்காக விரைவில் நானும் எமது கட்சியின் சில முக்கியஸ்தர்களும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளோம். இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொ.ஜ.முன்னணி நாட்டில் சமாதானம் ஏற்படுவதையே விரும்புகின்றது. கடந்த காலங்களிலும் நாம் சமாதானத்தையே வலியுறுத்தி வந்துள்ளோம். யாழ்ப்பாணத்திலுள்ள பலர் வரும்படி அழைப்பு விடுத்துள்ளனர் என தெரிவித்தார்.

# இந்தியாவின் நிலைப்பாட்டை உணர்த்திய பிரதமரின் விஜயம்



இலங்கையின் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளைப் பொறுத்தவரையில் பிராந்திய வல்லரசாகவுள்ள இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது இப்போது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்தியாவிலிருந்து சமாதான முயற்சிகளுக்குக் குறுக்கீடுகள் எதுவும் வராது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருப்பதுடன் சமாதானப் பேச்சுக்களையடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான பச்சைக்கொடியும் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முதலாவது எதிரியாகக் குறிப்பிடப்படும் விடுதலைப்புலிகள் அமைப்புன் தலைவர் பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என இந்தியா முன்வைத்த கோரிக்கையே பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கான பிரதான தடைக்கல்லாக இருக்கும் எனக் கருதப்பட்டது.

1995 ஆம் ஆண்டில் இந்தக் கோரிக்கையை இந்தியா முன்வைத்தது. இருந்த போதிலும் இந்திய அரசு இக் கோரிக்கையை வலியுறுத்த விரும்பவில்லை. சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கும் என்பதும், நடைமுறைச் சாத்துயமற்றது என்பதும் இதற்குக் காரணம். இருந்த போதிலும் ஏப்ரல் 10ம்திகதி பிரபாகரன் வன்னியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை தமிழக முதல்வர் ஜெயலலிதா முன் வைத்தது இந்திய மத்திய அரசுக்கு ஒரு சங்கடமான நிலையை உருவாக்கியது.

பிரபாகரனை இலங்கை அரசு நாடு கடத்த வேண்டும். அல்லது இந்தியா படைகளை அனுப்பி பிரபாகரனை கைது செய்து கொண்டு வர வேண்டும் என தமிழக சட்டபேரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கும் ஜெயலலிதா காரணமாக இருந்தார்.

அயல்நாடு ஒன்று இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் இலங்கை அரசுக்குள்ள சங்கடமான நிலை புரிந்து கொள்ளக்கூடியது தான்.

இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய சக்தியைக் கொண்டுள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை அரசு விரும்பவில்லை.

நோர்வேயின் அனுசரணை தொடர்பாக ஏற்கனவே சந்தேகங்கள் இருந்தது. அத்துடன் இந்தியாவில் காங்கிரஸ் கட்சியே அடுத்ததாக ஆட்சி அமைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் அதன் சம்மதத்தையும் பெறவேண்டிய தேவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது. இவை அனைத்தையும் கருத்திற்கொண்ட பிரதமர் ரணிலின் இந்திய விஜயம் திட்டமிடப் பட்டது.

இருதரப்பு வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துதல் பொருளாதார உறவுகளை மேம்படுத்துதல் என்பன பிரதமரின் விஜயத்தின் போது கவனத்திற்கொள்ளப்பட்டாலும் கூட இன நெருக்கடிக்கான தீர்வு முயற்சிகள் பற்றிய பேச்சுக்களே பிரதமரின் இந்திய விஜயத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. வர்த்தக பொருளாதார உறவுகளைப் பலப் படுத்துவதன் மூலம் அரசியல் ரீதியான உறவுகளை இறுக்கமாக்கிக் கொள்வது தான் இலங்கையின் உபாயமாக இருந்துள்ளது. "சீனாவுக்கு ஹொங்கொங் எப்படியோ இந்தியாவுக்கு இலங்கை" என்ற அமைச்சர் மிலிந்த மொரகொடவின் உபாயம் பெருமளவுக்கு பலனளித்துள்ளதாகவே கருதப்படுகின்றது.

பிரபாகரன் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியையும் தமிழக முதல்வரையும் அவர்கள் கடும் நிலைப்பாட்டைக் கைவிட்டு இறங்கி வருவதற்கு பிரதமரின் விஜயம் உதவியிருக்கிறது.

சோனியாகாந்தியோ ஜெயலலிதாவோ பிரபாகரன் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமருடனான பேச்சுவார்த்தைகளின் போது வலியுறுத்தவில்லை. அதேவேளையில் சமாதான முயற்சிக்கான ஆதரவையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இது சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான பச்சைக்கொடியாகவே கருதப்படுகின்றது.

அதேவேளையில் வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகசபை விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதையும் இந்தியா எதிர்க்காது எனத் தெரிகின்றது. இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக இந்தியா கருத்து எதனையும் தெரிவிக்காத போதிலும் இடைக்கால நிர்வாகசபை விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படுவதன் மூலமே சமாதான முயற்சிகளை சுமூகமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என இந்தியா கருதுவதாகலும் தெரிகின்றது.

புதுடில்லியில் இரண்டு நாட்டு இராஜதந்திரிகளும் இந்தக் கருத்தைத் தான் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதே வேளையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுவதையிட்டு இந்தியா ஆட்சேபனை தெரிவிக்காது என்பதையும் ரணில்விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கைப் பிரச்சனையில் அது மூன்றம்சக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஒன்று சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளில் அனுசரணையாளராகவோ மத்தியஸ்தராகவோ பங்கு கொள்வதில்லை. இரண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முழுமையான ஆதரவு. மூன்று பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை வலியுறுத்தப் போவதில்லை. அதற்காக அந்தக் கோரிக்கையை இந்தியா ஒரேயடியாகக் கைவிட்டு விடவும் போவதில்லை.

அதேவேளையில் 1980களில் தமிழர்களுக்கு ஆதரவாக மட்டும் குரல் கொடுத்த இந்தியா தனது தொனியை இப்போது மாற்றிக் கொண்டுள்ளது. சிங்களப் பெரும்பான்மையினரைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதிலும் இந்தியா கவனமாகவுள்ளது. இலங்கையின் அனைத்துச் சமூகங்களினதும் நியாயமான அபிலாசைகளைப்



பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என இருநாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




"பிரபாகரன் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியையும் தமிழக முதல்வரையும் கடும் நிலைப் பாட்டைக் கைவிட்டு இறங்கி வருவதற்கு பிரதமரின் விஜயம் உதவியிருக்கிறது"

இலங்கையில் பாதிக்கப்படும் ஒரு இனத்துடன் சார்ந்து தன்னை அடையாளப் படுத்திக் கொள்ள இந்தியா விரும்பவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.


OPTOMETRIST

கண் பரிசோதனை நிபுணர்

டாக்டர் யாழினி கருணாநிதி O.D



கனேடியப் பட்டதாரி.,
கனடாவிலும் அமெரிக்காவிலும்
பயிற்சி பெற்று அனுபவம் உள்ளவர்.

உங்கள் கண்களை முழுமையாகப்
பரிசோதித்து தகுந்த கண்ணாடிகளை,
அல்லது விழி வில்லைகளைப்
( Contact Lens ) பெற்றுக்கொள்ளலாம்.

கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு
தகுந்த சிகிச்சை வழங்கப்படும்.
அல்லது தகுந்த சிகிச்சைக்கு
அனுப்பிவைக்கப்படும்.

OHIP, மற்றும்
பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.




DON MILLS - SCARBROUGH இரண்டு இடங்களில் CLINIC நடைபெறுகிறது.




Gateway Corporate Center
10 Gateway Blvd, # 130,
North York. On. M3C 3A1

OPTOMETRIST
5200 Finch East, Suite - 112 A
Scarborough. On, M1S 4Z4.




OHIP and Private Insurance accepted - Evening and weekend appointments available.

Tel : (416) 429-2548

Tel : (416) 298-9674

# சிங்களக் கொமாண்டோக்களுக்கு இந்தியக் கறுப்புப்பூனைகள் விசேட பயிற்சி!

# மேற்பார்வையாளராக ஜே.ஆர் மகன் ரவி ஜயவர்த்தனா

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்விதமிருக்க தமிழீழ விடுதலைக்கு எதிரான தீயசக்திகள் சிலவற்றின் தூரண்டுதலினால் இந்தியாவில் சமீப காலத்தில் ஒரு பலமான நச்சுக் கருத்துப் பரப்பப்பட்டு வருகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவரான மேதகு பிரபாகரனைச் சிங்கள இராணுவத்தினர் பிடித்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது இந்திய இராணுவம் அங்கு சென்று பிரபாகரனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கொண்டு வரவேண்டும் என்பதே இந்த நச்சுத்தன்மை வாய்ந்த கூப்பாடு ஆகும்.

காங்கிரஸ் முதல் அ.தி.மு.க வரை பல கட்சிகளால் முன்வைக்கப்படும் இக்கோரிக்கைக்குப் பார்ப்பன சக்திகளின் முழுமையான ஆதரவு இருந்து வருகின்ற வேளையில் திராவிடக்கட்சிகளில் முதன்மை வாய்ந்தது என்று கருதப்படும் தி.மு.க நடுநிலை வகித்தது. ஜெயலலிதாவின் முன்முயற்சியால் இத்தகைய தீர்மானம் ஒன்று தமிழ்நாடு சட்டசபையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ந்தப் பின்னணியில் தலைவர் பிரபாகரன் அவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து இந்திய நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை இந்திய அரசியல் போக்கில் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் அந்தரங்க சுத்தியுடன் சமாதானமுயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை அவரைப் பிடிக்கும் முயற்சியில் இந்திய வல்லாதிக்கவாதிகள் இறங்கியுள்ளனர்.

இதேவேளை சமாதானத்துக்கான தேடலில் ஆர்வமாக இறங்கிவிட்டுப் பின்னர் சிங்களப் பேரினவாதத்துக்குப் பயந்து தயக்கம் காட்டி வருகின்ற பிரதமர் ரணிலும் தன் நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ள முன் வந்தார். இதன் விளைவாக பாதுகாப்பு ஆலோசகர் ரவிஜயவர்த்தன. அதிரடிப்படைப் பிரிவுக் கொமாண்டர் காமினி ஹெட்டியாராய்ச்சி ஆகியோருடன் சதிப்பின்னல் நெய்யப்பட்டது.

இதேவேளை அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்ட புதுடில்லிக்கும் தலைவர் பிரபாகரன் விடயத்திலும் ஒரு சங்கடம் நிலவியது. இந்தியப்படையினர் தலைவர் பிரபாகரனைப் பிடிக்கும் நோக்கத்துடன் வன்னிப் பகுதியில் திடீர் தாக்குதல் மேற்கொள்வதில் உள்ள சிக்கல்களே இச்சங்கடத்துக்குக் காரணம்.

இன்று விடுதலைப்புலிகள் தரப்பின் போராற்லைக் கொண்டும் தலைவர் பிரபாகரனது பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டும் நோக்குகையில் இத்தகைய விஷப்பரீட்சையில் இந்தியா இறங்கினால் பல்லாயிரம் இராணுவத்தினரைக் காவு கொடுத்தே தீரவேண்டும் என்பது தெட்டத்தெளிவாக விடயம்.

தலைவர் பிரபாகரனைப் பிடிக்க முடியுமானால் பயங்கரமான அழிவுகளைச் சந்திக்க இந்தியப்படை தயாராகவே இருக்கும். ஆனால் பாரிய இழப்புக்களைச் சந்தித்தும் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க முடியாது போனால் இந்தியாவின் நிலைமை மிகவும் சிக்கலாகிவிடும். அத்துடன் தமிழகமும் பொங்கியெழுந்து விடும். இத்தகைய விஷப் பரீட்சைக்கு உத்தரவு வழங்கிய அரசாங்கம் ஏற்படும் அரசியல் விளைவுகளால் ஆட்டம் கண்டு விடும்.

இந்நிலையில் இந்தியத்தரப்புக்கும் சிங்களத் தரப்புக்கும் ஒருபுதிய அடிப்படையில் கூட்டுறவுக்கான சந்தர்ப்பம் தோன்றியது. சிங்களப்படைத்தரப்புக்கு தலைவர் பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடிய அளவிற்கு ஆக்கமும் ஊக்கமும் தரக்கூடிய விசேட பயிற்சி அளிப்பது என்பதே அதுவாகும்.

அரசியல் காரணிகளாலும் இராணுவப் பிரச்சனைகளாலும் நேரடி நடவடிக்கை எதிலும் ஈடுபட முடியாத இந்தியத் தரப்பும் நேரடிப் போர் நடவடிக்கைகளால் விடுதலைப்புலிகளை வெல்ல முடியாது ஊடுருவல் குழுக்கள் போன்ற கபடத்தனமான செயற்பாடுகளில் மாத்திரமே ஈடுபட முடியும் என்ற நிலைக்கு வந்துவிட்ட சிங்களத்தரப்பும் தற்போது இவ்விடயத்தில் கை கோர்த்துலாவத் தொடங்கியுள்ளன.

சிங்கள விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களுக்கு தீவிரமாக விசேட பயிற்சியை கரும்பூனை என்று அழைக்கப்படும் இந்தியக் கொமாண்டோக்களின் பயிற்சி வழங்கபடும். இத்தகைய பயிற்சி பெற்ற சிங்களத தரப்பு இந்திய ஆலோசனையுடனும் மறைமுகமான பக்கபலத்துடனும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

இதில் மிக முக்கியமாக இருக்கின்ற குறிக்கோள் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பது தான். விசேட பயிற்சியுடனும் ஒத்தாசையுடனும் சிங்களப்படைத்தரப்பு இதைச் செய்து முடிக்கும் என்று இந்தியத்தரப்பு நம்புகின்றது. ஊடுருவல் குழுக்களின் வரையறுக்கப்பட்ட கடந்தகால வெற்றிகள் இந்த எண்ணத்தைப் பலப்படுத்துகின்றன.

அவ்வாறு சிங்களத்தரப்பு வெற்றிகரமாக நடவடிக்கையை மேற்கொண்டால் (பகல் கனவு) அந்த வெற்றியில் பங்கு கொள்ள இந்திய தரப்பு முன்வரலாம். ஆனால் படு தோல்வியடைந்தால் (யதார்த்த நிலைமை) தனக்குச் சம்பந்தம் இல்லாததுபோல் ஒதுங்கிவிடும். சிங்களப்படைத்தரப்பைப் பொறுத்தவரை நேரடிப் போரில் வெற்றி கொள்ள முடியாது என்பதை நன்குணர்ந்துள்ளது. இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் மூலம் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க முடிந்தால் அதையடுத்து விடுதலைப்புலிகள் பலவீனமடைவர் எனத் தப்புக் கணக்குப் போட்டுள்ளது.

தலைவர் பிரபாகரன் பற்றிய பிரஸ்தாபம் எதுவும் பத்திரிகைச் செய்திகளில் காணப் படாத போதிலும் "ஸ்பெஷல் ஏமன்சில்" எனப்படும் விசேட தாக்குதல்களுக்குக் கரும்பூனைகள் பயிற்சி அளிப்பார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது. தற்போதைய பின்னணியில் இத்தகைய விசேட தாக்குதல்கள் என்னவாக இருக்கும் என்பதை அனுமானிப்பது வெகு சுலபமானது.

எனவே முன்னர் சந்திரிகா போல் நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்சியளித்த ரணில் விக்கிரமசிங்கவும் பல்வேறு காரணிகளால் சிங்களப் பேரினவாத சொரூபத்தைக் காட்டத் தொடங்கியுள்ளார். சமாதானம் பேசிக் கொண்டே சதித்திட்டங்கள் வகுக்க ஆரம்பித்து விட்டார். "பாரதி பாடியது போல் "ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்னே வாராது போல் வந்த மாமணியான" எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரனைக் குறிவைக்கும் சதித்திட்டம் தோல்வியில் முடியப் போகும் விஷப்பரீட்சையே. ஆனால் இதன் பின் விளைவுகள் மிகப் பாரதூரமானதாக இருக்கும் என்பது உறுதி.

# எம்.பி. நியமனம் தொடர்பாக தமிழ்க்கூட்டமைப்பு புலிகளிடம் காவடி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிளிநொச்சிக்கு "காவடி" எடுக்கவும் முனைந்துள்ளனர். தமிழர் கூட்டணியைப் பொறுத்தவரை தமது தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடம் என்பதால் தமது கட்சி உறுப்பினர் ஒருவரையே நியமிக்க வேண்டும் என்று அக்கட்சி வற்புறுத்தி வருகின்றது.

ஆயினும் இந்த வெற்றிடத்துக்கு கூட்டணி சார்பில் யாரை நியமிப்பது என்பது பற்றி அக்கட்சிக்குள் கடுமையான இழுபறி நிலைமை உள்ளது. சென்ற பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த திரு துரைரத்தினசிங்கம் என்பவரை நியமிக்க வேண்டும் என்று கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் வலியுறுத்தி வருகிறார்.

மூதூர் பகுதியைச் சேர்ந்தவரும் திருகோணமலை நகரத்தில் உள்ளூராட்சி சேவை ஊழியராகக் கடமையாற்றியவருமான திரு துரைரத்தினசிங்கம் சென்ற பொதுத்தேர்தலில் கூட்டமைப்பு திருமலை மாவட்டத்தில் பெற்ற அமோக வெற்றிக்கு சூத்திரதாரியாக இருந்தவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சுமூகமான உறவை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த இவர் தமிழர் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கும் இன்றியமையாத பங்கு வகித்தவர். விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் இவரை நியமிப்பதே விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் இவரை நியமிப்பதே விடுதலைப்புலிகளுக்கு விருப்பமான விடயம் என்று சம்பந்தர் தெரிவித்து வருகிறார். அத்துடன் சிங்களக் குடியேற்றத்தின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள திருகோணமலை மாவட்டத்திற்கு கூடுதல் தமிழர் பிரதிநிதித்துவம் தேவை என்றும் வாதிட்டு வருகிறார்.

ஆனால் யாழ்.மாவட்ட எம்.பியும் பதில் சிரேஷ்ட தலைவருமான ஆனந்தசங்கரி முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவரும் பழம்பெரும் தமிழரசுத் தொண்டருமான திரு முத்துலிங்கத்தை சிவசிதம்பரத்தின் இடத்துக்கு நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

இது இவ்விதமிருக்க சிவாவின் மறைவுக்குப் பின் இறுதி அஞ்சலியில் கலந்து கொள்ள லண்டனில் இருந்து சென்ற திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தை நியமிக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட எம்.பி.யும் இளைஞர் அணித் தலைவருமான மாவை.சேனாதிராசா பரிந்துரை செய்து வருகிறார்.

மறைந்த கூட்டணிச் செயலாளர் நாயகமும் தமிழினத் தலைவருமான திரு அமிர்தலிங்கத்தின் பாரியாரான இவர் தனது பேச்சுத் திறனாலும் பாட்டுத் திறமையாலும் தமிழமக்கள் மத்தியில் வசீகர ஆளுமை பெற்றிருந்தவர். அமரர் அமிரின் மறைவுக்குப் பின் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்தில் இருந்த போதிலும் அமரர் சிவாவின் மறைவையொட்டி இலங்கை சென்ற இவருக்கு தமிழ்மக்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பலத்த வரவேற்புக் கிடைத்ததால் திருமதி மங்கையற்கரசியே நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலம் பெற்றுள்ளது. திரு மாவை.சேனாதிராசாவுடன் யாழ்.மாநகரசபைத் தலைவர் செல்லன் கந்தையா. மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முகுந்தன். அரவிந்தன். சண்முகம் போன்றோரும் திருமதி மங்கையர்க்கரசிக்கு ஆதரவாக உள்ளனர்.

ஆனால் தமக்கிடையில் எம்.பி. நியமனம் குறித்த வேற்றுமைப்பட்டுள்ள கூட்டணி சிரேஷ்டர்களான ஆனந்தசங்கரியும் சம்பந்தரும் திருமதி மங்கையர்க்கரசியை எதிர்ப்பதில் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றனர். இதற்கு மட்டக்களப்பு எம்.பி. ஜோசப் பரராசசிங்கத்தின் ஆதரவும் உண்டு. யார் எம்.பியாக நியமனம் பெற வேண்டும் என்பதில் ஜோசப் கருத்து எதுவும் தெரிவிக்காத போதிலும் திருமதி மங்கயர்கரசி வரக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறார்.

இதேவேளை சென்ற தேர்தலில் சொற்ப வாக்குகளால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தோல்வியடைந்த கூட்டணியின் பொன். செல்வராசாவும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டு வருகிறார்.

முன்னாள் எம்.பி.யான இவர் மீண்டும் நியமிக்கப்படக்கூடாது என்பதில் திரு பரராசசிங்கம் மறைமுகமாக அழுத்தம் பிரயோகிக்கிறார் என்று மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலனிடம் முறைப்பாடு செய்துள்ளார். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள கூட்டணி எம்.பி.யான திரு சந்திரநேரு அரியநாயகம் அந்த மாவட்டத்தில் இருந்து வேறு தமிழர்கள் எம்.பி.யாக நியமிக்கப்படுவதை விரும்பவில்லையாம். மறைந்த அறப்போர் முன்னணித் தலைவரான அரியநாயகத்தின் மகனான இவர் திருக்கோயிலைச் சேர்ந்தவர். அம்பாறை மாவட்டத்தின் ஏனைய தமிழ்க்கிராமங்களைச் சேர்ந்த தம்பிலுவில். காரைதீவு. அக்கரைப்பற்று. பாண்டிருப்பு. போன்றவற்றைச் சேர்ந்த தமிழ்க்கட்சிக் கிளைகள் மேலதிக எம்.பி. மாவட்டத்திற்கு தேவை என்ற போதிலும் சந்திரநேரு தனது சேவையே போதும் என்று கூறுகிறார். இவரது ஆதரவும் யாருக்கு என்பது இன்னும் தெளிவாகவில்லை.

இது இவ்விதமிருக்க கனடாவில் இருந்து விடுமுறைக்காக சென்ற முன்னாள் மன்னார் பா.உ சூசைதாசனை தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை தோன்றியுள்ளது. முன்னாள் யாழ்.மேயரும். இந்நாள் எம்.பி.யுமான ரவிராஜ் முன்வைக்கின்ற இப் பரிந்துரைக்கு கூட்டணியின் வன்னி மாவட்டக்கிளைகளின் பரிபூரண ஆதரவும் உண்டு. தமிழ்ப் பகுதிகளில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வன்னி மாவட்டத்திலேயே தமிழர் கூட்டணி ஒப்பீட்டளவில் மிகப் பலவீனமாக இருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

பட்டயக்கணக்காளரும் இலக்கியப்புலமையும் நிறைந்த அபார பேச்சாற்றல் கொண்ட. பழகுவதற்கு இனிய. ஜனரஞ்சகமான முன்னாள் எம்.பி. என்ற சிறப்புப் பெற்ற. அதேவேளை கத்தோலிக்க திருச்சபையின் பக்கபலம் கொண்ட திரு சூசைதாசன் நியமிக்கப்படுவது கூட்டணியை வன்னியில் பலப்படுத்தும் என்று கருதப்படுகின்றது.

கனடியப் பிரஜையான சூசைதாசன் இலங்கையின் இணைப்பிரஜையாகவும் இருப்பதால் அவரது நியமனத்தில் பிரச்சனை இருக்காது என்று கூறப்படுகிறது. அத்துடன் தமக்கிடையில் மோதிக் கொண்டிருக்கும் கூட்டணி ஜாம்பவான்கள் தேவை ஏற்பட்டால் சூசைதாசன் விடயத்தில் கருத்தொருமிப்பு (30ம் பக்கம் பார்க்க)

# இந்தியா – பாகிஸ்தான் யுத்தத்தினை சமாதான நிலைமைக்கு கொண்டு வர விஜயம் செய்யும் கனடிய வெளிவிவகார அமைச்சர்

தொழில் வள நாடுகள் என ஜி8 என்னும் அமைப்பின் பேரில் கூட்டு சேர்ந்துள்ள எட்டு நாடுகளான கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளின் சார்பில் கனடிய வெளிவிவகார அமைச்சர் திரு பில் கிரஹாம் அவர்கள் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அபாயகரமாக எழுந்து வரும் யுத்த நிலைமையினை மாற்றி சமாதான முன்னெடுப்பினை வழி நடத்துவதற்காக இம் மாத இறுதியில் இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக அமெரிக்க அதிபர் திரு ஜோர்ஜ் புஷ், அவர்களும் ரஷ்யா அதிபர் திரு விலாடிமிர் புற்றின் அவர்களும் நேரடியாக தொலைபேசியில் கதைத்து ஒருமித்த சில உடன்பாடுகளுக்கு வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தானில் அமெரிக்கா மாநிலங்களின் உதவிச் செயலாளர் திரு ரிச்சார்ட் ஆர்மிற்ரேஜ் பாகிஸ்தான் அதிபர் திரு முஷ்ராப் அவர்களை நேரடியாக சந்தித்து அமெரிக்காவின் சார்பில் சமாதானத்தினை வலியுறுத்தியிருந்ததாகவும் பாகிஸ்தானின் அதிபர் இச்சமாதானத்திற்கு உடன்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா - காஷ்மீர் மாகாணத்தில் அமெரிக்கா சுமார் 250.000 துருப்புக்கள் மற்றும் ஆட்டிலெறி அமைப்புக்களை குவித்து வைத்திருப்பதும், பாகிஸ்தான் இராணுவமும் இந்திய எல்லையில் சுமார் 180.000 துருப்புக்களைக் குவித்து யுத்தத்துக்கு தயாராக வைத்திருந்து சிறுசிறு மோதல்களை நடாத்தி பாரிய யுத்தத்திற்கு தயார் போல உலகுக்கு தெரியப்படுத்திக் கொண்டேயுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கனேடியச் செய்திகள்
### தொகுப்பு:சிவ.பஞ்சலிங்கம்

# நிதிஅமைச்சரின் பதவி நீக்கத்தினால் மக்களின் அதிருப்தியை கடுமையாக எதிர்கொள்ளும் பிரதமர்

ஆட்சியில் இருக்கும் லிபரல் கட்சியினுள் தலைமை பதவிக்கு ஏற்பட்ட மோதலால் நிதிஅமைச்சர் பதவியில் இருந்து, நீண்டகால பழுத்த அனுபவமுள்ள தலைவர்களில் ஒருவரான திரு போல் மார்ட்டின் அவர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பதவி நீக்கத்திற்கு காரணமான பிரதமர் ஜீன்கிரைச்சியான் மீது அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்பு தமது பதவியினை ராஜினாமாச் செய்து விலகிக் கொள்ள வேண்டும் என்ற நிலைமைக்கு கட்சியினுள்ளும், பொதுமக்களிடமிருந்தும் பெரும்பான்மையான எதிர்ப்புக்கள் உருவாகியிருப்பதாக கனடாவின் அரசியல்ஆருடம் கூறும் "ஈகோஸ் ஆய்வு மையம்" அண்மையில் மேற்கொண்ட பொதுமக்கள் கருத்துக் கணிப்பீடு தொடர்பான ஆய்வின் பின்பு கருத்துத் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் மிகத் துல்லியமாக ஆருடம் கூறும் இவ் ஈகோஸ் ஆய்வு மையம் இவ் ஆய்வினை மேற கொண்டு தமது கருத்துக் கணிப்பீட்டினை தெரிவித்துள்ளது. கடந்த வாரம் நாடு முழுவதும் சுமார் 1225 பேருடம் மாதிரி கருத்துக் கணிப்பீடாக இவ் ஆய்வினை இந்நிறுவனம் மேற்கொண்டது.

இவ் ஆய்வு மையத்தின் கருத்துக் கணிப்பின்படி லிபரல்கட்சியின் தலைமைப் பதவியினை நிதி அமைச்சர் திரு போல் மார்ட்டின் அவர்களுக்கே வழங்க வேண்டும் என மக்களின் பெரும்பான்மையோர் விரும்புவதாக கருத்துக்கள் தெரிவிக்கின்றன. கனடாவின் மத்திய அரசு தேர்தல் நாளை நடந்தால் பெரும்பான்மையான வாக்குகளை லிபரல் கட்சியே பெற்று ஆட்சியினை பிடிக்கும் நிலைமையில் நாட்டு மக்கள் தற்போது உள்ளார்கள் எனவும் இக் கணிப்பீட்டில் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

# பயணிகள் ரயிலுடன் மோதிய மினிவான் ஐந்து பேர் ஸ்தலத்தில் பலி

கடந்த ஜுன் மாதம் 7ம்திகதி காலை 7.12 மணியளவில் ஹீல் - கை.வே. 7 சந்திப்புக்கு அருகில் ஹோ - ரான்சிற் என அழைக்கப்படும் காலை நேர அலுவலக உத்தியோகத்தர்களை ரொறன்ரோவுக்கு அருகில் உள்ள நகரங்களில் இருந்து ஏற்றிக் கொண்டு ரொறன்ரோ யூனியன் புகையிரத நிலையத்தினை நோக்கி வந்து கொண்டிருந்த புகையிரதத்துடன் புகையிரத தடுப்புக்கடவை சிவப்பு சைகையின் பிரகாசங்கள் யாவற்றினையும் மீறி மினிவான் ஒன்று மோதியதில் இவ் மினிவானில் பயணம் செய்த சுமார் 25 - 35 வயதுக்கு இடைப்பட்ட ஐந்து இளைஞர்கள் பலியாகியுள்ளனர். இந்த ஐவரும் ஒரே இடத்தில் வேலை செய்பவர்களாக இருக்கலாம் எனவும் காலை நேரம் வேலைக்கு போகும் போது இவ் விபத்தில் கவலையீனமாக சிக்கியிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இவ்விபத்து தொடர்பாக யோர்க் பகுதி பொலிஸ் சார்ஜன்ட் திரு பிராட் பல்மர் தெரிவிக்கும் போது இது முற்றுமுழுதாக மினிவான் பக்கமே தப்பும் தவறும் எனத் தெரிவித்திருந்தார். இவ் மினிவான் விபத்தின் போது தூக்கியெறியப் பட்டு சுக்குநூறாகி நொருங்கி யிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கல்வி, தகுதி, திறமையான குடிவரவாளர்களை வர அனுமதிக்கும் குடிவரவு சட்டத்திருத்தம்

கனடாவுக்கு நிரந்தர வதியுரிமை பெற்று வருவதற்கு ஏனைய நாடுகளில் இருந்து விண்ணப்பம் செய்பவர்களுக்கு அவர்களுடைய கல்வி, மொழிதிறமை, தொழில் அனுபவங்கள் உட்பட ஏதாவது துறைகளில் அனுபவம் உள்ளவர்களாக இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயனுடையவர்களாக 21 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் கனடாவின் குடிவரவு சட்டத்திருத்தங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய அரசு பல மில்லியன் டொலர் பணத்தினை ஒதுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் சுமார் 250.000 புதிய குடிவரவாளர்களுக்கு நிரந்தர வதியுரிமை வழங்கி கனடாவினுள் குடியேறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# குடிவரவு அந்தஸ்து இல்லாத பெற்றோரின் பிள்ளைகளுக்கு பாடசாலையில் கல்விகற்கத் தடை?

ஒன்ராறியோ கல்விச்சபையின் சட்ட விதிகளின்படி மாகாணத்தில் வசிக்கும் பெற்றோருக்கு குடிவரவு அந்தஸ்து என்ன மாதிரி இருந்தாலும் அவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலையில் சேர்ந்து தங்கள் கல்வியினைக் கற்பதற்கு எதுவித தடையும் இல்லை என்ற நிலைமையினை மீறி சில நகரக் கல்விச் சபைகள் கனடாவின் குடிவரவு சட்டப்பிரிவுகளை உதாரணம் காட்டி கல்வி கற்க புதிய அனுமதி வழங்க மறுத்து இருப்பதனை ரொறன்ரோவின் ஆங்கில பொதுஜன சாதனங்கள் பெரும் பிரச்சனையாக பகிரங்கத்திற்கு கொண்டு வந்துள்ளன.

லெபனான் நாட்டில் இருந்து உல்லாசப்பயணிகள் விசாவில் கனடாவுக்கு வருகை தந்த குடும்பத்தினர் ஒருவர் தங்கள் விசா முடிவடைந்த பின்பு, குடிவரவு அந்தஸ்து கோரி ஸ்காபரோவில் தங்கியிருக்கும் இச்சந்தர்பத்தில் மிக அறிவுக்கூர்மையான அவர்களின் 13 வயது, 11 வயது பிள்ளைகளின் பாடசாலை அனுமதியில் கடந்த இரு வருடங்களாக ரொறன்ரோ கல்விச்சபை அனுமதி வழங்காத காரணத்தினால் இம் மாணவர்கள் இருவரும் வீட்டினுள் இருக்க வேண்டிய நிலைமையினை உதாரணம் காட்டியே இப்பிரச்சனை பகிரங்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. குடிவரவு அமைச்சின் பேச்சாளர்களில் ஒருவரான ரெனி மேர்சியர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போத குடிவரவு அந்தஸ்து என்ற கோட்பாட்டுக்கு அப்பால் எல்லாப் பிள்ளைகளுக்கும் பாடசாலை செல்ல உரிமை உண்டு என்றும் ஆனால் இவர்களோ அல்லது இவர்களின் சந்ததியினரோ ஏதாவது பயங்கரவாதத்தில் ஈடுபாடு இருந்தால் மட்டும் ஒரு விதிவிலக்கு என்ற சட்டமூலத்தினை சில கல்விச்சபைகள் தப்பாக அர்த்தம் புரிந்து வைத்துச் செயல்படுகின்றனர் என்ற அவர்களின் தவறினை ஏற்றுக் கொண்டார்.

பார்க்டேல் லீகல் சேவிஸ் என்னும் சட்டநிறுவனத்தில் இத்தகைய குழந்தைகள் இளைஞர்கள் விவகாரத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள், வழக்குகளைக் கையாளும் சட்டத்தரணி சீறில்மில்னி என்பவர் இதுதொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது தாம் தற்போது சுமார் ஐம்பதுக்கு மேறபட்ட இத்தகைய பிரச்சனைகளை கையாளுவதாகவும் இத்தகைய பாதிப்பில் பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்க முடியாது வீடுகளில் வைத்திருப்போர் பகிரங்கத்திற்கு வராதோர் எத்தனை பேர்? என்ற கேள்விக்கு பதில் தேடினால் அது ஏராளமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை என அவர் தெரிவித்தார்.

# வின்னிபெக் நகரின் நடுவீதியில் தரையிறங்கி நொருங்கிய விமானம்

சுமார் ஆறு பயணிகளையும் ஒரு விமானமோட்டியினையும் கொண்ட சிறுவிமானம் ஒன்று கடந்த ஜுன் 11ம்திகதி நிலை தடுமாறி சுழன்று அடித்து. பெறோல் நிலையம் வீடுகள் நெருக்கமாக உள்ள நகரில் ஒரு வீதியில் விமானி தரையிறக்கிய போது இறுதி நேரத்தில் நிலத்துடன் மோதியதில் விமானம் நொருங்கிய போதும் பயணிகள் யாவரும் சிறுசிறு காயங்களுடன் பாதுகாக்கப்பட்டனர்.

அமெரிக்காவினைச் சேர்ந்த இப் பயணிகள் யாவரும் மனிற்றோபா மாகாணத்தில் வடபகுதிக்கு உல்லாசப் பயணம் ஒன்றினை மேற்கொண்டவர்கள் ஆவார்கள்.

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919


:மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்

- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- Investment Fund
- RSP
- RIFs and Annuities

SINCE 1847

One of the best & leading companies in North America

CANADA LIFE

மேலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 09?9
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

# அதிரடிப்படைக்கு எதிராக கிளர்ந்தெழும் மக்கள்!

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னரும் படையினரது கெடுபிடிகள் தொடர்ந்து வருவதற்கெதிராக ஆத்திரங்கொண்டு மக்கள் எதிர்ப்புணர்வுகளை காட்டி வருகின்றனர். நீண்டகாலமாகவே படையினரது மோசமான கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டு அஞ்சி ஒடுங்கி வாழ்ந்து வந்த மக்கள் தற்போது அதற்கெதிராக போராடும் மனநிலையை பெற்று வருவதை அண்மைய நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சென்ற வாரம் தொடர்ச்சியாக மூன்று நாட்களாக நடந்து வந்த போராட்டம் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களது உணர்வுகள் கொதிநிலையை அடைந்து வருவதையே எடுத்துக்காட்டுகின்றது.



மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் தொடர்ச்சியாகவே படையினரது கெடுபிடிகளுக்கு உட்பட்டு மோசமாக பாதிக்கப்பட்டு வந்த மாவட்டங்களாகும்.

படையினரின் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் இப்பகுதிகளில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மிகமிக அதிகம்.

அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்கு என்று ஸ்ரீலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரால் மக்கள் அடைந்த துயர் அளவிடமுடியாதவை.

மிக அதிக பட்ச அதிகாரங்களுடன் கிழக்கு மாகாண மக்களின் மனஉணர்வை சிதைத்து அவர்களை எப்போதுமே அச்சநிலைக்குள்ளேயே வைக்கும் நோக்குடனேயே அதிரடிப்படை திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருந்தது. இதனால் மக்கள் மனங்களில் அதிரடிப்படையினர் மீது எப்போதுமே ஒரு எதிர்ப்புணர்வும் அச்சமும் இருந்து வந்தது. இதன் ஒரு வெளிப்பாடாகவே இம்முறை படையினருக்கு எதிராக குறிப்பாக அதிரடிப்படையினருக்கு எதிராக மக்கள் இந்த அளவுக்கு கிளர்ந்தெழுந்துள்ளனர்.

எஸ்.ரி.எவ்.என சுருக்கமாக அழைக்கப்படுகின்ற விசேட அதிரடிப்படை 1984 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில் லலித் அத்துலத் முதலி படைத்துறை அமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது.

## மட்டு.நகரிலிருந்து இரா.துரைரட்னம்

இதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் ஜே.ஆரின் மகனான ரவி ஜெயவர்த்தன ஆவார். பிரித்தானிய கொமாண்டோ படையணியான எஸ்.ஏ.எஸ். இல் பயிற்சி பெற்ற ரவி ஜெயவர்த்தனா தலைமையில் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படையும் எஸ். ஏ. எஸ். ஐஒத்த படையணியாகவே உருவாக்கப்பட்டது.

பிரித்தானிய எஸ்.ஏ.எஸ். படையணி ஐரிஸ் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கியதில் பேர் பெற்றது. அத்துடன் வேறு பல நாடுகளில் விடுதலைப் போராட்டங்களை வெற்றிகரமாக அடக்கிய அனுபவமும் அதற்கு உண்டு. எஸ்.ஏ. எஸ், எஸ்.ரி.எவ். போன்ற படையணிகளின் வெற்றியில் அப்படியொன்றும் விசேடமான இரகசியம் கிடையாது.

மக்களைத் தொடர்ச்சியான மிரட்டல்களுக்கு உள்ளாக்குவதன் மூலம் பிச்சைவேண்டாம் நாயைப்பிடி என்கின்ற பூரண சரணாகதி நிலைக்கு கொண்டு வந்து போராட்டத்தில் ஈடுபடும் அல்லது அதை ஆதரிக்கும் மனநிலையை அவர்களுக்கு இல்லாது ஒழிப்பதே இந்த படையணிகளின் தொழில் இரகசியம்.

ஸ்ரீலங்காவில் பொலிஸ் படையின் ஒரு அங்கமாக தோற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை பொலிசாருக்கு இருக்கும் அதிகாரங்களை விட கூடுதல் அதிகாரம் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

தமக்கு இருக்கும் வரையறையற்ற அதிகாரம் காரணமாக அதிரடிப்படையினர் அடிக்கடி தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதுண்டு.

ஸ்ரீலங்காவில் இந்த அதிரடிப்படை கிழக்கு மாகாணத்தை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. இதற்கு முஸ்லிம் விரோத நாடான இஸ்ரேலிய மொசாட் நாசகார படையணி பயிற்சியும் ஒத்துழைப்பும் கூட பெறப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் அடுத்தபடியாக பலம்பெ காண்ட ஒரு சமூகமான முஸ்லிம்களிடமிருந்து எதிர்காலத்தில் எழக்கூடிய எதிர்ப்புக்கள் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக இருப்பதற்காகவே முஸ்லிம் எதிர்ப்பு போரில் அனுபவமுடைய இஸ்ரேலிய மொசாட் உதவியும் பெறப்பட்டது.

அண்மையில் நிந்தவூரில் இரு முஸ்லிம் இளைஞர்களை கொலை செய்துவிட்டு வழமைபோல அவர்களை புலி என அதிரடிப்படையினர் கூறினர்.

அதற்கெதிராக கிளர்ந்தெழுந்த முஸ்லிம்களையும் மோசமான வன்முறை மூலம் அதிரடிப்படையினர் அடக்கினர். கிழக்கு மாகாணத்திற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட இந்த அதிரடிப்படை இதுவரையில் செய்துள்ள அட்டூழியங்கள் அளவிடமுடியாதவை.

கொக்கட்டிச்சோலை இறால்பண்ணை படுகொலை, மட்டக்களப்பு பஸ் நிலைய படுகொலை, புதுக்குடியிருப்பு, துறைநீலாவணை, கல்லாறு மீனோடைக்கட்டு ஆகிய கிராமங்களில் தமிழர்கள் மீது நடத்திய படுகொலைகள் என அதிரடிப்படையினர் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழர்கள் மீது நடத்திய படுகொலைகள் அட்டூழியங்கள் ஏராளமானவை.

படு பயங்கரமான செயற்பாடுகள் மூலம் மக்களை மிரட்டலுக்கு உள்ளாக்கும் நோக்குடனேய இந்த படுகொலைகள் அதிரடிப் படையினரால் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன.

பெரிய நீலாவணையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் அப்பகுதி மக்களை சுற்றிவளைத்து ஏராளமான ஆண்களை கைது செய்த அதிரடிப்படையினர் அப்போது மக்களை முகாமுக்குள்ளேயே படுகொலை புரிந்து எரித்தது.

புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலையடுத்து வீதி வழியே வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றை மறித்த அதிரடிப்படையினர் அதில் பயணம் செய்தவர்களை கொன்று குவித்தனர்.

இவ்வாறே கொக்கட்டிச்சோலையில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றில் அதிரடிப்படை வாகனம் சிக்கியதையடுத்து அப்பகுதியில் ஏராளமாக பொதுமக்கள் அதிரடிப்படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

இவை தவிர இன்னும் பல கொலைகளும் கைதுகள் மற்றும் சித்திரவதைகளும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அதிரடிப்படையினரால் அரங்கேற்றப்பட்டுள்ளன.

அச்சமூட்டக்கூடிய வகையில் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து மக்களை எப்போதுமே எதிர்ப்புணர்வு எதுவும் அற்ற ஜடங்களாக்குவதே அதிரடிப்படையினரின் இத்தகைய நடவடிக்கைகளின்அடிப்படை தத்துவம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவாறாக அதிரடிப் படையினர் இவ்வாறான படுகொலைகள் கைதுகள் சித்திரவதைகள் என தம்மாலான மிரட்டல் நடவடிக்கைகள் அனைத்தையும் மிக மோசமான முறையில் மேற்கொண்டு வந்தனர்.

எதிர் கொரில்லா யுத்தம் என பொதுவாக மேற்குலகால் வர்ணிக்கப்படுகின்ற இந்த கீழ்த்தரமான போரியல் உத்திமூலம் ஸ்ரீலங்கா அரசு மட்டக்களப்பு அம்பாறை மக்களின் தொப்பிள் கொடிகளுக்குள்ளும் அதிரடிப்படை பற்றிய அச்சஉணர்வை விதைத்து அவர்களை எதிர்த்து கேட்கவோ செயற்படவோ நாதியற்ற ஒரு கூட்டமாக ஆக்குவதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

இந்தப்படையணி தொடர்பான மற்றுமொரு தகவலையும் சுட்டிக்காட்டலாம். அதாவது விசேட அதிரடிப்படை ஸ்ரீலங்கா அரசுக்கு மிகவும் குறைந்த சிக்கனமான படையணி என்பது அத்தகவலாகும்.

மிகவும் சிறிய படையணிகளாகவே ஆங்காங்கே முகாமிட்டு செயற்படும் அதிரடிப்படை படுமோசமான அச்சம் தரக்கூடிய செயற்பாடுகள் மக்களை முடக்கியே தன்னுடைய நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதனால் மிக குறைந்தளவு படைப்பலத்துடன் மிகவும் அதிகமான நிலப்பரப்பை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதும் அப்பகுதி மக்களை எப்போதுமே இயக்கமற்றவர்களாக பேணுவதும் ஸ்ரீலங்கா அரசுக்குச் சாத்தியமானது.

அதாவது குறைந்த செலவில் நிறைந்த பலன் என்றும் சொல்லலாம்.

இத்தகைய பல சிறப்பு (?) குணாம்சங்கள் கொண்ட அதிரடிப்படை தமக்குச் செய்த சொல்லொணா கொடுமைகள் காரணமாக எப்போதுமே குறித்த அச்சத்தை கொண்டிருந்த மக்கள் தமது பழியை தீர்ப்பதற்கான தக்கதருணத்தை காத்திருந்தனர்.

போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் உள்ள இக்காலப்பகுதியில் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் அதிரடிப்படையினர் விடுதலைப் புலி உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டமை மற்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோது வன்முறை மூலம் அதை அடக்கியமை ஆகிய அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்களுக்கு எதிராக பாரிய அளவில் மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் முழுவதிலும் வீதி மறியல் போராட்டமாகவும் ஹர்த்தால் கடையடைப்பு போராட்டமாகவும் விரிவடைந்த இப்போராட்டம் அதிரடிப் படையினருக்கு எதிராக இம்மக்கள் கொடுத்த முதலாவது அதிர்ச்சி வைத்தியம் எனலாம்.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் தமிழ்மக்களை தமது அச்சமூட்டும் நடைமுறைகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சில நூறு அதிரடிப்படையினர் இந்த மக்கள் அனைவரும் கூட்டாக கிளர்ந்தெழுந்ததால் தமது பாடு அதோகதி என்ற யதார்த்தத்தை இப்போது உணர்ந்துள்ளார்கள்.

இந்த அம்சத்தின் காரணமாகவே அதன் பின்னர் வீரமுனையில் வீடு வீடாகச் சென்று மக்களிடம் சவப்பெட்டிகளை வாங்கி வைக்குமாறு அதிரடிப்படையினர் மிரட்டியுள்ளனர்.

அச்சமூட்டும் கடும்அதிர்ச்சி வைத்தியம் மூலம் மக்களை கட்டுப்படுத்தி வைக்கும் தமது வழமையான பாணியை அவர்கள் மீண்டும் அவிழ்த்து விட்டுள்ளார்கள்.

ஒரு சில நூறு படைகளின் வெறும் மிரட்டல் தந்திரமா அல்லது மக்கள் சக்தி என்கின்ற மாபெரும் சக்தியாக இந்த போராட்டத்தில் வெற்றி பெறப்போகின்றது என்பதில் தான் கிழக்கு மாகாண மக்களின் எதிர்கலம் தங்கியிக்கின்றது.

---

## நமது நோக்கு

### நூறு நாட்கள்

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை இந்த வாரத்துடன் நூறு நாட்களைத் தாண்டிவிட்டது.

நூறு நாள் நிறைவு பல்வேறு வழிகளில் நினைவு கூரப்படுகின்ற போதிலும் இந்த நூறு நாள் சாதனைகளையும் சோதனைகளையும் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

நேரடிப்பேச்சுக்களுக்கு உகந்த ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும் பரஸ்பரம் நல்லெண்ணத்தை வளர்த்து வடக்கு கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்காகவுமே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்தவகையில் புரிந்துணர்வு உடன்படிக்கை எந்தளவுக்கு பங்களிப்பைச் செய்துள்ளது?

உடன்படிக்கையில் இரு தரப்புக்குமே பொறுப்புக்கள் கடப்பாடுகள் உள்ளன. இந்தக்கடப்பாடுகள் எந்தளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பதில் தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. அடுத்த கட்டத்துக்கு செல்வதற்கு முன்னதாக இந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவது உறுதி செய்யப்படுவது அவசியமானதாகும்.

இந்தக் கடப்பாடுகளைப் பொறுத்தவரையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் எந்தளவுக்கு நியாயமான முறையில் செயற்பட்டுள்ளது?

பாடசாலைகள், வணக்கத்தலங்களிலிருந்து வெளியேற வேண்டிய படையினர் அதற்குப் புதிய நிபந்தனைகளை விதிப்பதுடன் காரணங்களையும் கற்பிக்கின்றனர்.

கடல்வலயத் தடைச்சட்டங்கள் அனைத்தும் நீக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவை இப்போதும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப் படுவதுடன் புதிய நிபந்தனைகளும் விதிக்கப் படுகின்றன.

வடக்கு கிழக்கின் எந்தப் பகுதிக்கும் சென்று அரசியல் கடமைகளைச் செய்வதற்குவிடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும்.

இது நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட அனுமதியாகும். ஆனால் தீவுப்பகுதியில் அரசியல் கடமைக்குச் செல்ல விரும்பிய விடுதலைப் புலிகளுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் கடற்படையினரின் துன்புறுத்தல்களும் அதிரடிப்படையினரின் அச்சுறுத்தல்களும் தொடர்கதையாகத் தான் உள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்துமாறு மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்திற் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை.

விடுதலைப் புலிகளும் இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் நிம்மதியான வாழ்க்கையை எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தவர்களாகத் தான் உள்ளார்கள்.

பதற்ற நிலைமையும் நிம்மதியற்ற வாழ்க்கையும் தான் தொடர்கதையாகப் போகின்றதா என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

அரசாங்கம் சமாதானம் என எதனையோ செய்ய படையினர் தமக்கெனத் தனிப்பாதை ஒன்றை வகுத்துக் கொண்டு செயற்படுகின்றார்களா என்ற சந்தேகம் தான் பல்வேறு மட்டங்களிலும் எழுந்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மதிக்காமல் செயற்படும் படையினர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என்பதும் தெளிவாகவே தெரிகின்றது.

அரசாங்கத்தின் இந்த இயலாமை தான் தமிழ்மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்புகின்றது.

இந்தப் பின்னணியில் இவ்வாரத்துடன் நூறு நாட்களைப் பூர்த்தி செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கை அதன் இலக்கை அடைவதில் தவறிவிட்டது என்று தான் சொல்லவேண்டும்.

அதனைச் சரியான திசையில் கொண்டு செல்லும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது.

கொழும்பு றிப்போர்ட்

# புதிய குழப்பத்துக்கு வழியமைக்கும் அமெரிக்க -இந்திய ஒப்பந்தம்

தனஞ்சயன்

இலங்கையில் சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தருணத்தில் அமெரிக்காவும் தனது நலன்களைப் பாதுகாக்கும் விடயத்தில்அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையே பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் பிரசன்னம் ஆரம்பமான காலத்திலிருந்து தென்னாசியாவில் அமெரிக்கா தனது நலன்களைப் பேணுவதிலேயே பெருமளவு கவனமெடுத்து வருகின்றது.

அமெரிக்கப்படை விமானங்கள், கப்பல்கள் என்பவற்றின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தம்மிடையே மோதலைக் கொண்டிருக்கின்ற போதிலும் அமெரிக்காவுக்கு இராணுவ சாதனங்களைப் பாவிப்பதற்காகத் தமது விமான நிலையங்கள்,துறைமுகங்கள் என்பவற்றை வழங்கியுள்ளன.எனவே இலங்கையிலும் அமெரிக்க கப்பல்கள், விமானங்கள் என்பவற்றின் பராமரிப்பு மற்றும் தரித்துச் செல்லும் வசதிகள் என்பவற்றை இலங்கையிலும் பெற்றுக்கொள்ளும் விதத்திலேயே புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஆனால் வருவாயைக் காட்டிலும் இலங்கை யின் உள்விவகாரத்திலும் அமெரிக்காவின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்வதாகவே இப்புதிய ஒப்பந்தம் அமையுமென்ற எதிர்பார்க்க முடிகின்றது.

அமெரிக்க தளமிட்ட நாடுகள், பிராந்தியங்களிலெல்லாம் பிரச்னைகளை சிக்கலாக்கியுள்ளதையே அவதானிக்கமுடியும். இலங்கையில் கடந்த இருபது வருடகாலமாக நீடித்த வடக்கு - கிழக்கு யுத்தம் ஒரு முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தள்ள இத்தருணத்திலேயே அமெரிக்கா, இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவுள்ளது.

அமெரிக்கா இலங்கையின் ஒரு நட்பு நாடாகும். இலங்கையில் வடக்கு கிழக்குப் பிரச்னை ஆரம்பித்த காலத்தில் அமெரிக்கா இராணுவ தளபாடங்களை வழங்கியும் படையினருக்கு விசேட பயிற்சிகளையும் கொடுத்து உதவிவந்தது.

அமெரிக்க விசேட படையணியைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து இராணுவத்தினருக்கு யுத்தம் இடம் பெற்ற பகுதிகளிலேயே பயிற்சிகளையும் வழங்கினர்.

இது தவிர அதிகாரிகள் தரத்திலிருந்தோருக்கு அமெரிக்கா சென்று பயிற்சிகள் பெறவும்வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தன. எனவே பொருளாதார ரீதியாக மட்டுமல்லாது இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை கூட அமெரிக்கா இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டியே வந்துள்ளது.

தற்போது இராணுவ ரீதியில் இலங்கையுடனான உறவுகள் மேலும் அதிகரிக்கும் அறிகுறிகள் இலங்கை - அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுவதன் மூலம் பலமடைந்துள்ளன.

எதிர்வரும்ங ஜூலை மாதம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கான சட்டதிட்டங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் அமெரிக்க மற்றும் இலங்கை சட்டநிபுணர்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கா இலங்கையில் தளமிடுவதை வெகு நீண்டகாலமாகவே எண்ணியிருந்தது. திருகோணமலைத் துறைமுகமே அமெரிக்காவின் பிரதான இலக்காகவும் இருந்து வந்தது. ஆனால் இது விடயத்தில் இந்தியா மிக அவதானமாக இருந்தமையாலும் இலங்கையின் வடக்கு கிழக்கு யுத்தம் சூடு பிடித்து படையினரால் விரிவாகப் பாவிக்கப்பட்டு வந்தமையாலும் அமெரிக்காவின் எண்ணம் கைகூடவில்லை.

ஆனால் தற்போது இலங்கையிலும் பிராந்திய ரீதியாகவும் உருவாகி வருகின்ற சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதிலேயே அமெரிக்கா வெகுவாக ஆர்வங்காட்டி வருகின்றது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் சர்வதேச ரீதியாக அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்குமிடையே பனிப்போர் நிலவியது. அப்போது இந்த இரு நாடுகளுடனும் உலக நாடுகள் பலஅணிசேர்ந்திருந்தன.

இந்தியா கூட ஒரு சோவியத் சார்பு நாடாகவே விளங்கியிருந்தது. இதன் காரணமாக அமெரிக்கா இந்திய உறவுகள் கூட இறுக்கமானதாக இருக்கவில்லை. ஆனால் தற்போதைய சர்வதேச நிலவரம் மாற்றங் கண்டுள்ளது. அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே நிலவிய பனிப்போர் இப்போதில்லை.

சோவியத் யூனியன் எனப் பல்வேறு பிராந்தியங்களையும் கொண்டிருந்த ரஷ்யா தற்போது தனியொரு நாடாக இருக்கின்றது. சோவியத் ரஷ்யா தற்போது தனியொரு நாடாக இருக்கின்றது. சோவியத் யூனியனில் அங்கம் பெற்ற பிராந்தியங்கள் தற்போது தனித்தனி நாடுகளாகியுள்ளன.

அன்று அமெரிக்காவுடன் ஏட்டிக்குப் போட்டியாக இருந்த ரஷ்யா தற்போது அமெரிக்காவின் நண்பனாகியுள்ளது. தனது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அமெரிக்காவினதும் அதன் நேசநாடுகளினதும் உதவிகளையும் ரஷ்யா நாடி நிற்கின்றது. இந்நிலையில் ரஷ்யாவின் மிக நெருங்கிய நட்பு நாடான இந்தியாவும் தனது வெளி உறவுக்கொள்கையில் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா - அமெரிக்க உறவுகள் மேம்பட்டவையாக இருக்கின்றன. கூடுதலான ஒத்துழைப்பு இரு நாடுகளுக்குமிடையே நிலவுகின்றது. இந்த ஒத்துழைப்பின் வெளிப்பாடாகவே ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப்படைகள் இந்திய விமானத்தளங்கள்,துறைமுகங்கள் என்பவற்றைப் பாவிப்பதற்கும் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

எனவே சர்வதேச ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் தனக்கு ஏதுவான ஓர் அரசியல் சூழல் தோன்றியுள்ளதைச் சாதகமாகப் பயன்படுத்திய அமெரிக்கா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை செய்து இலங்கையில் தனது இராணுவத்துக்கு இடந்தேடுவதிலும் முனைப்பாக இருக்கின்றது.

இப்புதிய இலங்கை அமெரிக்கப் பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் இலங்கையின் தற்போதைய இனப்பிரச்னைத் தீர்வு முயற்சிகள் பாதிக்கப்படுமா என்பதே அரசியல் அவதானிகளின் முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

இலங்கையில் ஒரு நீண்டகாலச் சாபக்கேடாக இருந்து வருகின்ற இனப்பிரச்னையையும் அதனால் ஏற்படக்கூடிய உள்நாட்டு யுத்தத்தையும் முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த டிசம்பரில் இலங்கையில் பதவிக்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடந்த பெப்ரவரி மாதம்செய்து கொண்டிருந்தார்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு மூன்று மாதங்கள் அதாவது 90 நாட்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்த 90 நாட்களில் இசகுபிசகாக ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம் பெற்றதாயினும் யுத்த நிறுத்தத்தை முழு அளவில் பேணுவதில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் வெகுவாகவே ஆர்வங்காட்டி வருகின்றன.

இலங்கையில் சில இனவாத அரசியல் கட்சிகளும் தனிநபர்களும் இனப்பிரச்னைத் தீர்வுக்கு எதிராக இருந்தாலும் நாடளாவிய ரீதியில் மக்கள் ஆதரவு இனப்பிரச்னைத் தீர்வு முயற்சிகளை வெகுவாகவே வரவேற்பதாக இருக்கின்றது.

இலங்கையில் அனைவரது கவனமும் ரணில் பிரபா ஒப்பந்தம் மற்றும் அது சார்ந்த சமரச முயற்சிகள் மீதானதாகவே இருக்கின்றது.

எதிர்வரும் யூன் மாதத்தில் சமரச முயற்சிகள் சம்பந்தப்பட்ட பூர்வாங்கப்பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் ஆரம்பமாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே மிகுந்த சிரத்தையுடன் முழு நாடுமே சமரச முயற்சிகளை உன்னிப்பாக அவதானித்து வரும் இவ்வேளையிலேயே அமெரிக்க இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய பேச்சு எழுந்துள்ளது. இப்புதிய ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் இலங்கை க்கு வருவாயைத் தேடுவதேயாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு விமானத்தளங்கள், துறைமுகங்கள் என்பவற் றைப் பாவிக்க அனுமதிப்பதன் மூலம் கூடுதல் வருவாயைப் பெறமுடியுமென இலங்கை அரசு கருதுகின்றது.

ஆனால் அமெரிக்காவின் எண்ணம் வேறாகவே இருக்கின்றது. தனது இராணுவ பலத்தையும் பிரசன்னத்தையும் தெற்காசியாவிலும் விஸ்தரிப்பதையே அமெரிக்கா முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் இலங்கை இனப்பிரச்னையை பொறுத்தவரை அவ்வப்போது விடுதலைப்

(27ம் பக்கம் பார்க்க)

## வியுக்தியார் பதில்கள்

**பாரதி நேசன்,**
**டோட்மூண்ட், ஜெர்மனி**

வியுக்தியாரே!
கடந்த வாரப் பத்திரிகையில் திருகோணமலை முதல் மல்லைத்தீவு வரை தளங்களைப் பலப்படுத்துகின்றது சிறலங்கா கடற்படை என்ற செய்தியைப் பார்த்தேன். அப்படியென்றால் தாக்குதலை எதிர்கோள்ளப்போகின்றோம் என்ற அச்சம்தானே?

பதில்: என்ன கேள்வி இது. விடுதலைப் புலிகள் தாங்களாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்பது சிறிலங்கா கடற்படைக்கு தெரிந்ததுதான். கடற்படை எத்தனையோ தடவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உதாசீனம் செய்தபோதில் எல்லாம் அவர்கள் அமைதி காத்தே வந்திருக்கின்றார்கள். இப்போது கடற்படை தமது தளங்களை பலப்படுத்துவது தமிழ் மக்கள் கிளர்ந்து எழுந்து எங்கே தம்மீது தாக்குதல் நடாத்திவிடுவார்களோ என்ற அச்சத்தில்தான் என்றே நான் எண்ணுகின்றேன். ஏனெனில் மீனவர்களுக்கு எதிராக ஆங்காங்கே கடற்படை நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்து மக்கள் போராட்டங்களில் குதிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் கவனிக்கவில்லையா?

**தேவா,**
**பாரிஸ் 20, பிரான்ஸ்**

வியுக்தியாரே,
சிம்ரன் விசயத்தில் மாத்திரம் அது எப்படி நீர் சரியாக கருத்துச் சொன்னீர். அவர் சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு மும்பய் போய்விட்டார் என்ற செய்தியை எப்படி உம்மால் நம்பமுடியவில்லை. அதுதான் ஆசச்ரியமாக இருக்கின்றது?

பதில்: அட நீங்கள் வேறு. கடந்த நாற்பது வருடமாக நானும் தான் சினிமா படங்களைப் பார்த்துவருகின்றேனே. சினிமா உலகில் நடப்பது என்ன என்பதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்.
அதுசரி, சிம்ரன் அந்தச் செய்தியை மறுத்திருப்பது எப்படி உங்களுக்கு இவ்வளவு விரைவாகக் கிடைத்திருக்கின்றது.
அவர் அம்மா வேடத்தில் நடிக்கத் தொடங்கினாலும் சினிமா உலகு சொல்லும்வரை அவராகப் போகமாட்டார் பாருங்கள்.

**சிவா சின்னவன்,**
**சூரிச், சுவிஸ்**

வியுக்தியாரே,
அது என்ன ஒவ்வொரு குடும்பங்களையும் இவ்விரண்டு பிரேதப் பெட்டிகளை தயார்படுத்தி வைக்கச் சொல்கிறார்களாம். ஏன் ஒவ்வொரு வீட்டிலும் இருவரைத் தவிர மற்றவர்களை விட்டுவைக்கின்றார்கள் என்பது குறித்து ஏதாவது புரிகின்றதா உங்களுக்கு?

பதில்: தாராளமாகப் புரிகின்றது. அட இது கூடவா உங்களுக்குப் புரியவில்லை. அவர்களின் அதிரடிப்படை முகாமில் 248 படையினர் இருக்கின்றார்களாம். ஆனால் அந்தக் கிராமத்தில் 124 குடும்பங்கள்தான் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திடமும் இவ்விரண்டு பெட்டிகளை வாங்கினால் அரசுக்கு அந்தச் செலவாவது மிஞ்சுமே என்று கணக்குப் பார்க்கின்றார்கள் அவ்வளவுதான். என்ன தேசிய அக்கறை பார்த்தீர்களா?

**திருமதி பொன்கலன்,**
**வெம்பிளி, ஐக்கிய ராச்சியம்**

வியுக்தியாரே!
வெம்பிளியில் பல இடங்களில் பிரிட்டன் பொலிசார் தமிழில் விளம்பரப் பலகைகள் வைத்திருக்கின்றார்களே அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: என்ன இப்படிச் சர்வ சாதாரணமாகக் கேட்டுவிட்டீர்கள். இந்தச் செய்தியை பாவேந்தர் இன்று அறிந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார் என்றுதான் நினைத்தேன். ஆனால் உங்கள் இந்தக் கேள்வி கிடைத்த பின்னர் நானும் ஒருதடவை வெம்பிளி வரமுடிந்தது. விளம்பரப்பலகையைப் பார்த்த பின்னர்தான் மனதில் ஒரு அமைதி. நல்ல காலம் பாவேந்தர் முன்னதாகப் போய்ச் சேர்ந்துவிட்டாரே என்ற திருப்தி வேறு.
கடந்த ஆறு மாதங்களில் அங்கு நடைபெற்ற பல்வேறு கொலைகள் தொடர்பாக தமிழர்களைத் தேடித்திரியும் பொலிசார் தமிழில் விளம்பரப் பலகைகளை எழுதி சந்தி சந்தியாக வைத்திருப்பதைப் பார்க்கின்றபோது எனக்கே நெஞ்சு வெடிக்குமாப்போல இருந்ததென்றால் உலகமெல்லம் தமிழ் மணக்கவேண்டும் என்று விரும்பிய பாரதி பார்த்தால் எப்படியிருந்திருக்கும்.

# சந்தேகத்தை ஏற்படுத்தும் நகர்வுகள்: குழப்பத்தை ஏற்படுத்தும் கேள்விகள்

ஸ்ரீலங்கா அரசுக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் குறித்து கடந்த சில வாரங்களாக திடீர் திடீர் என அறிவிக்கப்பட்டு வருவதுடன் அவை குறித்து விரிவான ஆலோசனைகள் பகிரங்கமான முறையில் விவாதிக்கப்படாது. மிக இரகசியமான முறையில் தீர்மானிக்கப்பட்டு மிக அவசர அவசரமாக கைச்சாத்திடவும் படுகின்றன.



இந்தியாவுக்குத் திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை நீண்ட காலத்துக்குக் குத்தகைக்கு விடும் ஒப்பந்தம், அமெரிக்காவுடன் இலங்கையின் கடல் மற்றும் வான்பரப்பை அமெரிக்கா பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் வடக்கும் கிழக்கு ஆழ கடல்ப்பகுதியில் சீனா மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கும் ஒப்பந்தம். இந்தியாவுடன் புதிய சுதந்திர ஒப்பந்தம். எனப் பல ஒப்பந்தம் குறித்த செய்திகள் அன்றாடம் வெளிவந்தவண்ணமேயுள்ளன.

நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தங்களென்பது ஒரு வழமையான விடயம் தான். எனினும் அந்த ஒப்பந்தங்களின் தன்மை, அது மேற்கொள்ளப்படும் காலம், மற்றும் சூழ்நிலை. அந்த ஒப்பந்தங்களை அவசர அவசரமாக மேற்கொள்ள வேண்டியதன் காரணம், அதின் உடனடி விளைவுகள், நீண்டகால பயன்கள், அல்லது பாதிப்புக்கள் இவற்றையெல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்வோமானால் அது பல்வேறு வகையான சந்தேகங்களையும் வினாக்களையும் எழுப்பவே வைக்கின்றன.

கிட்டத்தட்ட பொருண்மிய ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள ஓர் அரசு அது எதிர்கொள்ள முடியாது தவிக்கும் பல்வேறு பிரச்சனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள அல்லது அப்பிரச்சனைகளைத் தற்காலிகமாகவேனும் சமாளிக்க இம் மாதிரியான தந்திரோபாய ஒப்பந்தங்களை மேற கொள்வதும் வழமையான நிகழ்வேயாகும்.

உண்மையில் பொருளாதார ரீதியில் ஸ்ரீலங்கா அரசாங்கம் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மிகவும் மோசமான நிலையில் திணறிக் கொண்டிருப்பது பகிரங்கமான விடயமாகும்.

பாதுகாப்பு செலவீனம் என்ற பெயரில் யுத்தத்திற்கும் ஏனைய இராணுவ செலவீனங்களுக்கும் பெருமளவு நிதியை ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஸ்ரீலங்கா கடன்பட்டுப் போர் நடத்தும் ஒரு அவலமான நிலையில் மிகநீண்ட காலமாகத் தத்தளித்து வருகிறது.

கடன் வழங்கும் நாடுகளிடமே வாங்கிய கடன் பணத்தைக் கொடுத்து ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பரிதாபகரமான நிலை ஸ்ரீலங்காவுக்கு ஏற்பட்டு வெகுகாலமாகி விட்டது.

யுத்தத்திற்கு முடிவுகள் அரசியல் தீர்வொன்றை எட்டுவதில் ஆர்வம் காட்டாது. போரைத் தீவிரப்படுத்தி. தமிழ்மக்களை முற்றாகவே அழித்தொழிக்கும் பேரினவாத சிந்தனை கொண்ட ஸ்ரீலங்காவின் சிங்கள பௌத்த ஆட்சித் தலைமைகள் அமைதியை ஆயுதமுனையில் உருவாக்கும் வெறித்தனமான மனோபாவத்தை நிரந்தரமாக வரித்துக் கொண்டவர்களாக இருந்தமை தான் இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம்.



இது ஒன்றும் சிங்களத் தலைவர்களுக்குப் புரியாத ஒன்றல்ல. ஆனால் வறட்டுத்தனமான சண்டித்தனப் போக்கு. அமைதிக்கான சகல முயற்சிகளையும் காலத்துக்குக் காலம் நிராகரித்து வந்துள்ளமையே வரலாறு.

இன்றைய ஸ்ரீலங்கா அரசு சமாதானம் குறித்து தீவிரமாக இருப்பதாக உலகிற்கு தன்னை இனங்காட்டும் அதேவேளையில் விடுதலைப்புலிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையான உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இழுத்தடிப்புச் செய்து வரும் அதேவேளை மறைமுகமாக விடுதலைப்புலிகளை அச்சுறுத்தும் பாணியிலான பல நடவடிக்கைகளை மிக அவசர அவசரமாக இரகசியமாக மேற்கொண்டு வருகின்றது என்பது அரசியல் நோக்கர்களால் இப்போது வெளிப்படையாகவே கூறப்படும் கருத்தாகி விட்டது.

இந்த அரசியல் ரீதியான ஆய்வு நோக்குக் கொண்ட விமர்சனங்களை அரசு இதுவரை மறுக்கவுமில்லை. நிராகரிக்கவுமில்லை.

மேற்குறித்த பன்முக நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகவே அண்மைக்கால ஒப்பந்தங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பல்வேறு மட்டத்திலிருந்தும் கூறப்படும் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்து ஆய்வு செய்ய வேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமானதொன்றாகும்.

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் தாயகப் பிரதேசத்தைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் இத்தகைய ஒப்பந்தங்கள் மூலம் சிங்கள அரச ஆக்கிரமிப்பாளர்கள் அந்நிய சக்திகளின் பாதுகாப்புடன் தமது இருப்பை எமது பிரதேசத்தில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாகவே இத்தகைய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற எண்ணக்கரு. பெரும் சந்தேகமாக எல்லோர் மனதிலும் எழ ஆரம்பித்துள்ளது. இதனை சம்பந்தப்பட்ட நாடுகள் மறுக்கலாம். ஆனால் அது ஒரு சம்பிரதாயபூர்வமான மறுப்பாகவே கருதப்படும் என்பதில் ஐயமில்லை.

விடுதலைப்புலிகளுடன் அரசு மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சமாதானத்தீர்வுக்கான முன்முயற்சியை அமைதிக்கான ஆரம்ப நகர்வுகளை மூர்க்கத்தனமாக எதிர்க்கும் சிங்கள இனவாத எதிர்கட்சிகள் இப்போது ஸ்ரீலங்காவின் இறைமையை நீண்டகாலப் போக்கில் பெருமளவில் பன்முகப்பட்ட வகையில் பாதிக்கப் போகிறது எனப் பல தரப்பு அறிஞர்கள். நிபுணர்களால் எச்சரிக்கை செய்யவும் தொலைநோக்கு சிந்தனையற்ற இந்த அயல் மற்றும் அந்நிய நாடுகளுடனான திடீர் ஒப்பந்தங்கள் குறித்து வாய்திறப்பதாக இல்லை.

ஏகாதிபத்திய ஊடுருவல் குறித்து வாய் கிழியப்பேசி புரட்சிக் கோஷங்களைப் புலம்பும் ஜே.வி.பி.யினர் கூட இப்போது "கப்சிப்" என்று மௌனம் காப்பது தான புதுமையாகும்.

இந்திய இராணுவம் ஸ்ரீலங்காவிலும், தமிழீழப் பரப்பிலும் நிலைகொண்டிருந்த 80 களின் இறுதிக்காலப் பகுதியில், அந்த இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக (அமைதிப்படை ஜே.வி.பி.யால் ஆக்கிரமிப்புப்படை என்றே வர்ணிக்கப்பட்டது) மேற்கொண்ட இந்திய எதிர்ப்புப் போராட்டம் பிரசித்தமானது.

இந்தியப் பொருட்களை வாங்கக்கூடாது. இந்திய ஓட்டோவில் பயணிக்கக்கூடாது. இந்திய சாரம் கட்டக்கூடாது. இந்தியக் கடைகளில் கொள்வனவு செய்யக்கூடாது என்றெல்லாம் கடும் கட்டுப்பாட்டை மரண எச்சரிக்கையுடன் ஜே.வி.பி.யினர் அப்போது விதித்திருந்தனர். இப்போது மீண்டும் மற்றொரு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள வேளையில் அவர்கள் மௌனமாக உள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அடியோடு வெறுப்பவர்களாக இடதுசாரித் தத்துவம் பேசிய அவர்கள் இப்போது அமெரிக்காவுடனான ஸ்ரீலங்காவின் ஒப்பந்தத்தின் பின் விளைவுகள் குறித்து அவர்களின் சித்தாந்த ரீதியில் கணிப்பிடாது இருப்பது ஏன் எனப் பலரும் எழுப்பும் கேள்விக்கு பதில் இப்போது ஜே.வி.பி.யினர் அனுஷ்டிப்பது மௌனமே.

இங்கே தான் சந்தேகமே எழுகிறது. இந்த ஒப்பந்தங்கள் தமிழ்மக்களுக்கு எதிரானவை. விடுதலைப்புலிகளை அச்சுறுத்துவதற்கு வேண்டிய தந்திரோபாய நகர்வின் ஒரு அணுகுமுறை என்றே அவர்கள் கருதுகின்றார்கள் என அரசியல் நோக்கர்கள் கூறுவதன் அர்த்தம் பற்றிய சிந்தனையும் இங்கே தான் எழுகிறது.

ஸ்ரீலங்காவின் இறைமைக்கு ஆபத்தாக இருந்தாலும் பரவாயில்லை. தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கு அது அச்சுறுத்தலாக இருந்தால் அதை மௌனமாக அங்கீகரிக்கலாம் என்று அவர்கள் கருதுவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை எதிர்க்கும் எதிர்கட்சியினர் இந்த ஒப்பந்தங்கள் குறித்து ஒட்டுமொத்தமாக மௌன அங்கீகாரம் வழங்குவதன் மூலம் இந்த உடன்படிக்கையின் விதிகளை அரசாங்கமே மீற வைத்து அதன்மூலம் விடுதலைப் புலிகளுக்கு சமாதானத்தீர்வு மீதான அவநம்பிக்கையை ஏற்படுத்தி மீண்டும் போரைத்தூண்டி அரசாங்கத்தை நெருக்கடிக்குள் சிக்க வைக்கும் ஒருவிதமான மூலோபாயத்தை கையாளுகின்றனர் என்ற கூற்றையும் நிராகரித்து விட முடியாது.



இந்த வாதம் சரி என்றால் ஒரு ஒப்பந்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடித்து சமாதானத்தை உறுதிப்படுத்தத் தவறியதுடன் குயுக்தியாக பல ஒப்பந்தங்களைச் செய்து ஸ்ரீலங்காவின் அமைதியை நிரந்தரமாக அழித்தார் என்ற அவமானத்தை ரணில் சந்திக்க நேரலாம் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஸ்ரீலங்காவின் எதிர்கட்சிகளின் விருப்பம் மட்டுமல்ல பிரார்த்தனையும் அதுவாகவே இருக்கும்.






PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்

- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

# அமைச்சரவைக் கூட்டத்தை எங்கு நடத்துவது?

## ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் மோதல்!

தேசியஅரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் ஆரம்பமாகியுள்ள அதேவேளையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையேயான பனிப்போர் ஒரு அரசியலமைப்புச் சிக்கலாகத் தீவிரமடையத் தொடங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் செயலகத்தில் நடத்தப்படவேண்டுமா அல்லது டி.எஸ்.சேனநாயக்கா காலத்திலிருந்து நடத்தப்பட்டதைப்போல வெளிவிவகார அமைச்சிலுள்ள அமைச்சரவை அலுவலகத்தில் நடத்தப்படவேண்டுமா என்பதில் தான் இரு தரப்பினருக்கும் இடையே இப்போது முறுகல் நிலைமை தீவிரமடைந்திருக்கின்றது.

அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியே கொண்டு வருவதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவை சற்று ஓரங்கட்ட முடியும் என அமைச்சர்கள் கருதுகின்றார்கள் போலுள்ளது.

அதேவேளையில் ஜனாதிபதி மாளிகைக்கு அடுத்த கட்டத்தில் அதாவது அதியுயர் பாதுகாப்பு வலயத்திலேயே அமைச்சரவை அலுவலகமும் அமைந்துள்ளபோதிலும் அங்கு செல்வதை ஒரு கௌரவக்குறைவாகக் கருதும் ஜனாதிபதி பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்திருக்கின்றார்.



> ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வராத பட்சத்தில் அமைச்சரவைக் கூட்டங்களிலிருந்து அவர் ஒதுக்கி வைக்கப்படுவது தவிர்க்கமுடியாதது.

இந்த இரு சம்பவங்களும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான பனிப்போரை மற்றொரு கட்டத்துக்கு கொண்டு வந்துள்ள அதேவேளையில் அடுத்த அமைச்சரவைக் கூட்டம் எங்கு நடைபெறும் என்ற கேள்விக்குறியையும் எழுப்பியுள்ளது.

மே 23 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இக்கூட்டத்தை நடத்துவதற்கான இடத்தை மாற்றவேண்டும் என்ற யோசனை முன் வைக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையே இது வாய்த்தர்க்கத்தையும் ஏற்படுத்தியது. பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கவேண்டும் என அமைச்சர்கள் அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்தே இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அமைச்சரவை அலுவலகம் ஜனாதிபதி மாளிகைக்கு அடுத்ததாகவுள்ள வெளியுறவு அமைச்சில் அமைந்துள்ளது. ஜனாதிபதிக்கான விசேட அதிபாதுகாப்பு வலயப் பகுதியிலேயே இது அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதியிடம் விசேடமாகவுள்ள சுமார் 1600 ஜனாதிபதி பாதுகாப்புப் படையினருக்கு மேலதிகமாக நூற்றுக்கணக்கான அதிரடிப் படைக் கமாண்டோக்களும் இப்பகுதியில் இருபத்து நான்கு மணி நேரமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இவற்றுக்கு மத்தியில் கடந்த வாரத்துக்கான அமைச்சரவைக் கூட்டம் மே 29 ஆம் திகதி அமைச்சரவை அலுவலகத்தில் கூட்டப்பட்டது. தனது பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இதில் தான் கலந்து கொள்ளவில்லை என ஜனாதிபதி அறிவித்தார். அதேவேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிநாடு சென்றிருந்தால் அமைச்சரும் ஐதேக வின் பிரதித் தலைவருமான கரு ஜெயசூரியா தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கரு ஜெயசூரியாவுடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டம் எங்கு நடைபெறவுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார்.

அமைச்சரவை அலுவலகத்தில் நடைபெறும் என்றால் பாதுகாப்புக் காரணங்களால் தன்னால் கலந்து கொள்ள முடியாதிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் ஜனாதிபதியுடன் கடும் போக்கைக் கடைப்பிடித்து வரும் அமைச்சர்களான எஸ்.பி.திசநாயக்கா, ரவி கருணாநாயக்கா, ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றுவதற்கு தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இருந்தபோதிலும் அமைச்சரவையின் செயலாளருக்கு இக்கூட்டத்தை ஜனாதிபதி மாளிகையிலேயே நடத்தவேண்டும் என அறிவித்த ஜனாதிபதி, தனது இணக்கம் இல்லாமல் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் எதுவும் சட்டரீதியானதாகக் கருதப்படமாட்டாது எனவும் அறிவித்தார்.

இது தான் ஒரு அரசியலமைப்புப் பிரச்னையை உருவாக்கியிருக்கின்றது.

ஜனாதிபதி கலந்து கொள்ளாவிட்டாலும் அவரது சம்மதம் இல்லையென்றாலும் அமைச்சரவைக் கூட்ட முடிவுகளைச் சட்ட விரோதமாக்கமுடியாது என அமைச்சர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையேயான பனிப்போர் தீவிரமான ஒரு யுத்தமாக மாற்றமடைந்து வருவதைத் தான் இது காட்டுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடு திரும்பியுள்ள நிலையில் இவ்வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் நிலை எவ்வாறானது என்பது வெளிப்படையாகத் தெரிய வரும்.

ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வராத பட்சத்தில் அமைச்சரவைக் கூட்டங்களிலிருந்து அவர் ஒதுக்கி வைக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகி விடும். அதேவேளையில் அமைச்சர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக் கொடுக்கக்கூடிய நிலை காணப்படவில்லை. தன்னுடைய எதிர்காலம் பற்றி முடிவெடுக்க வேண்டியவராக ஜனாதிபதியே உள்ளார்.

---

### குத்தூசியின் கொழும்புக் கோலங்கள்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் யார்?

## கட்சிக்குள் ஆரம்பமாகியுள்ள தீவிர போட்டி

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரையில் அவர் இரு பக்க யுத்தம் ஒன்றை எதிர்கொள்ள வேண்டியவராக உள்ளார். ஒருபுறம் அரசாங்க அமைச்சர்கள் கொடுக்கும் நெருக்கடி. மறுபக்கம் கட்சிக்குள் தோன்றியுள்ள முரண்பாடுகள். அரசாங்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போலவே உட்கட்சிப் பிரச்னையும் தீவிரமானதாக அமைந்துள்ளது. ஜூன் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்துக்கு முன்னோடியாக கட்சியின் அமைப்பாளர்களைச் சந்தித்து முக்கியமான பேச்சுக்களை ஜனாதிபதி நடத்தி வருகின்றார்.

முக்கியமாக கட்சிக்கு உப தலைவர் ஒருவரை நியமிப்பது தொடர்பான விவகாரம் கட்சியில் குழப்பங்களை உருவாக்குவதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சியின் உபதலைவராக நியமிக்கப்படுபவரே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் சார்பில் போட்டியிடுபவராக இருக்கும் என்பதால் அப்பதவிக்கான போட்டி கடுமையானதாக இருக்கும் என கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

உப தலைவர் விவகாரத்தைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை நோக்கியே அனைவரது பார்வையும் இப்போது திரும்பியுள்ளது.

உப தலைவர் பதவிக்கு ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய அரசியல் நடவடிக்கைகளை உடனடியாகவே ஆரம்பிக்க வேண்டியவராக இருப்பார் எனக் கருதப்படுகின்றது. இந்த வகையில் உபதலைவர் பதவிக்காக தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் தான் மகிந்த ராஜபக்ஷ தமது அரசியல் நடவடிக்கைகளை அண்மைக் காலத்தில் தீவிரப்படுத்தியிருக்கின்றார் என்பதும் கவனிக்கத்தக்கது. சமாதான முயற்சிகளைப் பொறுத்த வரையில் மௌனமாக இருந்த மகிந்த இரு வாரங்களுக்கு முன்னர் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் விலைவாசி உயர்வை எதிர்த்தும் நாடு தழுவிய ரீதியான மக்கள் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

இவை போன்ற நடவடிக்கைகள் அவரைப் பலப்படுத்தியுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பொதுஜன முன்னணி அதிகாரத்தை இழந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷவுக்கான பிரதான போட்டியாளராக அநுரா பண்டாரநாயக்காவே கருதப்பட்டு வருகின்றார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் இந்தப் பதவிக்கான ஒரு போட்டியாளராகக் கருதப்பட்டபோதிலும் கண்டிப்படுகொலைகளைத் தொடர்ந்து அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தமையால் அவரது நிலைமை பலவீனமடைந்திருக்கின்றது. கடந்தவாரம் பிணையில் விடுதலை செய்யப்பட்ட ரத்வத்தைக்கு வழங்கப்பட்ட வரவேற்பின் பின்னணியில் அவரை கட்சியின் உப தலைவர் பதவிக்கு கொண்டு வரும் திட்டம் ஒன்று உள்ளதாகக் கூறப்பட்டாலும் அதில் உண்மையில்லை என்றே கட்சிப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ரத்வத்தையை முக்கிய பதவிக்கு கொண்டு வருவது கட்சியின் பெயரைக் களங்கப்படுத்திவிடும் எனவும் ஒரு சாரார் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இருந்த காலகட்டத்தில் தான் 1991 இல் உபதலைவர் பதவி முதன் முதலாக உருவாக்கப்பட்டு அதற்கு சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்பட்டார். இது கட்சியின் அடுத்த வாரிசு சந்திரிகா தான் என்பதை உறுதிப்படுத்தியது.



அனுரா



மகிந்த

இந்தப் பின்னணியில் தான் அனுரா பண்டாரநாயக்கா தாயாரையும் சகோதரியையும் பகைத்துக் கொண்டு கட்சியிலிருந்து விலகினார். பின்னர் ஐதேக வில் இணைந்து கொண்டு கல்வி அமைச்சர் பதவியையும் பொறுப்பேற்று சில மாத காலம் அமைச்சராகவும் இருந்தார். 1994 ஆம் ஆண்டில் சந்திரிகா ஜனாதிபதியாகியபோது அனுரா எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தார். இருந்தபோதிலும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இறுதி ஆசையை நிறைவு செய்யும் வகையில் கடந்த தேர்தலுக்கு முன்னர் மீண்டும் சு.க.வில் அவர் இணைந்தார். அந்த நிலையில் சுதந்திரக் கட்சி தோல்வியடைய ஐதேமு அதிகாரத்துக்கு வந்திருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா அடுத்த ஜனாதிபதி தேர்தலுடன் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ள கட்சித் தலைமையைப் பொறுப்பேற்பது தான் அவரது நோக்கமாக இருந்தது. அதற்கு முன்னோடியாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்தது.


இப்போது உபதலைவர் பதவியைப் பெற்று ஜனாதிபதி வேட்பாளராகிவிடவேண்டும் என்ற இலக்குடன் தமது நடவடிக்கைகளை அவர் தீவிரப்படுத்தியிருக்கின்றார்.

அடுத்த தலைவர் யார் என்பது எதிர்வரும் 8 ஆம் திகதி தெரியவரும். அதுவரையில் பொறுத்திருப்போம்.

# அமெரிக்க வியூகத்துள் இலங்கை

மு.திருநாவுக்கரசு

அமெரிக்காவினது வெளியுறவுக் கொள்கையை விளங்கிக் கொள்வதிலிருந்தே எந்தவொரு தேசத்தினதும் உள்நாட்டுக் கொள்கையினையும், வெளிநாட்டுக் கொள்கையினையும் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.



எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய குறைந்த பட்ச தகவல்களின் அடிப்படையில் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை பற்றிய ஒரு உருவரையை பெருமளவு மேம்போக்காக இங்கு நோக்கலாம். அதிலிருந்து இலங்கை அரசியலையும் தொட்டுப் பார்ப்போம்.

இருபத்தியோராம் நூற்றாண்டு அமெரிக்கா பற்றிய அமெரிக்க கருத்துருவாக்கிகள் குழாத்தின் பொதுவாகன நோக்குநிலை பின்வருமாறு உள்ளது.

(1) அமெரிக்கா உலகின் அதியுயர் சக்தி வாய்ந்த நாடாக இருக்க வேண்டும்.

(2) அது ஒரேவேளையில் வல்லாமையும் அதிகாரத்தையும் கொண்ட நாடாய் இருக்க வேண்டும்

(3) அமெரிக்காவையும் அதன் நெருங்கிய நட்புநாடுகளையும் ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்தும், பயங்கரவாதத் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாக்க வேண்டும்.

(4) அமெரிக்கா தனது நட்பு நாடுகளையும் கூட்டாளி நாடுகளையும் காப்பாற்றி அவற்றை அமெரிக்காவில் தங்கி நிற்கக் கூடியவைகளாகச் செய்ய வேண்டும்.

(5)அதிதேசியவாத அச்சுறுத்தல், உபதேசியவாத அச்சுறுத்தல் என்பவற்றிலிருந்து உலகைப் பாதுகாத்தல் என்பனவாகும்.

(6) ஒரு தேச எல்லைக்குள் வாழும் பல்லின மக்களின் பல்வகைத் தன்மையை ஏற்றுக் கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதன் மூலம் உலகமயமாக்கலை விரைவுபடுத்த வழி காண்பது.

(7) பல்லினத் தன்மையான தீர்வை ஏற்படுத்துவதற்கு சமாதான வழிமுறை மூலமான உதவிகளையோ அல்லது இராணுவ வழிமுறை மூலமான உதவிகளையோ வழங்குதல். உதாரணமாக கொசோவா, பொஸ்னியா.

(8) இராணுவ எதேச்சாதிகார அரசுகளை ஜனநாயகமயப்படுத்தும் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல், உதாரணமாக உக்ரேன், நைஜீரியா, இந்தோனேசியா என்பவற்றில் மேற்கொண்ட திருத்தங்கள் போல

(9) உலக மயமாக்கலுக்கும் நவீன தேவைகளுக்கும் பொருத்தமான உள்நாட்டு அரசியல் சீர்திருத்தங்களைக் கோருதல், உதாரணமாக முதலீடு வர்த்தகம் என்பவற்றிற்குப் பொருத்தமான யாப்பு, மற்றும் சட்ட மாற்றங்களைக் கோருதல்.மனித உரிமைகளை நிலைநாட்டுதல்

மேற்படி தனது நோக்கங்களை அடைவதை இலக்காகக் கொண்டு அமெரிக்கா தனது அரசியல் இராணுவ பொருளாதார இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பெயரே அமெரிக்க வெளியுறவுக் கொள்கை என்பது.

மேற்படி அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை நோக்கங்களில் அது தமிழீழப் போராட்டத்தோடு சம்பந்தப்படும் இடங்கள் உள்ளன.

(1) பயங்கரவாதம் (2) உபதேசியவாத அச்சுறுத்தல் (3) மனிதஉரிமை மீறல்கள் (4) பல்லினத் தன்மையை ஏற்று அதற்குத் தீர்வு காண சமாதான ரீதியாகவோ அன்றி இராணுவ ரீதியாகவோ உதவுதல். இதற்குள் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் அடங்கும்.

மேற்படி நான்கு அம்சங்களும் நேரடியானவை. இவற்றை விட அமெரிக்காவின் பெருவெட்டான ஏனைய நலன்களுடன் இலங்கை - தமிழீழப் பிரச்சனை என்பன சம்பந்தப்படும். அதாவது உலக மயமாக்கற் பொருளாதார இராணுவ நலன்களோடும் தமிழீழப் பிரச்சனை சம்பந்தப்படும் இடங்கள் உள்ளன.

"பயங்கரவாதம்" உபதேசியவாத அச்சுறுத்தல். அமெரிக்க வெளியுறவுக் கொள்கை தமிழீழப் போராட்டத்திற்கு எதிர்நிலை அம்சங்களைக் கொண்டதாகும்.

மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் அமெரிக்க அரசு விடுதலைப்புலிகளைக் காட்டமாகவும் இலங்கை அரசை மிதமாகவும் குறைகூறுகின்றது. இதில் ஒரு பகுதி சாதகமும், ஒரு பகுதி பாதகமும் உண்டு.

அடுத்து "பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளல்" என்ற விடயத்தில் முதலாவது பகுதி சாதகமானது. அதாவது சிங்கள அரசு தமிழரினதும், ஏனைய இனங்களினதும் உரிமைகளை ஏற்று அங்கீகரித்து நடக்க வேண்டும் என்பது.

இது சிங்கள இனவாதத்தை அதன் பழைய பிடியிலிருந்து இறங்கி பல்லினத் தன்மைக்கேற்ற சீர்திருத்தங்களை மேற கொள்ளுமாறு கோருகின்றது. அடுத்து "பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளல்" என்பதன் இரண்டாவது அம்சம் தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, சிங்கள இனத்துடன் இணைந்து ஒரு அரசியல் தீர்வுக்குப் போக வேண்டும் என்பது.

மேலைத்தேய ரீதியிலான சமஷ்டி முறைமையின் கீழ் இலங்கையின் இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்க அரசின் நிலைப்பாடு. இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அண்மையில் கருத்து வெளியிடுகையில் சமஷ்டி முறைமையின் கீழ் தான் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், ஆனால் அமெரிக்கா ஒரு தீர்வைத் திணிக்காது என்றும் கூறினார்.

அண்மையில் ரணில்விக்கிரமசிங்காவைச் சந்தித்த பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் அவரிடம் தனது கருத்தைக் கூறுகையில் பிரித்தானியாவில் உள்ளது போன்ற அதிகாரப் பரவலாக்கல் முறையை இலங்கையில் பின்பற்ற வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதன்படி மேற்குலகம் சமஷ்டிமுறையிலான தீர்வையே இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வாக முன் வைக்கின்றன. இது மேற்குலகினது பெருவெட்டான கொள்கை நிலைப்பாடாக இருக்கின்ற நிலையில் சிங்கள அரசிடம் அவர்களால் சமஷ்டித்தீர்வு காண அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியுமா என்பதே முதலாவது கேள்வியாகும்.

கொசோவோ, பொஸ்னியா விவகாரத்தில் மேற்குலம் அதற்கெதிரான இராணுவ ரீதியான தலையீட்டின் மூலம் அரசியற் சீர்திருத்தத்தை - தீர்வை மேற்கொண்டது. அப்படி இலங்கை விவகாரத்தில் சிங்கள அரசிற்கு எதிரான இராணுவ ரீதியான தலையீட்டின் மூலம் மேற்குலகு அரசியற் சீர்திருத்தத்தை மேற்கொள்ளப் போவதில்லை.

இந்த விடயத்தில் சிங்கள அரசு தூக்கலான பக்கத்தையே கொண்டுள்ளது. இவ்வாறு இலங்கை அரசு விவகாரத்தில் மேற்குலகு நெகிழ்வாக நடக்க வேண்டியளவிற்கு இலங்கை அரசு சம்பந்தப்பட்ட நலன்கள் மேற்குலகுக்கும் அமெரிக்காவுக்கும் அதிகம் உள்ளன என்பதை முன் கூறியவாறான அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கைக்கான நோக்கங்கள் பலவற்றையும் அவதானிப்பதிலிருந்து புரிந்து கொள்ளலாம். அதாவது அமெரிக்காவின் பாரிய சுற்று வட்ட நலன்கள் பலவற்றுள் "பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளல்" என்பது ஒரு மிகச்சிறு வட்டமே. ஆதலால் இதுவும் ஒன்று என்று அமெரிக்கா கவனிக்குமிடத்து தனது முற்கூறிய பல நலன்களையும் குழப்பாத வகையிற்தான் பல்லினத்தன்மையை அது இலங்கையில் நோக்கும். அதாவது கிழக்கையோப்பாவின் பல்லினத்தன்மையைப் பார்க்கும் அதே கண்களால் தென்னாசியாவின் பல்லினத் தன்மைகளை அது பார்க்குமென்றில்லை.

உலகமயமாக்கற் பொருளாதார அரசியல் நோக்கம் பொறுத்து அமெரிக்காவிடம் பல்லினத்தன்மை பற்றிய பெருவெட்டான கொள்கை உண்டு தான். ஆனாலும் உலக மயமாக்கலுக்கான பிராந்திய அரசியல் பொருளாதார இராணுவ நிலவரங்களைக் கருத்திலெடுத்து அதற்கேற்பவே அது பல்லினத்தன்மை பற்றிய அணுகுமுறையை வேறுபடுத்திக் கையாளும்.

சிங்கள அரசை அமெரிக்காவும் மேற்குலகும் ஒருபோதும் பகைக்க விரும்பா. உலகமயமாக்கல் பொருளாதார, இராணுவ நலன்களுக்கு இலங்கை இப்போதும் மிகவும் அவசியம். இவற்றுக்கான கடல், வான்வெளி, இராணுவக் கேந்திர நலன்களுக்கு இலங்கையை ரணில் அமெரிக்காவிடம் தாரைவார்க்கச் சம்மதித்து விட்டார்.

இந்த நலன்களைப் பாதுகாத்துக் கொண்டு தான் இனவிவகாரத்தை அமெரிக்கா நோக்கும். இனவிவகாரத்தை சமாதான வழியில் தீர்த்து வைப்பது அமெரிக்காவின் மேற்படி நலன்களுக்கு இலகுவானது. ஆதலால் சமாதான வழியிலான தீர்வை அமெரிக்கா அதிகம் வற்புறுத்தும். ஆனால் சிங்கள மக்களை ரணிலின் அரசாங்கத்திற்கு எதிராகவும் அமெரிக்காவிற்கு எதிராகவும் திரளக்கூடியளவிற்கு அமெரிக்காவின் வற்புறுத்தல் அமைய முடியாது.

அமெரிக்கா தனதும் உலக நிறுவனங்களினதும் தனது நட்பு நாடுகளினதும் பொருளாதார உதவிகளை இலங்கைக்கு நிறுத்தினாலேயே போதும் இலங்கை அரசு தீர்வுக்கு வந்தாக வேண்டும். ஆனால் சிங்கள மக்களை பகைக்கும் அளவிற்கு அவர்களது மேற்படி தடைகள் அமைய முடியாது. ஆதலால் ஆளும் கட்சியையும் எதிர்கட்சியையும் சிங்கள மக்களையும் பகைக்க முடியாத அளவிற்குத் தான் தீர்வு பற்றிய அழுத்தங்களை சிங்கள அரசின் மீது அமெரிக்கா மேற்கொள்ளும்.

அதேவேளை புலிகளின் இராணுவ வல்லமையைப் பொருட்படுத்தியே தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்ற கவலை அமெரிக்காவிடம் இருப்பதுடன் மறுபுறம் சர்வதேச அரங்கில் தமிழீழக் கோரிக்கைக்கு அரச ரீதியான ஆதரவும் அங்கீகாரமும் இல்லை என்பது அமெரிக்காவிற்கு திருப்தியளிக்கக்கூடிய விடயமாகவும் உள்ளது. இந்தக் கவலைக்கும் திருப்திக்கும் இடையில் அமெரிக்காவின் நடை அமையும்.

அமெரிக்கா தன்னை உலக எஜமான் என்ற ஸ்தானத்தில் வைத்தே இப்போது அதனை சிந்திக்கின்றது. இலங்கைத்தீவின் பிச்சை புகுநிலையானது அமெரிக்காவின் ஆதிக்கம், அதிகாரம், அதுகாட்டும் கருணை, தாராண்மை, அது போடும் பிச்சை, என்பவற்றில் தங்கியிருப்பதிலேயே இலங்கைத்தீவின் தலைவிதியும் தங்கியுள்ளது.

(நன்றி - ஈழநாதம்)


WEXFORD CASH MART
FINANCIAL SERVICES

• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED

பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை

தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி

1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3

TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

# தமிழ்நாட்டில் ஈழத்தடயங்களின் மீளுருவாக்கம்...

கங்கைக் கரையில் காசிவிசுவ நாதர் விசாலாட்சியுடன் இருக்கிறார். அங்கு போய் நேரில் வழிபடமுடியாதவர்கள், தமிழ் நாட்டிலேயே தமது ஊர்களுக்கு காசியைச் சேர்த்த பெயரை வைத்து வழிபட்டுக் கொள்வார்கள்.

அவற்றுட்சில, சிவகாசி, தென்காசி, காசிதர்மம் என்ற தமிழ் நாட்டு ஊர்கள்.

சிங்கள இன வெறி தாக்குதல்களால் கதிர்காமத்திற்குப் போக முடியாதவர்கள யாழ்ப்பாணத்தின் நல்லூரில் கதிர்காமத் திருவிழா கொண்டாடுவர்.

மார்கழியில் யாழ்ப்பாணக் காரைதீவில் மாதம் முழுவதும் திருவிழா.

அங்கு, ஈழத்துச் சிதம்பரக் கோயிலில் பாடும் திருப்பள்ளிஎழுச்சியும், திருவெம்பாவையும் தில்லையில் கூத்தப் பெருமானுக்கே கேட்குமாம்.

இலங்கை அரசின் தடைகளைத் தாண்டி, தமிழ் நாட்டில் சிதம்பரத்திற்குப் போக முடியாதவர்கள் மார்கழி முழுவதும் ஈழத்துச் சிதம்பரத்தில் கூடுவார்கள்.

தில்லைச்சிற்றம்பலம் ஈழத் தமிழரின் நெஞ்சங்களில் நிறைந்த கோயில். யாழ்ப்பாணத்துச் சைவர்களுக்குச் சிதம்பரம் தாய்வீடு.

காங்கேயன்துறைக்கும் திருமறைக்காட்டுக்கும் இடையேயுள்ள கடலைக் கடந்து பாய்மரக் கப்பல்கள் பயணித்த காலங்களில் யாழ்ப்பாணத்தவர் அடிக்கடி சிதம்பரம் போவர். தில்லைக் கூத்தனை வழிபடுவர். திரும்பி யாழ்பாணம் வருவர்.

இப்புனிதப் பயண மரபு நெடுங் காலம் தொடர்வது. வழி வழியாக அடி தவறாமல் யாழ்ப்பாணத்தவர் சிதம்பரம் போய் வருவதை நெறியாகக் கொள்வர்.

யாழ்ப்பாணக் குட நாடு முழுவதும் தில்லைத் திருக்கோயிலுக்குச் சொந்தமான காணிகள் ஏராளமாக உள்ளன.

ஆண்டுதோறும் தில்லைவாழ் அந்தணர் சிலர் யாழ்ப்பாணம் வருவதும் அக்காணிகளின் வருமானத்தைத் திரட்டுவதும், தில்லைக்கு எடுத்துச் செல்லுதலும் தொன்றுதொட்டு வரும் மரபு.

தில்லைத் திருக்கோயிலைச் சுற்றிய வீதிகளில் யாழ்ப்பாணத்தார் தங்குவதற்காகக் கட்டிய மடங்கள் நெடுங்காலமாக உண்டு. ஞானப்பிரகாசர் குளத்தை ஒட்டிய திருவீதியில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட மடங்கள் உள்ளன.

ஒவ்வொரு மடத்திற்கும் ஒவ்வொரு பெயருண்டு. கொக்குவிலார், கொக்குவில் மடத்தில் தங்குவர். காரைநகரார், காரைநகர் மடத்தில் தங்குவர். பல்வேறு குழுக்கள் சார்ந்த மடங்களாக அவை அங்குண்டு. கடந்த முப்பது ஆண்டுகளாக இம்மடங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாடு அல்லோல கல்லோலப்பட்டுள்ளது.

சிதம்பரப் பயணங்கள் தடைபட்டு விட்டன. இந்தச்சூழல் சிதம்பரத்தின் சமூக விரோதிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. பல மடங்கள் சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளன. சில மடங்கள் தொடர்பாக வழக்குகளும் உள்ளன.




மறவன்புலவு
க.சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குச் சிதம்பரத்தில் நிலங்கள் உள்ளன. சபையின் புண்ணிய நாச்சி அறக்கட்டளைக்கு சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் மடம் உள்ளது. நாற்சார வீடாக அமைந்த அந்த மடம் கடந்த சில ஆண்டுகளாகப் பயன்படாமலேயே இருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து சிதம்பரம் செல்பவர்கள் தங்குவதற்கான வசதிகள் அரிதாகின.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைச் செயலாளராக இருந்தவர், கரம்பனைச் சேர்ந்த திரு. சண்முகலிங்கம். கரம்பன் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த அவர் யாழ்ப்பாணத்தின் தொழிலதிபர்களுள் ஒருவர். கடந்த இருபது ஆண்டுகளாக யாழ்ப்பாணம் உருக்குலைந்த நிலையில், திரு. சண்முகலிங்கம் சிதம்பரத்திற்கு அடிக்கடி வந்தார். நடராசப் பெருமானை வழிபட்டார். புண்ணியநாச்சி அறக்கட்டளை மடத்தின் சீர்கேட்டைப் பார்த்தார். தனக்குத் தெரிந்த ஈழத்துத் தொழிலதிபர்களை அழைத்தார். சிதம்பரத்திலுள்ள புண்ணியநாச்சி மடத்தின் பழைய கட்டிடத்தை இடிக்க வேண்டும். புதிய அறைகள் கட்டவேண்டும் எனத் திட்டம் தீட்டினார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இவரது திட்டத்தை ஆதரித்தது.

ஈழத்தொழிலதிபர்களும் இவருக்கு ஆதரவு தந்தனர். நான்கு ஆண்டுகளாக இடைவிடாத முயற்சி செய்த திரு. சண்முகலிங்கம் பல அறைகளும், தங்கு கூடமும், கழிப்பறைகளும், குழியலறைகளும் கொண்ட நவீன மடம் ஒன்றை அமைத்தார்.

2002 ஜுன் 2 ஞாயிற்றுக்கிழமை புண்ணிய நாச்சி அறக்கட்டளையின் சிதம்பரம் மடத்தின் திறப்பு விழா கோலாகால மாக நடந்தது.

சிதம்பரம் நகராட்சி மன்றத் தலைவர் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் அறக்கட்டளையின் சிதம்பரத் தலைவரும் அறங்காவலரும் கலந்து கொண்டனர்.

சிதம்பரம் நகரத்தின் முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர். நடராசப் பெருமான் அருள் பெருக்க, ஈழத்து அடியவருக்காகப் புண்ணிய நாச்சி மடம் சிதம்பரத்தில் மீளுருவாகிப் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

ஈழத் தமிழர், தமிழ் நாட்டில் தமக்குரிய பாரம்பரியங்களை மீள அமைப்பதில் திரு. சண்முகலிங்கம் முதலடியை எடுத்து வைத்துள்ளார்.

சென்னையில், திருவண்ணாமலையில், சிதம்பரத்தில், திருமறைக்காட்டில், கோடைக் கானலில், மதுரையில், திருச்செந்தூரில், இராமேச்சரத்தில் ஈழத் தமிழருக்கு ஏராளமான அறக்கட்டளைசார் சொத்துகள் உள்ளன.

கடந்த முப்பது ஆண்டுகளாக இலங்கை-இந்தியப் பயணங்களில் ஏற்பட்ட தடைகள், இடையூறுகள் ஈழத் தமிழர் இந்தச் சொத்துக்களை ஆட்சி செய்ய முடியாமல் தடுத்தது.

இதனால் தமிழ் நாட்டிலுள்ள சிலர் இச்சொத்துக்களின் மீது உரிமை கொண்டாடத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி, வரணி ஆதீனத்தின் ஆட்சியின் கீழ் கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகத் திருமறைக்காடு திருக்கோயில் உள்ளது.

ஈழத்தவர் ஆட்சியை மாற்றித் தமிழகத்தவரிடம் திருமறைக்காடு திருக்கோயிலின் ஆட்சியைக் கொடுக்க வேண்டுமென்றே வழக்குகள் பலமுறை வந்து தோல்வி கண்டுள்ளன.

பொன்னம்பலம் இராமநாதன் கூட ஒருமுறை சென்னையில் இந்த வழக்கில் வாதாடி வெற்றிகண்டுள்ளார். இப்பொழுதும் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது.

துணிச்சல்காரரான திரு. சண்முகலிங்கம் சந்தடியில்லாமல், சலசலப்பில்லாமல் சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தாரின் உரிமையை நிலை நாட்டியுள்ளார்.

தமிழகமெங்குமுள்ள ஈழத்தமிழரின் அறக்கட்டளைச் சொத்துக்களை மீட்டெடுக்க முயலும் முதலடியாக இவரின் முயற்சியைக் கொள்ளலாம்.

தொன்று தொட்டுப் பாக்கு நீரிணையைக் கடந்து தமிழ் நாட்டுக்கு வந்த ஈழத் தமிழ்த் தலைமுறைகளின் எழுகின்ற எச்சங்கள் என்றென்றும் தமிழ் நாட்டிற்குத் தொடர்ந்து வரவும் கோயில்களை வழிபடவும் தங்கு தடையின்றி வழி பிறக்குமாக.

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• ரொட்டி
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

# இடைக்கால நிர்வாக சபையா? தொடரும் அரசின் தடுமாற்றம்!

சிறப்புக் கட்டுரை

பேராசிரியன் எழுதுவது

'தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின்போது (?) நிகழ்ச்சிநிரலில் முதலாவதாக இடம் பெறப்போகும் அம்சம் எது?
இது தொடர்பான சர்ச்சைகளும் வாதப் பிரதிவாதங்களும் இப்போது தீவிரமடைந்திருக்கின்றன.
விடுதலைப் புலிகள் தரப்பும் அரசாங்கத் தரப்பும் இது தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதிலும் நோர்வேயின் அனுசரணையாளர்கள் புதிய பிரச்னைகளை எதிர்கொள்ளவேண்டியவர்களாக உள்ளார்கள்.
இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவே முதலில் பேசுவதற்கு தயாராக இருந்த அரசாங்கம் சிங்களவர்கள்மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புக்களாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்தள்ள நிலைப்பட்டாலும் இப்போது தடுமாறத் தொடங்கியுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.
இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களை விட இன நெருக்கடிக்குக் காரணமான அடிப்படை - ஆணிவேர்ப்பிரச்னைகள் தொடர்பாகப் பேசி இணக்கம் க ாண்பதில் தான் முதற் கவனம் செலுத்தப்படுதல் அவசியம் என அரசாங்கத் தரப்பும் இப்போது கருத்தை வெளியிட்டிருக்கின்றது.
இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தம்மைத் தயார்ப்படுத்தியிருந்த விடுதலைப் புலிகள் இப்போது தமது உபாயங்களை மாற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயத்துக்கு வந்திருப்பதாகவே தெரிகின்றது.
அடிப்படைப் பிரச்னைகள் தொடர்பாக முதலில் ஆராயப்படவேண்டிய தேவை ஏற்பட்டால் தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளை முன் வைப்பது தான் விடுதலைப் புலிகளின் உபாயமாக இருக்கும்.
அதாவது தமிழர்களின் பாரம்பரிய தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை தமதுகோரிக்கைகளாக எந்த ஒரு தீர்வு யோசனையிலும் உள்ளடக்கப்படவேண்டிய அம்சங்களாக விடுதலைப் புலிகள் முன் வைப்பார்கள் என புலிகளுடன் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.
இது அரசாங்கத்தை இக்கட்டான ஒரு நிலைமைக்கு இட்டுச் செல்லும்.
பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாத நிலைமையையும் ஏற்படுத்தலாம்.
இனநெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக இடைக்கால நிர்வாக சபை ஒன்று வடக்கு - கிழக்குப் பகுதிக்கென அமைக்கப்படவேண்டும் என்ற யோசனையை இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுமே முதலில் வெளியிட்டன.
பொ.ஜ.மு. தமது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இது தொடர்பாகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.
அதன் பின்னர் கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடைக்கால நிர்வாகசபை பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.
தாம் அதிகாரத்துக்கு வந்தால் 'குறுகிய காலத்துக்கான இடைக்கால நிர்வாகசபை ஒன்று வடக்கு கிழக்குக்கு அமைக்கப்படும்'' என இந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.
எவ்வளவு காலத்துக்கு என திட்டவட்டமாகத் தெரிவிப்பதிலுள்ள சங்கட நிலைமையைக் கருத்திற்கொண்டே 'குறுகிய காலம்' என்ற வரையறை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.
வடக்கு கிழக்கை ஐ.தே.மு. விடுதலைப் புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்போகின்றது என பொ.ஜ.முன்னணியும் ஜேவிபியும் பிரச்சாரங்களை நடத்துவதற்கும் யானை - புலி கூட்டு என்ற அவர்களது பிரதான கோஷத்துக்கும் இது தான் காரணமாக அமைந்தது.
'இடைக்கால நிர்வாக சபை' என்பது சிங்கள மக்கள் மத்தியில் இனவாத நோக்கத்துடன் பிரச்சாரப்படுத்தப்படும் என்பது ஐதேமு தலைவர்களுக்குத் தெரியாததல்ல.
இருந்த போதிலும் அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையிலும் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்காக வைத்துமே இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.
மறுபுறத்தில் இதனைப் பெரிதாகப் பிரச்சாரப்படுத்துவதை அவர்கள் தவிர்த்துக் கொண்டமைக்கான காரணமும் புரிந்து கொள்ளக்கூடியது தான்.
அடுத்ததாக இந்த இடைக்கால நிர்வாகத்தை யாரிடம் கையளிப்பதற்கு ஐதேமு திட்டமிட்டிருந்தது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

## இடைக்கால நிர்வாக சபை விடுதலைப் புலிகளிடம்?

இடைக்கால நிர்வக சபையை உண்மையில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது தான் ஐதேமு யின் உத்தேசமாக இருந்தது.
அரசியல் யதார்த்தமும் அது தான்.
வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளை முன்னிலைப்படுத்தி பொதுத்தேர்தலைச் சந்தித்த தமிழ்த்தேசிய முன்னணிக்கு மக்கள் அங்கீகாரத்தை வழங்கியுள்ள நிலையில் மக்களுடைய விருப்பமாகவும் அதுவே கணிக்கப்படவேண்டியதாக உள்ளது.
ஐதேமு அரசு இதனை வெளிப்படையாகச் சொல்வதற்குத் தயங்கியபோதிலும் அதன் உத்தேசமாக அது தான் இருந்தது என்பதை தமிழ்க்கட்சிகளுடனான பேச்சுக்களின்போது அது உணர்த்தியிருந்தது.
விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் பேச்சுக்களையும் ஆரம்பிக்கவுள்ள நிலையில் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒரு அரசியல் யதார்த்தமாகவே கருதப்பட்டது.
இருந்தபோதிலும் 'பேச்சுக்கான பேச்சுக்கள்' ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இவ்விடயத்தில் அரசாங்கத்திடம் தடுமாற்றத்தைக் காண முடிந்தது.
சிங்கள கடுங்கோட்பாட்டாளர்களைத் திருப்திப்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முனைந்தார்.
விடுதலைப் புலிகளை மட்டும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக கருதவில்லை.
இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் மட்டும் கையளிக்கவும் விரும்பவில்லை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது தொனியை மாற்றத் தொடங்கினார்.
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வைத்த 'பொறி' யில் அவர் மெல்ல மெல்ல விழத் தொடங்கினார்.
இதன் உச்சக்கட்டமாகத் தான் தாய்லாந்துப் பேச்சுக்களின்போது நிகழ்ச்சி நிரலில் இடைக்கால நிர்வாகத்தை பின் தள்ளிவிட்டு அடிப்படை அரசியல் பிரச்னைகளை முதலில் பேசவேண்டும் என்ற யோசனையை அரசாங்கம் இப்போது தெரிவிக்கத் தொடங்கியிருக்கின்றது.
அரசாங்கத்தின் இந்த உபாயம் சமாதானப் பேச்சுக்களை சுமுகமாக முன்னெடுப்பதற்கு உதவுமா அல்லது தற்போது உருவாகியுள்ள சமாதானச் சூழ்நிலையைச் சீர்குலைப்பதற்கு உதவுமா என்பது தான் அடுத்த கேள்வி.

## சமாதான முயற்சிகளில் இடைக்கால நிர்வாகம்

சிக்கலான தேசியப் பிரச்னைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளின்போது இடைக்கால நிர்வாக சபை போன்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தை பிணக்குகளுக்கு தீர்வு காண்பதில் அனுபவத்தைக் கொண்டுள்ள பலரும் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.
இலங்கைப் பிரச்னையில் கூட இவ்வாறான ஒரு அணுகுமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே உள்ளது.
1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திட்டபோது கூட வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட்டது.
விடுதலைப் புலிகளின் தலைமையில் அவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாக அமைக்கப்பட்ட அந்த சபையில் தமிழர் விடுதலைக்கூட்டணி மற்றும் ஈரோஸ் ஆகிய அமைப்புக்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.
அப்போதைய அரசியல் யதார்த்தங்களின் அடிப்படையில் இந்தச் சபை அமைக்கப்பட்டபோதிலும் இந்த இடைக்கால நிர்வாக சபைக்கான தலைவரை நியமிப்பதில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளால் அந்த முயற்சி சீர்குலைந்தது என்பது வேறுகதை.
தாய்லாந்துப் பேச்சுக்களின் இதயமாக இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களே இருக்கவேண்டும் என நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்டுள்ளவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகருமான பிரட்மன் வீரக்கோன் அண்மையில் தெரிவித்திருந்தார்.
சமாதான முயற்சிகளுக்குத் தமது ஆதரவை வழங்கி வரும் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட போன்ற புத்திஜீவிகளும் இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்பட்டு அது விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் அது தொடர்பான பேச்சுக்கள் தான் நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக இடம் பெறவேண்டும் என்பதையும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்கள்.
சமாதானப்பேச்சுக்களை சுமுகமான முறையில் முன்னெடுப்பதற்கு சிறந்த அணுகுமுறை இது தான் என்பது தான் அவர்களது அபிப்பிராயம்.

## விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தான் என்ன?

முதலில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசவேண்டும் என்பதில் தான் விடுதலைப் புலிகள் உண்மையாகவே அக்கறையாகவுள்ளார்கள்.
ஆனால் இது சிங்களப் பேரினவாதிகள் பிரச்சாரம் செய்வதைப் போல வெறுமனே அடிப்படைப் பிரச்னைகளைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஒரு உபாயமல்ல.
இது தொடர்பாக ஏப்ரல் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.
'இன நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வைக்காணக்கூடிய திட்டம் ஒன்றை முன் வைத்து அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய பலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கும் என நாம் கருதவில்லை.
அதனால் தான் தாய்லாந்துப் பேச்சுக்களில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவே முதலில் பேசவேண்டும் என

(27ம் பக்கம் பார்க்க)

# இப்படியும் நடக்கிறது

நீண்ட காலத்திற்குப் பின்னர் அவர் வீட்டுக்கு வந்திருந்தார்.

அவரையும் அவர் மனைவியையும் நீண்ட காலமாகவே எனக்குத் தெரியும்.
அவர் மனைவி மிக வறிய குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்ந்தவர்.
எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து எமது கிராமத்தில் உள்ள தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்துகொண்டே தனது படிப்பையும் அவர் தொடர்ந்ததைப் பார்த்து நான் எனக்குள் அவரைப் பலதடவை பாராட்டியும் இருக்கின்றேன்.
பாரிஸில் பலவருடங்களாக இப்போது வாழ்ந்துவரும் அவர்கள் நீண்ட காலத்திற்குப் பின்னர் வீட்டுக்கு வந்திருந்தனர்.
அவர்களைக்கண்ட மகிழ்ச்சியில் நேரம் போவதே தெரியாமல் கதைத்துக்கொண்டிருந்தோம்.
ஊரில் அந்த நாட்களில் நடந்த சம்பவங்களையெல்லாம் எல்லோருமாக இரை மீட்டோம்.
அந்த நாள் ஞாபகங்கள் என்றாலே சுகமான அனுபவங்கள் தானே.
நீண்ட நேரத்திற்குப் பின்னர்தான் அவர்கள் எம்மிடம் விடைபெறத் தயாரானார்கள்.
இருவரும் எம்மிடம் விடைபெற்றுவிட்ட போதிலும் இருவரும் ஏதோ இரகசியம் கதைத்தார்கள். பின்னர் அவர் மாத்திரம் வெளியேறினார்.
எனக்கு ஏன் என்பது புரியவில்லை.
சிலவேளை எதையோ எமக்கு எடுத்துவந்திருக்கிறார்கள் போலும். காரில் விட்டுவிட்டு வந்துவிட்டதால் எடுக்கப் போகிறார் என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன்.
சில நிமிடங்கள் சென்றிருக்கும். அவர் கையில் இருந்த கைத் தொலைபேசி மணி அடித்தது.
உடனே இவர் எம்மிடம் விடைபெற்றார்.
விடைபெற்றவர் பேசாமல் போயிருந்தால் இந்தப் பத்தியையே எழுதவேண்டி வந்திருக்காது.
அவர் சொன்னது இதுதான்.
''அவரை முதலில அனுப்பினனான்... ஏனெண்டால்... காருக்குள்ள போய் ஏசி யை ஒன் பண்ணி காரை கொஞ்சம் கூல் ஆக்கச் சொல்லி....''

–ஊர்க்குருவி

# ஈழத்தமிழர்கள் நம்பிக் கெட்டது இராமநாதன் காலத்திலேயே ஆரம்பம்

## ஈழவேந்தன்

நாம் விரும்பினாலும் சரி. விரும்பா விட்டாலும் சரி ஈழத்தமிழன் வரலாறு துயர் தோய்ந்ததாகவே விளங்குகின்றது. சிங்களத் தலைமைப்பீடம் எம்மை ஏமாற்றியது ஒரு புறம் இருக்க நாம் தெரியாத நிலையில் ஏமாந்ததும். தெரிந்த நிலையில் ஏமாந்ததும் ஏமாற உடந்தையாக இருந்ததும். நாம் அறிந்துள்ள கசப்பான பாடங்கள்.

சிங்களவர்கள் மூடர்கள். நாமோ அறிவாளி கள் என்று நம்மை நாமே அடிக்கடி தேற்றிக் கொள்கிறோம். ஆனால் இலங்கை வரலா ற்றை நாம் உன்னிப்பாகக் கவனித்தால் சிங்களவர்களாகிய மூடர்கள் அறிவாளிகளா கிய எம்மைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்ததுக்கு வரலாற்றில் நிறையச் சான்றுகள் உண்டு.

இலங்கையின் விடுதலை வரலாற்றை நாம் உன்னிப்பாகக் கவனிப்போமானால். விடுதலை வரலாற்றில் ஈழத்தமிழர்களின் பங்களிப்பே மிகப்பெரிதாக இருந்தது என்பதற்கு எண்ணற்ற சான்றுகளுண்டு.

இரு தமிழ்த் தலைவர்களது சிலைகள் தான் இலங்கை நாடாளுமன்ற முன்றலில் முதலில் நிறுவப்பட்டன என்பதை எவரும் மறந்து விட முடியாது. ஒருசிலை சேர். பொன். இராமநாதனின் சிலை. மற்றது அவரது தம்பி சேர்.பொன். அருணாசலத்தின் சிலை.

பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகை தரும் அறிஞர்கள் அனைவரையும் அப்ப டியே ஆட்கொள்கின்ற முறையில் கம்பீரமாக இந்த இரு சிலைகளும் காட்சியளிக்கின்றன. இந்தச் சிலைகளின் கீழ் இவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த இரு வரும் இலங்கை அரசியலை ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் ஆட்கொண்டி ருந்தமையை ஏற்றமுற எடுத்துரைக்கி ன்றன.

### சேர்.பொன்.இராமநாதன் வரலாறு

1879 இல் தனது 28வது வயதில் நல்லை ஆறுமுகநாவலரின் ஆதரவோடு சட்டநிரு பண சபையில் காலடி எடுத்து வைத்தோடு சேர்.பொன்.இராமநாதனின் அரசியல் வரலாறு தொடங்குகின்றது.

1979 தொடங்கி 1930 வரை ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் அவரின் ஆளு மைக்குட்பட்ட அரசியல் வாழ்வே இலங்கை யில் நிலவியது. இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா. இராமநாதனின் இறுதிக்காலத்தில் அவரோடு பல விடயங் களில் மாறுபட்டிருந்தார். ஆனால் அவர் மறைந்த போது *"The greatest ceylonese of all time"* (எல்லாக் காலங்களிலும் தலை சிறந்த இலங்கையர்) என்று டி.எஸ்.சேன நாயக்கா கூறியது வரலாற்றில் வரையப்பட்டு ள்ள ஒரு நிகழ்வாகும்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்று மகாத்மா மறைந்த போது அறிஞர் அண்ணா கூறியிருந்தார்.

அதுபோலவே இராமநாதனோடு இறுதிக் காலத்தில் சிங்களத் தலைமைப்பீடம் முட்டி மோதிய போதும் இராமநாதனின் தலையாய ஆளுமையை எவரும் எளிதில் புறக்கணிக்க முடியவில்லை.



சேர்.பொன். அருணாசலம்

சேர்.பொன். இராமநாதனுக்கு அடுத்த நிலையில் விளங்கியவர் தான் சேர்.பொன். அருணாசலம். அவர் தமிழ். ஆங்கிலம். வட மொழியாகிய மும்மொழிகளின் ஊற்றாக இருந்தவர். வள்ளுவன் சாற்றிய சான்றா ண்மைக்குச் சான்றாக விளங்கியவர்.

> "சிங்களவர்கள் மூடர்கள். நாமோ அறி வாளிகள் என்று நம்மை நாமே அடிக்கடி தேற்றிக் கொள்கிறோம். ஆனால் இலங்கை வரலாற்றை நாம் உன்னிப்பாகக் கவனித் தால் சிங்களவர்களாகிய மூடர்கள் அறி வாளிகளாகிய எம்மைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்ததுக்கு வரலாற்றில் நிறையச் சான்றுகள் உண்டு"

இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராக விளங்கிய இவர் பல்கலைக்கழக இயக்கம். தொழிற்சங்க இயக்கம். அரசியல் இயக்கம் என்று பல இயக்கங்களுக்கு தந்தையாக விளங்கியவர். பல்கலைக்கழக இயக்கம் இங்கு முறையாக வடிவம் பெற இவர் ஆற்றிய பணியை அறிஞர உலகம் வியந்து போற்றுகின்றது. இவரின் நூற்றாண்டு விழாவின் போது *The father of the lobour movenment ceylon* (இலங்கையின் தொழிற் சங்கங்களின் தந்தை) என்று அன்று கம்யூனி ஸ்ட் கட்சித் தலைவர் பீற்றர்கெனமன் கூறிய கூற்று இன்று எம் நினைவலைகளில் மோதுகின்றது.

காந்தியடிகளின் அரசியல்குரு கோபால கிருஷ்ண கோகலே. இத்தகைய தலைவர் களுக்கும் தொழிற்சங்கத் துறையில் சேர். பொன்.அருணாசலம் வழிகாட்டியாக விளங் கினார்.

### சிங்களவர்களைக் காப்பாற்றிய இராமநாதன்.

சிங்கள மக்கள் தமது இனஉணர்வு. மொழி உணர்வு அற்ற நிலையில் தம் தனித்துவத்தை இழக்கும் ஆபத்திற்குள் ளாகி இருந்த போது *If sinhala lipswill not speak the sinhala languaga who else there to speak it* (சிங்களவர்கள் சிங்களத்தைப் பேசாசு விடின் யார் சிங்களத்தைப் பேச உள்ளனர்) என்று 1904 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாண்காம் திகதி ஆனந்தாக் கல்லூரியில் சேர்.பொன்.இராமநாதன் முழுங் கிய முழக்கம் தான் சிங்களவர்களை இன உணர்வும். மொழிஉணர்வும் கொள்ளச் செய் தது.

இராமநாதன் 1911 இல் அகில இலங்கை அடிப்படையில் படித்தோர் தொகுதிக்குப் போட்டியிட்டு சிங்களப் பெருந்தகை(பிரபு) மார்க்கஸ்- பெர்னாந்துவைத் தோற்கடித் திருந்தார். இதே இராமநாதன் 1915 இல் சிங்கள. முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது தம் உயிரைத் துச்சமென மதித்து முதலாம் உலகப் போர் நடைபெற்ற வேளையில் நீர்மூழ்கிக் கப்பலில் இங்கிலாந்து சென்றார்.

அங்கு சிங்களவர்களுக்காக வாதாடினார். இவரின் வீரதீர செயலைப் பாராட்டிய சிங்க ளத் தலைவர்கள் இவர் இலங்கை திரும்பிய போது கொழும்புத்துறைமுகத்தில் இருந்து இவரின் மாளிகை வரை தாமே குதிரை களாக மாறி இவரைத் தேரில் வைத்து இழுத்து வந்தனர். யாழ்ப்பாணம் பரமேஸ் வராக் கல்லூரியின் (இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) சுவரில் இந் நிகழ்ச்சி ஓவியமாக வரையப்பட்டிருந்தது.

எமது நெருக்கடியான காலகட்டத்தில் வடக்கில் இருந்து வந்த இவ்வீரமகன் எமக்குத் துணை போகாது விட்டிருந்தால் சிங்கள இனமே பூண்டோடு அழிந்திருக்கும்" என்று சிங்களத் தலைவர்கள் அன்று பாராட் டினார்கள்.

இதே இராமநாதன் 1919 இல் தன் தம்பி சேர்.பொன்.அருணாசலம் தேசிய காங்கிரசின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் தன்னிடம் வாழ்த்துப் பெற வந்த போது *Thambi you go ahead, but be careful you may be hauled off the chair* (தம்பி முன்னேறு. ஆனால் உன் நாற்காலியிலிருந்து நீ தூக்கி எறியப்படும் ஆபத்து உண்டு) என்று எச்சரித்தார். அந்த எச்சரிக்கை வீண் போகவில்லை. மேற்கு மாகாணத் தொகுதி க்குப் போட்டியிட நியமிக்கப்பட்ட அருணா சலம் சேர்.ஜேம்ஸ் பீரிசிற்கு இரகசியமாக அத்தொகுதி ஒதுக்கப்பட்டதன் காரணமாக தூக்கியெறியப்பட்டார்.

எளிதில் ஆத்திரத்திற்கு ஆளாகாத அரு ணாசலம் சிங்களத்தலைவர்களால் ஏமாற் றப்பட்ட நிலையில் சினத்தின் உச்சநிலையில் 1923 இல் இலங்கைத் தமிழர் பேரவைத் *(Ceylon Tamill League)* தோற்றுவித்தார்.

எமது மரபிற்கேற்ப எம் இனத்தின் தனித்துவத்தை நாம் பேண விரும்புகின றோம். காயுமற்ற. கனியுமற்ற. பூவுமற்ற. சாம்பார் நிலைக்கு அனைத்துலகக் கோட் பாடு என்ற பெயரில் நாம் சீரழிந்து போவதை ஏற்க முடியாது. ஆனால் அதேவேளையில் தமிழர் நலனையே கருதி தமிழருக்காக மட்டும் பாடுபடும் தன்னலவாதிகளாக நாம் வாழ விரும்பவில்லை. தமிழர்களை விட முழு இலங்கையின் நலனுக்காக உழைத்த வர்கள் வேறு யார்? எனினும் இது கொண்டு எவரின் ஏவலையும் நிறைவேற்றும் அடி மைகளாக நாம் வாழ மறுக்கின்றோம். பொதுநலனைப் பேணுவதற்கும் எம்மைப் பாதுகாப்பதற்கும் எம்மை வலுவுடையவர் களாக ஆக்க நாம் உறுதி பூண்டுள்ளோம் என்று கூறினார்.


### கடலில் எறிய முயற்சி

1915 இல் சிங்களவரைக் காக்க இராம நாதன் ஆற்றிய பணியை நினைவுகூர்ந்து அவருக்கு ஒரு சிலை செதுக்கப்பட்டது. இச்சிலை செதுக்கப்பட்டதேயன்றி நிறுவப் படாது ஒரு களஞ்சியத்தில் வைக்கப் பட்டது. ஆனால் 1919ஐ அடுத்து அரசியல் சீர்திருத்தத்தையொட்டி இராமநாதன் தெரி வித்துள்ள கருத்துக்கள் தமிழர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளன என்று கருதப் பட்டது. இந்த நிலையில் அவரின் சிலையை கடலுல் தூக்கியெறிய சிங்களத் தலைவர்கள் சதி முயற்சி தீட்டினர என்று அருணாசலம் குறிப்பிட்டிருந்தார்.

வகுப்புவாத அடிப்படையை நீக்கி மாகாண அடிப்படையில் தேர்தல் நடைபெற் றால் சிறுபான்மையினரைக் குறிப்பாக தமி ழரை அது பாதிக்கும் என்று சேர்.பொன். இராமநாதன் வாதிட்டதை வெறிகொண்ட சிங்களத் தலைவர்களால் தாங்க முடிய வில்லை.

பயன்படுத்திய கறிவேற்பிலையை எப்படி நாம் தூக்கி எறிகின்றோமோ அதே போன்று தமிழ்த்தலைவர்களைப் பயன்படுத்திபின் அவர்களைத் தூக்கியெறியும் நன்றி கெட்ட செயல் சிங்களவரிடம் உருவெடுத்து விட்ட தென்பதற்கு இதுவே எடுத்துக் காட்டாகும்.

(வளரும்)



ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"
Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

# குடாநாட்டில் புலிகள் எதிர்கொள்ளும் நெருக்கடி

**யாழ். நகரிலிருந்து கண்ணன்**

புரிந்துணர்வுப் போர் நிறுத்த உடன்பாட்டுக்கமைய அரசியல் பணியாற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வந்துள்ள விடுதலைப் புலிகள் இரண்டு விதமான பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

முதலாவது நெருக்கடி, யாழ்ப்பாண மக்களின் எதிர்பார்ப்பைப் புலிகளின் பாணியில் தீர்த்துக் கொள்ள முடியாதமையாகும்.

அடுத்தது, அரசாங்கப்படைகளிடம் இருந்து எழுந்துள்ள முறுகல் நிலை மோசமானதும் புரிந்துணர்வு உடன்பாட்டின் எதிர்காலத்துக்கே சாவுமணி அடிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது.

போர் நிறுத்த உடன்பாட்டின் விதிகளுக்கமைய புலிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார்கள் என்று தகவல் வெளியானதும் குடாநாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் அதை ஆரவாரத்துடன் வரவேற்றிருந்தனர்.

யாழ்ப்பாண சமூகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க புலிகளால் மட்டுமே முடியும் என்ற பிரதான நோக்கில் ஒன்றுபட்டு நின்று அனைவருமே புலிகளின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அந்தளவுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமூகக்கட்டமைப்பு சீரழிக்கப்பட்டு சீரழிவு நடவடிக்கைகள் கோலோச்சிக் கொண்டிருந்தன.

யாழ்ப்பாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர்தான் இந்தச் சீரழிவுகள் ஊக்குவிக்கப்பட்டன.இதன் விளைவுகள் எதிர்கால சமுதாயத்தின் இருப்புக்கே ஆப்புவைக்கின்ற அளவுக்கு மோசமடைந்து கொண்டிருந்த கட்டத்தில் தான் புலிகளின் வருகை உடன்பாட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

புலிகளின் நிலைப்பாடுகளை ஆதரிக்காத இனத்தின் இருப்பை பாதுகாக்க விரும்புகின்ற அனைவரும் இந்தப் பிரச்னைக்கு புலிகளால் மட்டும் தீர்வு காணமுடியும் என உறுதியாக நம்பினர்.

புலிகளின் வருகையின்போது அறுபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கடும் வெய்யில், மழை இரண்டுக்கும் நடுவில் நின்று வரவேற்றார்கள்.

அது தனியே அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்காக மட்டுமல்ல. சமுதாய சீரமைப்பு நடவடிக்கைக்காகவும் தான்.

ஒரு காலத்தில் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை விமர்சித்தவர்கள் கூட தமது எதிர்கால சந்ததி பாதை மாறிப்போய்க் கொண்டிருப்பதைச் சகிக்கமுடியாமல் அரசியல் நிலைப்பாடுகளையெல்லாம் தூக்கிப்போட்டுவிட்டு புலிகளை வரவேற்க ஒன்று கூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. புலிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சுமார் இரண்டு மாதங்கள் நிறைவு பெறும் இத்தருணத்தில் மக்களின் எதிர்பார்ப்பு வேகத்திற்கேற்ப அவர்களின் தேவைகளை நிறைவு செய்யமுயாமல் புலிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

புலிகள் எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சில சீரழிவு சக்திகள் தமது கைவரிசையைக் காட்ட மீண்டும் தொடங்கியிருக்கின்றன.

புலிகள் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தது அரசியல் பணியாற்றுவதற்காகும். ஆனால் மக்கள் புலிகள் முன் கொண்டு சென்றுள்ள அதிகமான பிரச்னைகள் சமூகச் சீரழிவுகளுடன் தொடர்புபட்டவையாகும்.

இருந்தபோதும் சமூகச் சீரழிவுகளை நசுக்கும் நடவடிக்கைகளில் புலிகள் அதிரடியாக இறங்கியபோதும் அதை முழுமையாகச் செய்ய முடியாத நிலை ஒன்று இங்கே நிலவி வருகின்றது.

ஆபாசப்படங்களை வாடகைக்கு விடுபவர்கள் மற்றும் திரையிடுபவர்களுக்கு புலிகள் விடுத்திருந்த காலக்கெடுவின் அடிப்படையில் சுமார் ஒரு நூறு வரையான இத்தகைய படசுற்றுக்களும் விசிடிகளும் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை யாழ் நகரிலும் சுன்னாகத்திலும் பொதுமக்கள் முன்னிலையில் தீயிடப்பட்டன.

இது பெரிதும் வரவேற்புப் பெற்றதொரு சம்பவமாகும். ஆனால் ஒப்படைக்கப்பட்ட ஆபாசப்பட பிரதிகளை விட இன்னமும் ஒழிந்து கொண்டிருப்பவை தான் ஏராளம். இவற்றைக் கைப்பற்றி அழிக்கப் புலிகளால் சட்டரீதியாக முடியாது. இதைப்போன்று ஒவ்வொரு சம்பந்தப்பட்ட சமூகச் சீரழிவுகளையும் முற்றாக அல்லது பெருமளவில் அழித்து நசுக்க புலிகளால் தற்போதைய நிலையில் முடியாதுள்ளது. இதை மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளத் தவறிக் கொண்டிருப்பதால் சில நெருக்கடிகளை புலிகள் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

அரசியல் பணியாற்ற வந்த புலிகளுக்கு சிவில் விடயங்களில் தலையிட்டு நடவடிக்கைகளை தடுப்பதற்கோ தீர்ப்புக்களை வழங்கவோ அதிகாரம் கிடையாது. அத்துடன் தற்போதைய நிலையில் புலிகள் பல பாரதூரமான விடயங்களைக் கூடக் கண்டும் காணாமல் இருந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தங்களும் உள்ளன.

கடந்த வாரம் புலிகளுக்கு வந்த மிகச் சிக்கலான சமூகச் சீரழிவுச் சம்பவம் ஒன்று தொடர்பாக புலிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாமல் கைகட்டப்பட்டுள்ள நிலையில் உள்ளனர்.

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ரவிச்சந்திரன் என்ற நபர் லண்டனில் 17 வயதில் குடியேறியிருக்கின்றார். 35 வயதில் இப்போது திரும்பி வந்துள்ளதால் தான் பிரச்னையே தோன்றியிருக்கின்றது. இவர் லண்டனில் வசித்த காலப்பகுதியில் குறைந்தது ஏழு பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்துள்ளதாகவும் இவர்களில் பலரை விபச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இன்னொரு பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்வதற்காக இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தான் இந்த நபரின் ஏமாற்றுவேலைகள் வெளிவந்தன. இது தொடர்பாக பொலிசாரிடம் முறையிட்டபோது அவர்கள் லஞ்ச லாவண்யங்களோடு பிரச்னையைக் கைவிட்டு விட்டார்கள்.

பின்னர் பிரச்னை புலிகளின் அரசியல் பணிக் குழுவுக்கு வந்தது. இதற்கிடையில் இந்த நபரை அடித்துக் கொல்லப்போவதாக ஊர்ப்பொதுமக்கள் கங்கணம் கட்டிக் கொண்டு திரிகின்றார்கள். ஆனால் புலிகளோ வழமைபோல நடவடிக்கை எடுக்கமுடியாமல் பொறுமை காக்கவேண்டியிருக்கின்றது. அதிகாரம் இல்லாதமை ஒரு காரணம். இரண்டாவது குறித்த நபர் பிரிட்டிஷ் பிரஜை. புலிகள் இவர் மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் சர்வதேச நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியுள்ள நிலையும் உள்ளது. தம்மிடம் பிரச்னையைக் கொண்டு வந்த பின்னர் பொதுமக்கள் தன்னிச்சையாக எந்தமுடிவையும் எடுக்கவேண்டாம் என்றும் இதனால் புலிகள் தான் பிரச்னையை எதிர்கொள்ள வேண்டும் என்றும் புலிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனால் பொது மக்களோ குறித்த நபரைக் கொல்லப் போவதாகக் தேடித்திரிவதாகவும் இவர் இவ்வாரம் கொழும்பு சென்று லண்டன் பயணிக்க உள்ள தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாரம் இல்லாமல் சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்த முனையும் போது புலிகள் எதிர்நோக்கி வருகின்ற நெருக்கடிகளுக்கு இது ஒரு உதாரணம் தான்.

அதேவேளை புலிகள் இந்த விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கிறார்களோ என்று பொதுமக்கள் வேறு சந்தேகக் கண் கொண்டு பார்க்கவும் தவறவில்லை.

அதிகாரம் இல்லாததைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள அதிகம் வாய்ப்பில்லை. இந்த நிலையில் தான் புலிகள் இடைக்கால நிர்வாகம் மற்றும் எதிர்காலத்தில் சட்டம் ஒழுங்குகள் குறித்து மக்களுக்கு விரிவாக விளக்கவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

இது ஒரு புறம் இருக்க புலிகள் எதிர்கொள்கின்ற அடுத்த நெருக்கடியானது சாதாரணமானதொன்றல்ல.

இது போர் நிறுத்தத்தையே முறித்துவிடக் கூடிய வல்லமை பெற்றதென்பதை இங்கு குறப்பிட்டேயாகவேண்டும்.

அரசியல் பணியாற்ற தீவகத்தில் கடற்படையினர் புலிகளுக்கு அனுமதி மறுத்து வருவதாலேயே இந்தப் பிரச்னை வேகம் பெற்று வருகின்றது.




## தீவகம்: அரசின் இரட்டை வேடம்

ஏப்ரல் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்த புலிகள் அடுத்த வாரம் தீவகம்செல்ல முற்பட்டபோது அல்லைப்பிட்டியில் கடற்படை வழிமறித்து திருப்பி அனுப்பியது பழைய கதை.

இப்போது இது தொடர்பாக இருந்து வந்த இழுபறிநிலை மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

சுமார் இரண்டு மாதங்களாக தீவகத்துக்கு புலிகளை அனுமதிப்பது குறித்து படை உயர்மட்டம், அரசாங்கத்தரப்பு, மற்றும் புலிகள் ஆகியோருக்கிடையில் மறைமுகமான பனிப்போர் ஒன்று நிலவிக் கொண்டிருந்தது. இந்தச் சிக்கலுக்குள் சர்வதேச கண்காணிப்புக் குழுவும் சிக்கிக்கொண்டிருந்தது.

கடைசியாக கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான செயலகம் தீவகத்திற்கு புலிகள் செல்லுவதற்குத் தடையில்லை என்றும்அப்படிச் செல்கின்ற புலிகள் 12 நிபந்தனைகளுக்கு உட்பட்டே நடந்து கொள்ளவேண்டும் என அறிவிக்க நிலைமை படு மோசமானதொரு கட்டத்தை நோக்கிப்போய்க்கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

இந்த நிபந்தனைகளைப் பார்க்கும்போது புலிகளைத் தீவகத்துக்குள் காலடி எடுத்து வைக்க அனுமதிக்கக்கூடாதென அரசாங்கமும் படைகளும் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவதாகவே சந்தேகம் எழுகின்றது.

சயனைட் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களின்றிச் செல்வதற்கு கடற்படை முன்னரே அனுமதித்திருந்தது. புலிகள் சயனைட் இன்றித் தாம் நடமாடமுடியாதெனக் கூறித் தான் தீவகம் செல்லாமல் திரும்பியிருந்தனர்.

இப்போது இந்தளவு நெருக்கடிகள், பேச்சுக்களின் பின்னரும் சயனைட், தொடர்பு சாதனங்களைக்கொண்டு செல்ல முடியாதெனக் கடற்படையால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதும் இதற்கு ஆதரவாக அரசாங்கமும் இணைந்து செயற்படுவதும் பிரச்னைகளை உச்சத்துக்கு கொண்டு சென்றிருக்கின்றது.

அது மட்டுமன்றி புலிகள் தீவுப்பகுதிக்குச் செல்கின்ற பாதைகளை கடற்படையே நிர்ணயித்திருப்பதுடன் அங்கு பகலில் மட்டும் நடமாட அனுமதிக்கமுடியும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தீவுகளுக்கும் என செல்லக்கூடிய புலிகளின் தொகையையும் கடற்படையே தீர்மானித்திருக்கின்றது.

இதைவிட தீவுப்பகுதிக்கு புலிகள் தனித்துச் செல்வதற்குக் கூட அனுமதியில்லை என்பது ஆக சிக்கலான விடயமாகியுள்ளது.

கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி ஒருவருடனேயே புலிகள் அரசியல் பணியாற்ற தீவகத்துக்குச் செல்லமுடியுமாம்.

அத்துடன் மண்டைதீவானது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பூநகரி கல்முனைக்கு மிக நெருக்கமாக இருப்பதால் புலிகள் அங்கு செல்லவே முடியாதென பன்னிரண்டு நிபந்தனைகளில் ஒன்று தடை விதிக்கிறது.

மொத்தத்தில் புலிகள் தீவகத்திற்கு செல்லக் கூடாதென்பதில் கடற்படை மட்டுமன்றி அரசாங்கம் கூட உறுதியாக இருப்பது தெரிகின்றது.

இந்த நிபந்தனைகளை ஏற்று புலிகள் தீவகம் செல்லமாட்டார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அத்துடன் புலிகளும் இந்த விடயத்தில் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லாததால் முறுகல் நிலை அதிகரித்து வருகின்றது.

இதனையடுத்து சர்வதேசக் கண்காணிப்புக் குழுத்தலைவர் கடந்த சனியன்று யாழ்ப்பாணம் வந்து படையதிகாரிகள் மற்றும் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டுள்ளார்.

இப்பந்தி எழுதப்படும் வரை இப்பேச்சில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. ஆனால் இப்பேச்சுக்கள் தோல்வி கண்டால் தீவக நிலைமையை அடுத்த கட்டப் போருக்கான

(27ம் பக்கம் பார்க்க)

# இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீண்டும் கொழும்புக்கு ஞாபகமூட்டும் விதத்தில் புதுடில்லியின் காய்நகர்த்தல்!

காஷ்மீர் இன்று தெற்காசியப் பிராந்தியத்தின் எரிமலையாகக் குமுறிக்கொண்டிருக்கின்றது. எப்போது வெடிக்கும்? எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்று எதிர்பார்த்து வல்லரசு நாடுகள் தங்களின் பிரஜைகளை அப்பிராந்தியத்திலிருந்து வெளியேறும்படி கேட்டுள்ளன.

இப்பின்னணியில் இந்தியா தனது பாதுகாப்பு குறித்தே திருகோணமலை எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுத்திருப்பதாக கொழும்பில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுனா மகேந்திரன் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

திருகோணமலையும் தெற்காசியப் பிராந்தியத்தில் இன்னொரு எரிமலைக்குரிய அம்சங்களைக் கொண்டிருப்பதாக உலக நாடுகளின் பார்வையில் தெரிகின்றது.

இப்பின்ணியில் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிரதமர் ரணில் புதுடில்லிக்கான தமது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்திய விஜயத்தின் போதும் கொழும்பும் புதுடில்லியும் எண்ணெய்க் குதம் தொடர்பான முக்கிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை இன்னும் கைவிடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் தான் புதுடில்லி அரசின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன.

இதற்கு ஓர் உதாரணமாகவே 1987 உடன்படிக்கையுடன் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கைச்சாத்திடப்படவிருக்கும் எண்ணெய்க் குத உடன்படிக்கை அமையவிருப்பதாக பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

புதுடில்லி விஜயத்தின் பின்னரே இலங்கையில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் அறிவிப்பு வெளியாகுமென்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்திருக்கின்றார்.

உலகில் எந்த நாட்டுக்குச் சென்று விளக்கமளித்தாலும் பிராந்திய வல்லரசின் 'சம்மதம்' இன்றி எதையும் செய்யமுடியாது என்ற யதார்த்தத்தை இலங்கை புரிந்து கொண்டுள்ளது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் 'தடை' நீக்க விவகாரத்திற்கு புதுடில்லியின் அங்கீகாரத்தை கொழும்பு அரசு பெறும் முயற்சி தான் மேற்கொள்ளப்படுகின்றதா என்றும் கேட்கப்படுகின்றது.

இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு ஐந்து மாதங்களாகிவிட்டன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த அடுத்த சில தினங்களில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்த அறிவிப்பைச் செய்தனர்.

அதனைப் புதிய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது.

எனினும் முறையான யுத்த நிறுத்தம் அரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தினத்திலிருந்து (பெப்ரவரி 22) ஆரம்பமானது.

கடந்த திங்கட்கிழமையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நூறு தினங்கள் சென்றுவிட்டன.

இந்த நூறு தினங்களில் வடக்கு, கிழக்கில் இயல்புநிலை தோன்றியுள்ளதா? இரு தரப்பினருக்குமிடையே நம்பகத்தன்மை கட்டியெழுப்பப்பட்டுள்ளதா?

இவையெல்லாம் பாராளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றின் மூலம் ஆட்சியாளருக்குப் புரியவைக்கவேண்டிய நிலை தமிழர் வட்டாரங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் அம்சங்களைப் புரிந்து கொள்ள மறுத்துச் செயற்படும் போக்குத் தான் அரச படையினர் மத்தியில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதியில் பொதுமக்கள் துன்புறுத்தப்படாத விதத்தில் சோதனைச் சாவடிகள் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற நகரங்கள், பட்டினங்களில் அகற்றப்படக்கூடியதாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்படவேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அடுத்து வரும் 60 தினங்களுக்குள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

அதாவது ஏப்ரல் 23 க்கு முன்பு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

இது நடைபெறவில்லை.

பொதுமக்களுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் கிழக்கில் அரச படையினர் பொதுமக்களை மிரட்டும் மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவங்கள் இடம் பெற்று வருவதாக முறையிடப்படுகின்றன.

ஆனால் என்ன இடம் பெறுகின்றன என்று பார்த்தால் "யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதுஅல்லது அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுப்பது ஆகியன மூலம் அரசாங்கமும் அரசபடைகளும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தக்கூடிய இயல்பு நிலைமையை மீண்டும் ஏற்படுத்தும் இலக்குடன் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முழுமையாக அமுல் நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன' என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணையில் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கயில் எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலை வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லையென்பதும் அப்பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக அமுல் நடத்தும் நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தவேண்டும் என்று அரசாங்கத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது.

இந்த நிலையில் தென்பகுதி மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் மாநாடு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு அதிகாரப்பகிர்வு குறித்து ஒரு கோரிக்கையை விடுத்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்படும் அதிகாரங்கள் தென்பகுதி மாகாணசபைகளுக்கும் வழங்கப்படவேண்டும் என்பது தான் அது. சுருங்கச் சொன்னால் சமச்சீரான அதிகாரப் பகிர்வு தான் மேற்கொள்ளப்படவேண்டும்.

சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு வழங்கப்படக்கூடாது என்பதே தென்பகுதி மாகாண சபைகள் முதலமைச்சர்களின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்குவிசேட

(27ம் பக்கம் பார்க்க)



## இலங்கைத் தீர்வுக்கு இந்தியாவின் ஈடுபாடு

### கா.சிவத்தம்பி

இலங்கையில் தற்போது சமாதானத்துக்கான சூழல் ஏற்பட்டிருப்பது சகல பிரிவு மக்களுக்கும் ஏற்புடைய விருப்பத்துக்குரிய விஷயம். யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பது நிம்மதியைத் தருகின்றது. எல்லோரும் வரவேற்கிறார்கள்.

சமாதானப் பேச்சு நடத்தவேண்டியதன் அவசியம் கடந்த ஆட்சிக்காலத்திலேயே உணரப்பட்டது.

அடிப்படையில் இப்பிரச்னை இலங்கையைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் உள்ள அந்தஸ்து யாது என்பது பற்றிய பிரச்னையாகும். சிங்கள மக்களுக்கு மொழி, மதம் முதலியவற்றில் கிடைத்திருக்கும் அரசியல் சட்ட அந்தஸ்து எதுவும் தமிழ் மக்களுக்கு இல்லை.

இந்தியாவின் தலையீட்டின் பின்னர் தமிழ் உத்தியோக பூர்வ மொழியாக, தேசிய மொழியாக 87 இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் நடைமுறைப்படுத்து வதில் பல குறைபாடுகள் உள்ளன.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த இலங்கை அதிபர் இதை ஒப்புக்கொண்டுள்ளார். சிறுபான்மையினரை நடத்திய விதத்தால் இலங்கையை ஒரு தேசமாகக் காட்டி வளர்க்க முடியவில்லை என அவர் அப்போது குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து யாது? தமிழ் மக்கள்எந்த முறையில் நடத்தப்படவேண்டும் என்பது சம்பந்தமாக மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறக்கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழர் தரப்புக்காகப் பேசுபவர்களாக விடுதலைப் புலிகள் மாத்திரமே இருத்தல் வேண்டும் என்பதை இலங்கையின் கடந்த அரசும் இந்த அரசும் ஏற்றுக்கொண்டுள்ள ன.

இது அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள பிரச்னை பற்றிய பேச்சு அல்ல. இலங்கையின் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் என்னஇடம் அளிக்கவேண்டும் என்பது பற்றிய பேச்சாகும். புலிகளுடன் தான் பேச்சு நடத்தவேண்டும் என்ற தேவை உருவானதற்குக் காரணம், கடந்த 27 ஆண்டுகளாக நடந்த பல பேச்சுவார்த்தைகளில் ஒத்துக் கொண்டவற்றை இலங்கை அரசு அமுலாக்கவில்லை என்பது தான்.

தமிழர் விடுதலைக்கூட்டணியுடனும் இந்திய அரசுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை. இதனால் தான் போர் தொடர்ந்து நடக்கின்றது. போரைத் தொடர்ந்து புலிகள் நடத்துவதால் புலிகளோடு பேசவேண்டும் என்று தேர்தல் மூலம் வந்த தமிழர் பிரதிநிதிகளில் 2 பேர் தவிர 14 பேர் சொல்கிறார்கள். அந்த 2 பேரும் கூட புலிகளோடு பேசக்கூடாது என்று சொல்லவில்லை.

இப்பேச்சுவார்த்தைக்கான சூழல் ஏற்பட முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த அடிப்படையில் போர் நிறுத்தப் பட்டது.

சில நடைமுறைகள் செயற்படுத்தப் பட்டுள்ளன. இன்னும் பல செயற்படுத்த வேண்டியுள்ளன.

புலிகளுக்கு அதிக இடம் கொடுத்து விட்டதாகச் சில சிங்கள சக்திகள் கூறத் தொடங்கியுள்ளன.

சிங்கள செய்தி ஊடகங்கள் இதுகாலம் வரை தமிழர் கோரிக்கைகள், போராட்டங்கள் பற்றி சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறிய முறைமை காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் கோரிக்கை என்பது பிரிவினைக்கு இடம் கொடுப்பது என்ற எண்ணம் இருந்து வருகின்றது.

இதனால் சிங்கள மக்கள் இன்றும் பயப்படு கின்றார்கள். சில சிங்கள ஊடகங்கள் இன்னும் தங்கள் தொனியை மாற்றிக் கொள்ள வில்லை.

இவற்றின் ஊடே மிகச் சிறிய குழுவினர் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப் படவேண்டும் என்று வேண்டுகின்றார்கள்.

பாரம்பரியத் தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளியினர் என மூன்று பிரிவினர் இலங்கையில் தமிழைப் பயன்படுத்து கின்றார்கள். இவர்களில் முஸ்லிம்கள் தங்களைத் தமிழர்களாகப் பெரிதும் அடையாளம் காண்பது இல்லை. இது இலங்கையின் வரலாற்றின் ஊடாக வரும் நிலைப்பாடு. வடகிழக்கை பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்டவர்கள் பாரம்பரியத் தமிழர்கள், முஸ்லிம்கள் வடகிழக்குப் பகுதியில் 33 சதம் பேராகவும் அதற்கு வெளியிலும் உள்ளனர். நடுப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் உள்ளவர்கள் இந்திய வம்சாளியினரான மலையகத் தமிழர்கள்.

வடகிழக்கு மாநிலமாகப் பிரித்து அங்கு ஓர் உள்ளூர் மாநில ஆட்சி 87 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக அது சரியாக நடைபெற வில்லை. அதிக அதிகாரம் வழங்காததால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த ஈபிஆர்எல்எவ் கட்சியினரே அதில் இருந்து விலகவேண்டி நேரிட்டது.

இன்று அங்கு ஆளுநர் ஆட்சியின் கீழ் மாநில சபை உள்ளது.

இடைக்காலத் தீர்வாக வடகிழக்கு மாநில ஆட்சியைப் புலிகள் ஏற்பதும், அதன் பின்னர் ஏற்படக்கூடிய தேச நிலைப்பட்ட வளர்ச்சி களின் பின்புலத்தில் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வும் வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தியாவின் அனுசரணையும் ஈடுபாடும் இல்லாத எந்த ஒரு தீர்வும் நிரந்தரமாக இருக்கமுடியாது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

பேச்சுவார்த்தைகளை எதிர்ப்பவர்களில் இலங்கை அதிபர் சந்திரிகாவின் கட்சியைச் சேர்ந்தவர்களை விடவும் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்று கூறி இந்தியாவை எதிர்ப்பதையே தங்கள் கொள்கையாகக் கொண்டுள்ள ஜேவிபி என்னும் மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியினரே பிரதான மாக உள்ளனர்.

அவர்களின் பின்னே சிங்கள இனவாத சக்திகள் ஒன்றுதிரண்டுள்ளன.

இந்தச் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்ட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள இலங்கை சுதந்திரக்கட்சி முனை கின்றது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவரை விடவும் சந்திரிகாவின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்காவே அதிகம் இனவாதம் பேசுகின்றார்.

எனவே தான் இந்தியாவின் அனுசரணை யும் ஈடுபாடும் இந்தத் தீர்வில் இருத்தல்வேண்டும் என தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

(நன்றி: தினமணி
சந்திப்பு - ஆர்.நடராஜன்)

# MILLENNIUM LEISURE TRAVELS INC.




அனைத்து பிரயாண வசதிகளும் எம்மால் ஒழுங்கு செய்யப்படும்

ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக் குறைந்த விலையில் சிறந்த சேவையுடன் உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு முதல் EuroRail Pass, Rental Car வரையில் சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல, வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



Florida, Cuba, Carribean நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா? நியாயமான விலையில் Package வசதிகள், Car Rentals, Cruise வசதிகளும் அத்துடன் Disney World Tickets அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன் டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப் பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை தொடர்புகொண்டு உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும் நீங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**

**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**

THE CRISPY MOISTURIZED CHICKEN BY

CHESTER FRIED

AVAILABLE AT

**PHALAPPASS**

TAKE-OUT & CATERING
416-614-9669

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

CHICKEN TO GO
416 248-5999

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**

ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**

உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு (5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்) — FRIDAY SPECIAL $ 4.99

பிரைட் பிஷ் - Fried Fish ............ $ 1.99

மாதாந்தச் சாப்பாடு SPECIAL - $ 299

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில் நாவுக்கு ருசியூட்டும் கடலுணவுக்கூழ்

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ் பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு $ 5.99

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

**PHALAPPASS**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

(416) 614-9669
(416) 248-5999

சக்தி

மொன்றியல் துர்க்காபதி

# ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்



**ஸ்ரீ துர்க்கா துதி**

நாற்றிசையும் மொழி கால
நல்லதொரு சித்திரத்தேர் நடுவணேறிப்
பாற்கடல் போல் அடியார்கள் புடைசூழப்
பவனிவரும் பரிசு நோக்கில்
சாற்றுபல் செஞ்சுடரும் தாயே
யுன்னழ கொழிக்குத் தகைமையாமோ
மாற்றலரும் பசும் பொன்னே வந்தேமது
குறை களைந்து வரந்தாராயே



# தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

**மெய்யடியார்களே!**

தன்னை நாடிவரும் அடியார்களின் துன்பம் துயர் நீக்கி இன்னருள் தரும் அற்புத அன்னை நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் தேர்த்திருவிழா நாளில் ஓம்கார வடிவம் ஆகி இவ்வுலகில் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐம்பெரும் கரியங்களையும் செய்து கொண்டு அன்பர்களிற்கு அருள் செய்து கொண்டிருக்கும் மொன்றியல் ஸ்ரீ துர்க்கா அன்னையின் பிரம்மோற்சவத்தில் தேர்த்திருவிழாவானது நிகழும் மங்களகரமான

**சித்திரபானு வருடம் ஆனித்திங்கள் 9 ஆம் நாள் (23-06-02) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12:00 மணிக்கு நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது.**



**காலை**

**7:00 மணி**

நவகலச தீபாராதனை
சிறப்புத் தீபாராதனை
யாக பூசை
துவஜ ஜ்தம்ப பூசை
நவசக்தி பலிதானம்

**10:00 மணி**

வசந்த மண்டப பூசை

**11:30 மணி**

அம்பாள் தேருக்கு எழுந்தருளல்

**நண்பகல் 12:00 மணி**

தேர்த்திருவிழா
(தேர் வடம் பிடித்தல்)

**மாலை 5:00 மணி**

பச்சை சாத்தி சுவாமி தேரை விட்டு
இறத்குதல், நவசக்தி அர்ச்சனை

**இரவு 8:00 மணி**

தேரடித் திருவிழா

**தேவஸ்தான மங்கள வாத்தியம்**

**நாதஸ்வர வித்துவான்:**

புளியங்கூடல் தவில் வித்துவான்
V. M. வடிவேல் அவர்களின் மகன்
V. செல்வரத்தினம்

**தவில் வித்துவான்:**

இணுவில் V. கருணாமூர்த்தி

சிறப்புக் கலை நிகழ்ச்சியாக
நாதஸ்வர தவில் மியூசிக் ஓவ் கனடா
சார்பில் தமிழ் ஈழத்தில் இருந்து வருகை தந்திருக்கும்
கலைஞர்களின் நாதஸ்வர தவில் க்கச்சேரி இடம் பெறும்

நாதஸ்வர வித்துவான்: ரொரன்றோ திரு P. S. A முருகதாஸ் அவர்கள்
தவில் வித்துவான்: கல்வியங்காடு திரு S. முருகையா அவர்கள்
தவில் வித்துவான்: இணுவையூர் திரு தி. ஜெயச்சந்திரன் அவர்கள்
நாதஸ்வர வித்துவான்: மாவிட்டபுரம் திரு N. கபிலாதாஸ் அவர்கள்
நாதஸ்வர வித்துவான்: உடுப்பிட்டி திரு L. S. ஜெயநாதன் அவர்கள்

அன்றையதினம் நயினாதீவு அமுதசுரபி அன்னதானத்தை நினைவுகூறும் வண்ணம்
அன்னதானமும் வழங்கப்படும்

உபயம்: நயினாதீவு மக்கள்

**271 JEAN TALON WEST, MONTREAL. TEL: (514) 272 2956**

2003 இற்கான தமிழர் சக்தி வெளியீட்டில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற அழையுங்கள்
514 739 0362 - 416 297 6694




# எண்ணமெல்லாம் அந்த (வெற்றிக்)கிண்ணந்தான்

வருகின்றது..வருகின்றது என்று வந்தேவிட்டது அந்தப் பிரமாண்டமான காற்பந்தாட்ட விழா. நான் கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் இந்தக் காற்பந்தாட்டப் போட்டி விழா ஒலிம்பிக் விளையாட்டு விழாவிற்கு எந்தவகையிலும் சளைத்தது அல்ல.

ஒலிம்பிக் விழா ஏற்பாடுகளுக்கு கோடிக் கணக்கான டாலர்களை வாரியிறைக்கின்றார்கள். காற்பந்தாட்ட விழாவிற்கும் அதே கதை தான். பல உலக நாடுகள் மதம்,மொழி, கலாச்சாரம் என்ற எல்லைகளைத் தாண்டி விளையாட்டு என்பதையே கருத்திற் கொண்டு ஒன்றிணைந்து கைகோர்த்து செயற்பட வைக்கின்றன இந்தப் பெருவிழாக்கள்.

(இன்று முழு உலகையுமே பரபரப்பிற்குள்ளாக்கி வரும் காற்பந்தாட்ட உலக வெற்றிக்கிண்ண விழா பற்றிய ஓர் அலசல்)

சுவிஸ் பாசல் நகரிலிருந்து
ஏ.ஜே.ஞானேந்திரன்

பந்தை மட்டுமா உருட்டுகின்றார்கள்? கோடி கோடியாக பணக்கட்டுக்களையும் உருட்டுகின்றார்கள்.

17 வது காற்பந்தாட்டத்திற்கான வெற்றிக் கிண்ணப் போட்டிகள் முதற் தடவையாக ஆசிய மண்ணில் தொடங்கியுள்ள இந்தத் தருணத்தில் இந்தப் போட்டிகள் அவற்றின் தனித்துவத்தை இழந்துவிட்டதாக பலர் அங்கலாய்க்கின்றார்கள்.

சுழலும் பந்து, ஆர்ப்பரிக்கும் பார்வையாளர்கள், துடிப்பான விளையாட்டு வீரர்கள் என்றிருந்த முக்கோணக் காதல் இன்றில்லை என்று விசனம் தெரிவிக்கின்றார்கள் அவதானிகள்.

பிறேசில்நாட்டின் மாஜி விளையாட்டு வீரரான SOCRATES சொல்வதைக் கேட்கும்போது இன்றைய நிலைமை நன்றாகவே வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒரு கலை என்றிருந்த காற்பந்தாட்டத்தின் இன்றைய பல விளையாட்டு மைதானங்கள் போர்க்களமாக மாறிவிட்டன என்று கவலையோடு குறிப்பிடுகின்றார் இவர்.

காற்பந்தாட்டம் இதயபூர்வமாக நேசிக்கப்பட்ட காலம் மலையேறி விட்டது என்ற குற்றச்சாட்டையே பலரும் முன்வைக்கின்றார்கள். இந்த விளையாட்டை விளையாட்டாகவே எடுப்பவர்கள் அருகிக்கொண்டு வருகின்றார்கள் என்று பலரும் முணுமுணுக்கின்றார்கள்.

இந்த ஆண்டு யார் ஜெயிக்கப் போகின்றார்கள்?

பிரான்ஸ், ஆர்ஜன்டீனா ஆகிய இரு நாடுகளுந்தான் இறுதி மோதலுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது பலரதும் கணிப்பாக இருக்கின்றது. உலகின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் என்ற பெயர் மாத்திரமல்ல, உலகின் மிக விலைமதிப்பான வீரர் என்ற பெருமையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ZIDANE பிரான்ஸ் கோஷ்டிக்கு யானைப்பலமாக இருக்கின்றார். 1998 இல் வெற்றிக் கிண்ணத்தை தட்டிக்கொள்ள உதவிய அதே கோஷ்டி தான் இந்த ஆண்டும் விளையாடப்போகின்றது.



ஆனால் முதற் போட்டியிலேயே செனகலிடம் வாங்கிக் கட்டியிருக்கின்றது பிரான்ஸ். இது முழு உலகையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. இக்கட்டுரை அச்சுக்கு வரும்போது இரண்டாவது மோதலிலும் பிரான்ஸ் தோற்றுவிடுமோ என்ற பயத்தை பல ரசிகர்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்றது. அப்படி நடந்து விடக்கூடாது என்பது பலரது பிரார்த்தனையாக இருக்கின்றது.



காலில் காயமடைந்துவிட்ட பிரான்சின் தலைசிறந்த வீரர் சிடான்

ஆர்ஜன்டீனா இந்தத் தடவை புதுப்பொலிவுடன் களத்தில் இறங்குகின்றது. ஏற்கனவே இரண்டு தடவைகள் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிவிட்ட இவர்கள் இலக்கு மூன்றாவதை நோக்கியிருக்கின்றது. நல்ல அனுபவசாலிகள் கோஷ்டியில் இருக்கின்றார்கள். ஆனால் ஒரு சிக்கல் என்னவென்றால் இவர்கள் விளையாடும் F குழுவில் இருக்கும் மற்றைய மூவரும் ஜாம்பவான்கள். இங்கிலாந்து, நைஜீரியா, சுவீடன் ஆகிய நாடுகளை இவர்கள் தாண்டிக் கரையேறக் கடுமையான உழைப்பு தேவைப்படப்போகின்றது.

ஆரம்ப மோதலில் பலமான நைஜீரிய கோஷ்டியை ஒரு கோல் வித்தியாசத்தில் வென்று இந்த வருடம் நாங்கள் தான் சாம்பியன் என்று மார்தட்டிச் சொல்லியிருக்கின்றார்கள். பொறுத்துத் தான் பார்ப்போமே.

இன்னொரு இலத்தீன் அமெரிக்க நாடான பிறேசிலும் வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொள்ளும் உற்சாகத்தில் களமிறங்குகின்றது. இரண்டு வருட அஞ்ஞாத வாசத்தின் பின் விளையாட வந்திருக்கும் றொனால்டோ இவர்களுக்கு வாய்த்திருக்கும் ஒரு உற்சாக டொனிக். ஆனால் பழைய றொனால்டோவை இப்பொழுது பார்க்கமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இத்தாலி நாடும் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதிக்கின்றது. இந்தத் தடவை வென்றால் நாலு தடவைகள் கிண்ணத்தைப் பெற்ற சரித்திரத்தை இத்தாலி படைக்கும். முதலாவது சுற்றில் இதனுடன் விளையாடும் நாடுகளான கொரோசியா, மெக்ஸிக்கோ, ஈக்வடோர் ஆகிய நாடுகளை இது வெகு சுலபமாக ஊதித்தள்ளி விடும். இந்த நான்கு நாடுகளும் சிறப்பாக பேசப்பட்டாலும் போர்த்துக்கல் போன்ற நாடுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம்.

இந்த விழாவை நடத்தி வரும் FIFA என்று சுருக்கமாக அழைக்கப்படும் காற்பந்தாட்ட அமைப்பின் சரித்திரம் பற்றி சற்று அறிய வேண்டியது அவசியமாகின்றது.

பாரிஸ் நகரில் 21.05.1904 அன்று தான் இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. 7 நாடுகள் மாத்திரமே இந்த அமைப்பின் பிரதிநிதிகளாக கையொப்பமிட்டார்கள். பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், சுவீடன், சுவிற்சலாந்து ஆகியவை தான் அந்த 7 நாடுகள்.

1909 வரை ஐரோப்பிய நாடுகளுக்கே இந்த அமைப்பு என்றிருந்த நிலை மாறி, 1910 இல் தென் ஆபிரிக்கா இணைய ஏனைய நாடுகளும் மெல்ல மெல்ல இணைய ஆரம்பித்தன. பல அமைப்புக்களுக்கு நடந்தது போல 1914 இல் வெடித்த முதலாவது உலக மகாயுத்தம் இந்த அமைப்பின் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தது.

01.03.1921 இல் தெரிவாகிய இந்த அமைப்பின் மூன்றாவது தலைவரான JULES REMET இந்த அமைப்பிற்கு உயிர்நாடியாக அமைந்தார். பிரெஞ் பிரஜையான இவருக்கு அப்பொழுது வயது 48. இருபது உறுப்பினர்களே இருந்த நிலையில் தனது 33 வருட கால ஆட்சியில் இந்த அமைப்பை ஒரு பாரிய விருட்சமாக வளர்த்த பெருமை இவரையே சாருகின்றது.

1954 இல் இவர் தன் பதவியிலிருந்து விலகிய போது மொத்தம் 85 உறுப்பினர்கள் இணைந்திருந்தார்கள். இந்த ஆண்டு சுவிஸ் நாட்டில் இந்த விழாவைத் திறந்து வைத்தவர் இந்த ஜூல்ஸ் என்பவர் தான்.



இங்கிலாந்துக்கு எதிராக கோல் அடித்த மகிழ்ச்சியில் சுவீடன் வீரர்கள்

1930 இல் உருகுவே சாம்பியனாக ஆரம்பித்து இறுதியாக 1998 இல் பிரான்ஸிடம் போய்ச் சேர்ந்திருக்கின்றது.

இதுவரை வந்த 16 சாம்பியன்களில் ஜெர்மனிக்கு 3 தடவைகள் (1954, 74,90) வெற்றி கிடைத்திருக்கின்றது. இத்தாலியும் 3 தடவைகள் (1934, 38, 82) வெற்றிருக்கின்றது.

இந்த ஆண்டு இரு நாடுகளின் கூட்டுச்சம்பவத்தில் முதற் தடவை யாக இந்த விழா இடம் பெறுகின்றது.


விளையாட்டை விளையாட்டாக எடுக்கும் வரை அந்த விளையாட்டு சுவாரஸ்ஸியம் குன்றாததாகவே இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?






ஜப்பானிய பொலிசாருடன் மோதும் ரசிகர்கள்

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



**அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.**

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய



## UNITED PERSONAL INJURY ASSOCIATES



*The Car Accident People*

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

### உங்களுக்குத் தெரியுமா?



இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.


### விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் **"யுனைட்டட்"** (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*

# இந்திய - பாகிஸ்தான் நெருக்கடி

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் பதற்றம் எல்லையில் குண்டு வீச்சு நீடிக்கின்றது!

(ஜம்மு)
காஷ்மீர் எல்லையில் கடும் சண்டை நீடிக்கின்றது. பூஞ்ச் பகுதியில் வெள்ளி இரவு முதல் பாகிஸ்தான் துருப்புக்கள் தொடர்ந்து குண்டு வீசிக்கொண்டிருப்பதாகவும் இதற்கு இந்திய துருப்புக்கள் பதிலடி கொடுத்து வருவதாகவும் இந்திய எல்லையிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காஷ்மீரில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் தாக்குதலையடுத்து இந்திய - பாக் எல்லையில் பதற்றம் தொற்றிக்கொண்டது. போர் மேகங்கள் சூழ்ந்து எந்த நிமிடமும் சண்டை மூளலாம் என்ற சூழல் உருவாகியிருக்கின்றது.

இதற்கிடையே இரு நாட்டுப் படைகளுக்கிடையே அறிவிக்கப்படாத யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்திய பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்கள் குண்டு வீச்சு நடத்துவதும் பீரங்கித் தாக்குதல் நடத்துவதும் இந்தியா பதிலடி கொடுப்பதும் தொடர்ந்து நடைெபற்று வருகின்றது. இந்திய துருப்புக்களின் தாக்குதலில் பாகிஸ்தானிய பதுங்கு குழிகள் பல அழிக்கப்பட்டன. இந்த நிலையில் வெள்ளி இரவிலிருந்து எல்லைக்கட்டுப்பாட்டு கோடு நெடுகிலும் பாகிஸ்தானிய துருப்புக்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு இந்திய துருப்புக்கள் பதில்த்தாக்குதல் கொடுத்ததில் பூஞ்ச் மாவட்டம் மாண்டிப்பகுதியில் 5 பாகிஸ்தானிய பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டதாக இந்திய இராணுவத்தினர் தெரிவித்தனர். திராஸ் மற்றும் நௌஷாரா பகுதிகளில் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல் நடைபெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே போல பூஞ்ச் மற்றும் ஹீரா நகர் பகுதிகளில் குண்டு வீச்சுத் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பூஞ்ச் பகுதியில் சாச்னா, பால்நோய், செல்ஷா பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் அழிவு குறித்து முழு விபரமும் தெரியவில்லை என்றும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இந்தியாவிலிருக்கும் தமது பிரஜைகளை வெளியேறுமமாறு ஜப்பான் கேட்டிருப்பதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறும் மக்கள்.

## இந்திய துாதரக ஊழியர் கடத்தப்பட்டார்

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் இந்திய துாதரக ஊழியர் ஒருவர் பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. ஆல் கடத்தப்பட்டுள்ளார்.

உளவு வேலையில் ஈடுபட்டதாக பாகிஸ்தான் துாதரக ஊழியர் ஒருவர் டில்லியில் இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டார். இதனையடுத்து இஸ்லாமாபாத்தில் இந்திய ஊழியர் கடத்தப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமாபாத்தில்இந்திய துாதரக ஊழியராக பணியாற்றுபவர் குல்வந்சிங். இவர் சனியன்று அலுவலகத்திலிருந்து காலை 11.30 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய 10 வயது மகனையும் இரு சக்கர வாகனத்தில் அழைத்து வந்தார். அவர் ராயல்என்க்வேல்வ்என்ற கட்டிடத்தின் அருகே வந்தபொழுது திடீரென ஒரு கும்பல் குல்வந்சிங் மீது பாய்ந்து துாக்கிச் சென்று ஒரு வாகனத்தில் வைத்து கடத்திச் சென்றது. சிங் வந்த இரு சக்கர வாகனத்தையும் அவருடைய குழந்தையையும் அந்தக் கும்பல் அந்த இடத்திலேயே விட்டு விட்டு சென்றது.

## காண்ட்லா துறைமுகம் மீது ஏவுகணை தாக்குதல் நடத்துவோம்
### பாகிஸ்தான் திடீர் மிரட்டல்

(இஸ்லாமபாத்)
''போர் மூளும் பட்சத்தில் வர்த்தகத் துறைமுகமான கராச்சி துறைமுகத்தை இந்தியக்கடற்படை முற்றுகையிட்டால் குஜராத் மாநிலத்தில் உள்ள காண்ட்லா துறைமுகத்தை ஏவுகணை மூலம் தாக்குவோம்'' என பாகிஸ்தான் மிரட்டல் விடுத்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அப்துல் அஜீஸ் மிஸ்ரா இஸ்லாமபாத்தில் இது குறித்து மேலும் கூறியதாவது:

இந்தியக் கடற்படை கப்பல்கள் கராச்சியை நோக்கி வந்து கொண்டு இருப்பதாக சொல்கிறார்கள். எங்களது கப்பல்கள் கடற்பகுதியில் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தச் செய்தியில் உண்மை ஏதும் இல்லை. மக்களைத் திசை திருப்ப இது போன்ற வதந்திகள் பரப்பப்படுகின்றன.

ஒருவேளைன போர் மூளும் பட்சத்தில் கராச்சி துறைமுகத்தை இந்தியக் கடற்படை முற்றுகையிட்டால் குஜராத் மாநிலத்தில் உள்ள காண்ட்லா துறைமுகத்தை ஏவுகணை வீசித்தாக்குவோம். தாக்குவதற்கென்று இந்தியாவில் சில முக்கிய இலக்குகள் உள்ளன .அதில் ஒன்று தான் காண்ட்லா துறைமுகம். அதன் மீது ஏவுகணை வீசி அழிப்போம்' இவ்வாறு அஜீஸ் கூறினார்.

## எல்லைப் பதற்றத்திற்கு தீர்வு இல்லை சிங்கப்பூரில் பெர்னாண்டஸ் பேட்டி

(சிங்கப்பூர்)
இந்தியாவுக்கம் பாகிஸ்தானுக்கும் இடையே தற்போது நிலவி வரும் எல்லைப் பதற்றத்திற்கு தீர்வு எதுவும் கைவசம் இல்லை என்று சிங்கப்பூரில் இந்திய இராணுவ அமைச்சர் ஜோர் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெறும் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ள இந்திய இராணுவ அமைச்சர் ஜோர் பெர்னாண்டஸ் சனியன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவி வரும் பதற்றத்திற்கு தீர்வு எதுவும் கைவசமில்லை என்று அவர் அப்போது கூறினார்.

பதற்றம் தணிவதற்கான சூழ்நிலை எதுவும் இன்னும் தென்படவில்லை என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் கூறுகையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையில் இந்தியா சற்றுக் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள 60 ஆயிரம் அமெரிக்கர்களை இந்தியாவை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது பற்றி பெர்னாண்டசிடம் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த அமைச்சர் பெர்னாண்டஸ் ''மற்றவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து கருத்துச்சொல்ல நாங்கள் விரும்பவில்லை என்று கூறினார்.

## இந்தியா - பாக். அணு ஆயுதப்போர் மூண்டால் 1.25 கோடி மக்கள் பலியாவார்கள்
### <u>அமெரிக்க பென்டகன் கணிப்பு</u>

(வாஷிங்டன்)
இந்தியா - பாகிஸ்தானிடையே அணு ஆயுதப்போர் மூண்டால் ஒன்றேகால் கோடி மக்கள் வரை பலியாவார்கள் என அமெரிக்க இராணுவ தலைமையகம் கணித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் கணிப்பை மேற்கோள் காட்டி அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாவது:

''இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே அணுஆயுதப்போர் மூண்டால் ஒன்றே கால் கோடி மக்கள் வரை பலியாவார்கள். இப்போரினால் ஏற்படும் நோய்,பசிபட்டினி மற்றும் கெட்டுப்போன தண்ணீர் விநியோகத்தால் ஏற்படும்உயிர்ச்சேதம் ஆகியவை இக்கணத்தில் இடம் பெறவில்லை. இச்சேதங்கள் இல்லாமல் இரு நாடுகளுக்கிடையே நடக்கும்நேரடியான போரினால் மட்டுமே இவ்வளவு உயிர்ச்சேதம் ஏற்படும் இரு தரப்பினருக்கும் இடையே குறுகிய காலப்போர் நடந்தால் 90 லட்சம் முதல் 120 லட்சம் மக்கள் வரை உயிரிழப்பார்கள், மேலும் இதில் 20 லட்சம் முதல் 60 லட்சம் பேர் வரை படுகாயமடைவார்கள். ஆனால் நீண்டகாலம் நடக்கும்போரால் தண்ணீர் சுகாதாரக்கேடு ,பசிபட்டினி,பிறப்பில் குறைபாடு மற்றும் இதர பல்வேறு பிரச்னைகளால் ஏற்படும் உயிர்ச்சேதம் கணக்கில் அடங்காது. தற்போதுள்ள சூழ்நிலையில் இரு நாடுகளும்ஒரே சமயம் அணு ஆயுதங்களை குறிவைத்து தாக்குமானால் அப்போது இரு நாடுகளிலும் தரையில் விழுந்து வெடிக்கும் அணு குண்டுகளின் அணுக்கதிர்கள் அப்பகுதி முழுவதும் பரவி அங்குள்ள ஆயுதங்களையும் வெடித்துச் சிதறடிக்கச் செய்யும். அப்போது அணுஆயுதங்களில் இருந்து வெளியேறும் கதிர்கள் அப்பகுதியைச் சுற்றியுள்ள ஏராளமான உயிர்களை கொல்லும்?இவ்வாறு

## இந்தியாவும் பாகிஸ்தானும் பிரச்னைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டும்!
### இந்தோனேஷியா கேட்கிறது

(ஜகார்த்தா)
இந்தியாவும் பாகிஸ்தானும் துாதரக பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என இந்தோனேஷியா கேட்டுக்கொண்டுள்ளது.

இது குறித்து இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் மார்ட்டி நட்டாலேசுவா நிருபர்களிடம் கூறியதாவது:

ஐக்கிய நாடுகளின் சட்டதிட்ட மூலம் இரு நாடுகளின் துாதரக பேச்சுவார்த்தை மூலம் இந்தியாவும்ப ாகிஸ்தானும் எல்லைப் பிரச்னைக்கு அமைதித் தீர்வு காணவேண்டும். இந்தியா - பாகிஸ்தான் பிரச்னைகளில் இந்தோனேஷியா மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

இரு நாடுகளின் பகையால் அப்பாவி மக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். நாள்தோறும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் இரண்டுநாடுகளுமே பாதிக்கப்படும்''

எஸ். பி. இம்போட்டஸ் S.P. Importers Inc.
ஒரே பிளாசாவில் மூன்று பெரும் தாபனங்கள்

**Fresh Vegetable & Grocery**
2863 Lawrence Ave. East
Tel: (416) 261-3881

**Fresh Fish Market**
2853 Lawrence Ave. East
Tel: (416) 261-4737
Fax: (416) 261-5843

**FURNITURE**
2861 Lawrence Ave. East
Tel: (416) 266-3077



*Scarborough, Ontario (Brimley & Lawrence)*

# மழலைகள் பூங்கா

## குரங்கும் தேனீயும்

ஒரு மரத்தில் குரங்கு ஒன்று வசித் வந்தது. அதே மரத்தில் தேனீக்ள் தேன்கூடு ஒன்றைக் கட்டியிருந்தன. குரங்குக்கோ தேன் சாப்பிட ஆசை. தேன்கூட்டை கலைத்தால் தேனீக்கள் ஒன்று சேர்ந்து தன் கொடுக்கால் கொட்டிவிடும் என்று பயந்தது. அது தேனீயிடம் சொன்னது:

''இவ்வளவு அருமையான இனிப்புத் தேனைக் கொடுக்கும் நீங்கள், கொட்டும் கொடுக்கையும் ஏன் வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்?'' என்றது.

தேனீ சொன்னது:

''நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். அதற்கு தகுந்த பலனான இனிப்புத் தேன்கிடைக்கின்றது. எங்களைத் துன்புறுத்துபவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவேண்டாமா? அதனால் தான் அவர்களுக்கு தண்டனை வழங்க 'கொடுக்கு' எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்றது.

குரங்கு நாவில் எச்சில் ஊற, தேன் கூட்டைப் பார்த்துக் கொண்டே 'ஈஈஈ' என்று சிரித்தது.

## விடுகதைகள்

ஒட்டுத் திண்ணையில் பட்டுப்புடவை காயுது - அது என்ன?
மூக்குத்தி
உடம்பெல்லாம் சிகப்பு; அதன் குடுமி மட்டும் பச்சை அது என்ன?
தக்காளிப்பழம்
யாரும் இறங்கமுடியாத கிணற்றிலே எங்க அர்ச்சுனன் இறங்கினான் - அவன் யார்?-
கரண்டி
அப்பன் ஊர்சுற்றி; அம்மா பிள்ளைத்தாச்சி - அவள் யார்?
பூசணிக்கொடி - காய்
குடிக்கலாம் அடிக்கலாம் - அது என்ன?
காப்பி
நீல நிற புடவையை மடிக்கமுடியாது - அது என்ன?
வானம்
ஒரு புட்டியில் இரண்டு தைலம் - அது என்ன?
முட்டை

## சிங்கமும் பன்றியும்

காட்டிலே ஒரு சிங்கம் இருந்தது. அந்தச் சிங்கத்துக்கு ஒரே ஒரு குட்டி பிறந்தது. அந்தக் குட்டியுடன் அது விளையாடிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயம் அங்கே தனது பதினாறு குட்டிகளுடன் பன்றி ஒன்று வந்தது. ஒரேயொரு குட்டியுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்த சிங்கத்தைப் பார்த்து பன்றி சொன்னது.

''ஏ..சிங்கமே.. நீ பெயருக்குத் தான் காட்டு ராஜா. உன்னால் ஒரு குட்டியைத் தான் குழந்தையாகப் பெறமுடிந்திருக்கின்றது.

என்னைப் பார்.. எனக்கு பதினாறு குட்டிகள். எனக்கு எவ்வளவு பெருமை'' என்று பீற்றிக்கொண்டது.

சிங்கத்துக்கு கடும் கோபம் .சிங்கம் கூறியது.

''ஏ பன்றியே.. பல குட்டிகள் போட்டதால் உனக்கு என்ன பெருமை.என்னுடையது ஒரு குட்டியானாலும் அது சிங்கக்குட்டி அல்லவா? அது வளர்ந்து பெரியவனானால் எனக்கு அடுத்தபடியாக அதுதானே காட்டுராஜாவாக வரும்'' என்றது.

பன்றி திடுக்கிட்டது. காட்டுக்கு ஒரு சிங்கம் இருந்தாலே சமாளிக்கமுடியாது. பதினாறு சிங்கம் இருந்தால் தங்கள் கதி என்னாவது என்று எண்ணியது. அந்த நினைப்பே அதன் வயிற்றில் கிலியை ஏற்படுத்தியது.

## ஒரு வரம்

இறைவா, எனக்கொரு வரம் தருவாய்
இனியதை நினைக்க அருள் புரிவாய்

இறைவா, எனக்கொரு வரம் தருவாய்
இனியதைப் பேச அருள்புரிவாய்.

இறைவா எனக்கொரு வரம் தருவாய்
இனியதைச் செய்ய அருள் புரிவாய்

எண்ணம் ,வாக்கு,செய்கையிலே
இனிமை இருந்தால் வாழ்க்கையிலே,
இன்பம்,இன்பம்,இன்பம் தான்
இல்லாவிட்டால் துன்பம் தான்

-குழந்தைக் கவி

## தெரிந்து கொள்ளுங்கள்

* கிளிகள் பெரும்பாலும் பெரியமரப்பொந்துகளில் கூடுகட்டிக் குடியிருக்கும் .ஆனால் பெரிய சிவப்பு நிற பஞ்சவர்ணக்கிளிகள் ஆற்றோரம் உள்ள செங்குத்தான பாறைகளில்கூடுகட்டி வாழும்.நீலநிறக்கிளிகள் என்ற ஒரு வகை அபூர்வ கிளிகள் பிரேசில் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் வாழ்கின்றன. இவைகளின் எண்ணிக்கையோ இருநூறுக்குள் தான்.
* பறவைகளிலேயே அதிக நாட்கள் உயிர்வாழ்வது ஆந்தை
* நூறு கதவுகள் உள்ள நகரம் என்று அழைக்கப்படும் நாடு எகிப்து.
* சலவைச்சோடாவின் வேதியியல் பெயர் - சோடியம் காபனைட்
* உலகிலேயே வருமான வரி இல்லாத நாடு - குவைத்
* மின்னோட்டத்தை பரிசோதிக்கும் கருவி- கல்வனோ மீற்றர்

# மங்கையர் பக்கம்

## பருவப்பெண்



தான் நினைப்பதும் செய்வதும் சரி என்று நினைக்கத் தோன்றும் வயது இந்த டீன் ஏ என்று சொல்லப்படும் பருவ வயது.

இந்தக் காலகட்டத்தில் தான் அவர்கள் வழி தவறிப்போகும் வாய்ப்புக்கள் அதிகம். பெரியவர்கள் சொல்லும் அறிவுரைகள் அவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கும். கஷ்டமாக இருந்தாலும் பெரியவர்களின் ஆலோசனைகளை சில விடயங்களில் பின்பற்றினால் அவர்களது எதிர்காலம் பிரச்னைகளின்றி அமையலாம்.

பருவ வயதுப்பெண்கள் அவதானமாக இருக்கவேண்டிய விடயங்கள்

வீட்டை விட்டு எங்கே வெளியே போனாலும் பெற்றோரிடம் சொல்லிவிட்டுப் போகவேண்டும்.

பெற்றோரை எதிரியாகப் பார்க்காதீர்கள். உங்களுடைய எல்லாப் பிரச்னைகளையும் அவர்களிடம் பேசுங்கள்.சில விடயங்களில் உங்களுக்கு அவர் நல்ல முடிவை எடுப்பதற்கு உதவியாக இருப்பார்கள். பெற்றோரிடம் எதனையும் மறைக்காதீர்கள். அப்படி மறைக்க நினைத்தால் நீங்கள் தவறிப்போகிறீர்கள் என்பதற்கு அறிகுறி.

குடும்ப நண்பர்களாக இருந்தாலும் ஆண்களிடத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். தன்வயதையும் நட்பையும் நெருக்கத்தையும் சாதகமாக்கிக் கொண்டு அவர்கள் உங்களிடம் தவறாக அணுக நினைக்கலாம். உங்களைத் தொட்டுப்பேசவோ இரட்டை அர்த்தத்தில் பேசவோ முயற்சி செய்யலாம்.

ஆரம்பத்திலேயே அவற்றை நீங்கள் கண்டிப்பது நல்லது. அவர்களது அந்த மாதிரிச் செய்கைகளில் உங்களுக்கு விருப்பமில்லை என்பதைக் கண்டிப்பாகவே சொல்லலாம். தயங்கவேண்டாம். தயக்கம் காரணமாக நீங்கள் எதிர்க்காவிட்டால் அது அவர்களுக்கு சாதகமாக அமைந்துவிடும்.நட்பு என்ற விஷயத்திலும் எல்லையை மீறாதீர்கள். ஆண்களிடம் நட்பு வைத்துக் கொள்வது தவறல்ல. ஆனால்அது எல்லை மீறாமலிருக்க வேண்டும். உங்கள் பேச்சோ, உடையோ அவர்கள் மனத்தில் சலனத்தை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும்.

செக்ஸ் ஆண்களின் எதிர்காலத்தை பாதிப்பதில்லை. இதனால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டும் தான் என்பதை மறந்துவிடாதீர்கள். திருமணத்திற்கு முன்பாக செக்ஸ்,அதன் விளைவாக கர்ப்பம் அதைக் கலைப்பது போன்ற விடயங்கள் பிற்காலத்தில் உங்களை மனத்தளவிலும் உடலளவிலும் பாதித்துவிடும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.

## அழகை அள்ளித் தரும் தயிர்



நாமெல்லாம் சர்வ சாதாரணமாக நினைத்துக்கொண்டிருக்கும் தயிரின் மகிமை என்ன தெரியுமா?

தயிரில் உடலுக்கு அழகைத் தரும் அழகு விட்டமின் எனப்படும் ரிபோபிளேவின் அதிகமாக உள்ளது.

இந்த ரிபோபிளேவின் உடலைப் பளபளப்பாக வைத்திருக்க உதவுகின்றது. பெண்கள் தயிரைத் தினமும் உண்பதனால் இயற்கை அழகு உண்டாகும்.

கண்நோய்களைக் குணமாக்கும் ஆற்றலும் தயிருக்கு உண்டு..கண்எரிவு, கண்வலி போன்ற நோய்கள் இருக்கும் வேளைகளில் தயிரைச் சாப்பிட்டு வந்தால் இந்த நோய்கள் நீங்கும்.

பெண்களுக்கு தயிரானது பல பலன்களை அளிக்க வல்ல அற்புதம் நிறைந்தது. பெண்களுக்கு கருமுட்டை நன்கு முதிர்ச்சி அடைவதற்கும் பிரசவ நேரத்தில் உடலை ஆரோக்கியமாக வைத்திருந்து சுகப்பிரசவம் நிகழவும் உதவுகின்றது. குழந்தை பிறந்த பின்னர் தாய்ப்பால் சுரக்கவும் தயிரில் உள்ள கல்சியம் உதவுகின்றது.

மாதவிலக்கு கோளாறு உள்ளவர்கள் எந்தவித மருந்துமின்றி தயிரைச்சாப்பிட்டு வந்தால் இந்தக் கோளாறுகள் நீங்கும்.

குடல் பிரச்னை உள்ளவர்கள் தினமும் தவறாமல் இரண்டு அல்லது மூன்று கப் தயிர் சாப்பிட்டு வந்தால் பிரச்னைகள் நீங்கும். தயிரில் உள்ள கல்சியம் சத்தால் 80,90 வயதில் கூட ஆரோக்கியமாக இருக்கலாம் என்று அண்மையில் நடந்த மருத்துவ ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

## குதியுயர்ந்த காலணி அணியும் பெண்களுக்கு

நவநாகரீகப் பெண்கள் குதி உயர்ந்த காலணியை அணிவதை நாகரீகமாக கருதுகின்றார்கள்.

ஆனால் இந்த நாகரீகம் உடலுக்கு எந்த அளவுக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

காலுக்குச் சரியாகப் பொருந்தாத இவ்வாறான காலணிகளும் குதிக்கால் பதிக்கின்ற இடத்துக்கு கீழே கூர்மையாக உள்ள சப்பாத்துக்களும் கால்களுக்கு தீங்கை ஏற்படுத்தக்கூடியவை.

காலில் வலியும் வேதனையும் ஏற்படும்.

அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற ஆய்வொன்றில் குதியுயர்ந்த காலணி அணியும் 80 % பெண்கள் கால்வலியால் அவதிப்படுகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'மிஸ் யூனிவர்ஸ்' வெட்கப்படும் நேரம்!



மே 30 ஆம் திகதி போட்டோரிக்கோவில் நடைபெறற 2002 ஆம் ஆண்டுக்கான 'மிஸ் யூனிவர்ஸ்' (பிரபஞ்ச அழகி) பட்டத்தை சோவியத் யூனியனில் இருந்து சிதறுண்டு போன ரஷ்ய நாட்டின் அழகி ஆகஸனா பெடரோவா தட்டிச் சென்றார்.

இரண்டாவது இடம் பனாமா நாட்டு அழகியான ஜஸ்டின் பாஸத்துக்கு கிடைத்து. மூன்றாவது இடம் போட்டியில் முதன் முதலாக கலந்து கொண்ட கம்யூனிச சீன அழகி லிங் ஜியோக்கு கிடைத்துள்ளது.

உலக அழகிகளை தேர்வு செய்ய ஆண்டு தோறும் மிஸ் வேல்ட், மிஸ் யூனிவர்ஸ் பட்டத்துக்கான போட்டி 1952 ஆம் ஆண்டு முதல நடந்து வருகின்றது. 51 வது மிஸ் யூனிவர்ஸ் உலக அழகிப்போட்டி தீவு நாடான போர்ட்டோரிக்கோவில் மே 30 ஆம் திகதி நடைபெற்றது.

2002 மிஸ் யூனிவர்ஸ் பட்டத்தைத் தட்டிச்செ சல்ல உலகின் 75 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர்.

இதற்காக 75நாடுகளைச் சேர்ந்த அழகிகளும் ஒரு மாதத்திற்கு முன்னரேயே போட்டோரிக்கோவுக்கு சென்றிருந்தனர்.

அங்கு முதற் கட்டமாக அவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. நீச்சல் உடைப்போட்டி, பாரம்பரிய உடைப்போட்டி என பல போட்டிகள் நடந்தன.

இந்தப் போட்டியின் போது அமெரிக்கஅழகி சாந்தேஹின்டன் நியூயோர்க் நகர தீயணைப்புப் படை வீரர்களின் சீருடையில் வந்தார். உலக வர்த்தக மையத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய விமானத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவர் அந்த உடையில் வந்தார்.

போட்டியின் இறுதிச்சுற்றுக்கு இந்தியா உட்பட 10 நாடுகளின் அழகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கடைசியாக அறிவுத்திறன் போட்டி நடைபெற்றது.

அதன் பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் யாருமே எதிர்பாராத விதமாக மிஸ் யூனிவர்ஸ் பட்டத்தை ரஷ்ய அழகி ஆக்ஸ்னா பெடரோவா தட்டிச்சென்றார்.

இரண்டாவது இடம் பனாமா நாட்டு அழகியான ஜஸ்டின் பாஸுக்குக் கிடைத்தது. மூன்றாவது இடம் போட்டியில் முதனமுதலாக கலந்து கொண்ட கம்யூனிஸ சீன அழகி லிங் ஜியோக்கு கிடைத்துள்ளது.

'மிஸ் யூனிவர்ஸ்' போட்டிக்கு இந்தியா சார்பில்செ சன்ற நேகா துபே வெற்றி வாய்ப்பை இழந்தார்.

2002 ஆம் ஆண்டுக்கான 'மிஸ் யூனிவர்ஸ்' ஆக்ஸனா பெடரோவாவிற்கு பல கோடி பெறுமதியான பரிசு பொருட்கள் கிடைக்கும்.இது தவிர ஓராண்டுக்கு நியூயோர்க்கில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் இலவசமாகத் தங்கலாம். மேலும் உலகம் முழுக்க இலவசமாக ஓராண்டுக்கு விமானப் பயணம் செய்யலாம்.

உலக அழகிக்கு முடி சூட்டு



## அங்கோலாவில் ஹெலி விபத்து: 25 பேர் பலி

அங்கோலாவின் கிழக்குத் தலைநகரில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மரத்துடன் மோதி வீழ்ந்து நொருங்கியதில் 25 பேர்கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் மற்றும் சில பத்திரிகையாளர்களும் அடங்குகின்றனர்.

சமாதான நடவடிக்கைகளின் முன்னெடுப்பாக யுனிற்றா தீவிரவாதிகளின் ஆயுதக்கையளிப்பு தொடர்பான நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றோரே இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டியைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பக்கிங்காம் அரண்மனையில் தீ விபத்து!



(லண்டன்)

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் வாசஸ்தலமான பக்கிங்ஹாம் அரண்மனையின் ஒரு பகுதியில் ஞாயிறன்று தீ விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சம்பவத்தையடுத்து அரண்மனையிலிருந்த அனைவரும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

அரண்மனையைச் சூழ நூற்றுக் கணக்கான பொலிசாரும் தீயணைப்புப் பணியாளர்களும் கூடியுள்ளனர்.

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடி 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டிய பொன்விழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ள வேளையில் இந்தத் தீ அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது.

தீ பரவிய சமயம் அரச குடும்பத்தவர்கள் எவருமே அரண்மனையில் தங்கியிருக்கவில்லை என்று அரண்மனை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

மகாராணி எலிசபெத்தும் ஏனைய அரச குடும்பத்தவர்களும் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக அரண்மனைக்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ளனர்.

அரண்மனையின் மேற்கு ரெறஸ் பகுதியில் கூரையூடாக வெளியேறிய புகை மண்டலம் அரண்மனைக்கு மேலே பரவியுள்ளது. லண்டன் மாநகரின் பல பகுதிகளில் இருந்தும் அதனை அவதானிக்க முடிந்ததாக செய்திகள் தெரிவித்தன.

தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது உடனடியாக தெரியவரவில்லை. பொன்விழாக் கொண்டாட்டங்களுக்காக அரண்மனையின் உள்ளே செய்யப்பட்ட பிரமாண்டமான ஏற்பாடுகள் காரணமாக தீ பரவியிருக்கலாம்ள ன்று சந்தேகிக்கப்படுகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து ஆட்கள் முற்றாக வெளியேற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மகுடம் கிடைத்த பொன்விழா





பிரிட்டிஷ் மகாராணிக்கு மகாராணியாக மகுடம் சூட்டியதன் பென்விழா பிரிட்டனில் கோலகலமாக கொண்டாடப்பட்டது.

நன்றித்திருப்பலியில் கலந்துகொண்டபின்னர் பேராயர்களுடன் மகாராணி அளவளாவுவதையும்

மக்களின் அன்புப் பரிவுகளைப் பெறுவதையும் படங்களில் காணலாம்.




**BUYING – SELLING**

**NADA G. NADARAJAH B.V.Se**

*Sales Representative*
*Gold Award Winner 2000*

Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

- வீடுகள் வாங்க அல்லது விற்க,
- அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட,
- குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட

இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா

HOMELIFE

HomeLife Metro Realty Inc.
*Real Estate Broker*


5200 Finch Ave. East,
Suite 206, Scarborough,
ON M1S 4Z4

# குரு பூர்ணிமா

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆச்சிரமம்

## கியூபெக் - கனடா

## ஜுலை 19, 20, 21, 22, 23, 24



தெய்வ அவதாரமென மக்களால் போற்றப்படும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஓர் ஞானம் பெற்ற தமிழ் மகானாவார். இவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் பாபநாசம் என்னும் ஊரிலே ஓர் பக்தியும் பாரம்பரியமும் மிக்க தமிழ்க் குடும்பத்தில் 1956 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அவதரித்தார்.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் அவதரித்த போது பல அற்புதங்கள் நிகழ்ந்தன. தனது நான்காவது வயதில் முழு "பகவத்கீதை"யையும் சமஸ்கிருத மொழியில் சொல்லி அதற்கு விளக்கமும் கொடுத்த போது மிகவும் படித்த பண்டிதர் களே அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.


குழந்தைப் பருவத்திலேயே நீண்ட நேரத்தை தியானத்திலும் தனிமையிலும் கழிப்பதை அவருடைய பெற்றோர்கள் கண்டனர். எட்டு வயதில் புராண இதிகாசங்களைப் படிக்கத் தொடங்கிய ஸ்ரீ ரவிசங்கரர் தனது பதினேழு வயதிற்குள் வேதபாடம் நவீன விஞ்ஞானம் இரண்டையும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இமயமலையில் ரிஷிகேசத்தில் நீண்டகாலம் தியானத்தில் இருந்த ஸ்ரீரவிசங்கரர் "வாழும் கலை" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து யோகம். ஞானம். பக்தி ஆகியவைகளை மிகவும் எளியமுறையில் மக்களுக்குப் போதிக்கலானார்.

தமிழ் நல்லுலகில் தோன்றிய மிகச்சிறந்த ஜீவன்முக்தரான ஸ்ரீ ரவிசங்கரருக்கு இந்தியா. ஜேர்மனி. கனடா ஆகிய நாடுகளில் பெரிய ஆச்சிரமங்களும் 130 நாடுகளில் கிளைகளும் உண்டு.

### ஆச்சிரமத்திற்குச் செல்லும் வழி

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழி :




ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் ஆச்சிரமம்
St-Mathu du Park
Shawinigan, Quebec

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழியில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டால் கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

ஆச்சிரம் தொலைபேசி இல :
**(819) 532-3328**

**Centre L' Art de Vivre**
**de Saint - Mathieu - du - Parc**
Shawinigan, Quebec

கனடாவில் கியுபெக் மாநிலத்தில் ஏரிகளும் மலைகளும் சூழ்ந்த அழகும் அமைதியும் நிறைந்த "சுசானிக்கன்" என்ற இடத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்ரீரவிசங்கரர் ஆச்சிரமம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் குருப்பூர்ணிமா தினத்தை முன்னிட்டு 19.20.21.22.23.24 திகதிகளில் கனடா ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு குருதேவர் ஸ்ரீரவிசங்கரர் தரிசனம் கொடுப்பார்.

ஞானம் பெற்ற தமிழ்குருவான ஸ்ரீரவிசங்கரரின் தரிசனம் பெற்று தமிழில் அவருடன் அளவளாவி குருதேவரின் அன்பையும் அருளையும் ஆலோசனைகளையும் பெற்று நல் வாழ்க்கை வாழ உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிற்பகல் 6.00 மணியில் இருந்து 9.00 மணி வரை நடைபெறும் "சத்சங்கத்தில்" கலந்து கொள்வது மிகவும் நற்பலன்களைத் தரும்.

ஆச்சிரமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலை
HWY 40 EAST - EXIT 196
55 NORTH - EXIT 217
HWY 351

நீச்சல் தெரியாதவர்கள் தனியாக ஏரியில் நீந்தவோ அல்லது படகு ஓட்டவோ வேண்டாம் என்று ஆச்சிரமம் கேட்டுக் கொள்கிறது.

Wed site: www.artofliving.org
de - saint-mathieu - du - parc
Shawinigan - Quebec

அறுபது வருடங்களுக்கு முன்பு 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி திருகோணமலை நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

அதற்கு முன்பே பெரும்பாலான மக்கள் கிடைத்ததை கைகளில் எடுத்துக் கொண்டு நகரை விட்டு வெளியேறி விட்டனர். ரயில் மற்றும் வாகனங்கள் மூலமும் நடந்தும் மக்கள் பாதுகாப்பான அயற் கிராமங்களைச் சென்றடைகின்றனர்.

அறிவிக்கப்பட்டுள்ளது. ஜுலை மாதத்தில் வாஷிங்டனில் இலங்கை - அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட இருக்கிறது.

தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்பாக இவ்வுடன்பாடுகள் எல்லாம் ஏன் கைச்சாத்திடப்பட இருக்கின்றன? தமிழர் தரப்பின் கவலை இது.

இலங்கையின் துறைமுகங்கள் விமான

வெளியேறவில்லை. எப்படி வெளியேறினாலும் கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் வெற்றுக் காணிகளிலும் படைமுகாம்களை அமைக்கப் போவதாக படை உயர்பீடம் வடபகுதியில் அறிவித்துள்ளது.

தீவகப்பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் பன்னிரண்டு நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று படையினர் அறிவித்துள்ளனர். விடுதலைப்புலிகள் அதனை நிரா

சியை முன்னெடுப்பதற்குப் பயன்படுகிறதோ இல்லையோ? கொழும்பில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இலங்கைக்கு தாராளமாக நிதி வழங்கும் முடிவை எடுக்க உதவுவது நிச்சயம் என்ற நம்பிக்கை அரச வட்டாரங்களில் காணப்படுகின்றது.

யுத்தம் ஆரம்பமான காலத்தில் இருந்து ஆண்டு தோறும் நிதி உதவி வழங்கும் நாடுகளிலிருந்து நிதி உதவியைப் பெறக்

# சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் கொழும்பு வரும் யுத்தக் கப்பல்கள் உணர்த்தும் அரசியல் யதார்த்தம்?

**"இந்தியாவின் நவீனபோர்க்கப்பல் ஒன்று விரைவில் இலங்கை வரவிருக்கின்றது. பதினைந்து வருட இடைவெளியின் பின்னர் இலங்கை வர இருக்கும் முதலாவது யுத்தக் கப்பலாக இதுவாக அமையும் என்று கூறப்படுகின்றது"**

கரித்து விட்டனர்.

கிழக்கில் படையினர் பொதுமக்களை மிரட்டுவதாகக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்பாடு முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் தான் தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திகதி நிர்ணயிப்பது தங்கியிருப்பதாகத் தமிழர் வட்டாரங்களின் நிலைப்பாடு இருக்க, திகதி நிர்ணயிப்பதில் தான் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்க அறிவிப்பு தங்கியிருப்பதாக அரசு கூறியுள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தனது ஒருவார கால பிரிட்டன் பிரான்ஸ் பெல்ஜிய விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ளார். அவரது பயணம் சமாதான முயற

கடந்தகால அரசாங்கங்கள் சமாதான முயற்சி என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி வந்தது தெரிந்ததே. அவ்வரிசையில் ரணில் தலைமையிலான அரசும் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகப் பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இந்நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் மூன்று மணி நேரம் நடைபெறவிருக்கிறது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கோரிக்கை மீது இவ்விவாதத்தை நடத்தக் கட்சித்தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக அமுல் நடத்தப்படவில்லை என்பதை மக்கள் மன்றத்தில் ஆதாரபூர்வமாக வெளியிடக் கிடைத்த வாயப்பாக அமையப் போகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் உச்சக் கட்டமான ஏப்ரல் 9 இரவு வானைக் கிழித்துக் கொண்டு ஜப்பான் நாட்டு விமானங்கள் சீனக்குடாவை நோக்கிச் சென்றன.

சீனக்குடா கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அத்தீக் கொழுந்து கந்தளாய் வரை தெரிந்தது. ஜப்பானில் தற்கொலைத் தாக்குதல் சீனன்வாடியில் பிரிட்டிஷார் நிறுவிய 101 எண்ணெய்க்குதங்களை இலக்கு வைத்துத் தான் நடத்தப்பட்டன.

ஒரு எண்ணெய்த் தாங்கிக்குள் ஜப்பான் நாட்டுத் தற்கொலைப்படை வீரர் விமானத்துடன் மோதினார். அந்த எண்ணெய்க்குதம் முற்றாகச் சேதமடைந்தது. மற்றொன்றும் சேதமடைந்தது. எஞ்சியிருந்தவை 99 எண்ணெய்க்குதங்களாகும். அவற்றில் இப்போது பாவிக்கக்கூடியதாக உள்ளவை 98 குதங்களாகும்.

இவற்றில் பதினைந்து எண்ணெய்க்குதங்களை இந்திய அரசு குத்தகைக்கு எடுத்துக் கொள்ளவிருக்கிறது. இது தொடர்பான உடன்பாடு ஒன்று இலங்கையும் இந்தியாவும் விரைவில் செய்து கொள்ளவிருக்கின்றன. ஒவ்வொரு குதமும் 12,000 மெட்ரிக் தொன் எரிபொருள் கொள்ளக்கூடியவை. 1010 ஏக்கர் காணியில் அமைந்துள்ள 98 எண்ணெய்க் குதங்கள் இன்று உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

1987 இல் செய்து கொள்ளப்பட்டுள்ள இந்திய - இலங்கை உடன்பாட்டின் போது இருநாடுகளின் தலைவர்களாலும் பரிமாறிக் கொள்ளபட்ட கடிதங்களில் திருகோணமலை என்ற வார்த்தை இரண்டு தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்திய நலன்களுக்குப் பாதகமில்லாத வகையில் திருகோணமலை எண்ணெய் குதங்கள் பராமரிப்பு இரு நாடுகளினதும் கூட்டு முயற்சியாக அமைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதாக அக்கடிதங்கள் அமைந்திருந்தன.

பதினைந்து வருடங்களின் பின்பு நோர்வே நாட்டு அனுசரணையுடன் தமிழ்த்தேசியப் பிரச்சனைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சி முன்னெடுக்கப்படும் போது திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் இந்தியா அக்கறை காட்டுவது எதற்காக என்ற கேள்வி தீவிரமாக எழுப்பப்பட்டுள்ளது. புதுடில்லியில் எண்ணெய்க்குத உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையில் ஜுன் மாதத்தில் கைச்சாத்திடப்படும் என்ற

நிலையங்கள் மற்றும் ஆகாயவழி ஆகியவற்றைப் பாவிக்க அனுமதி வழங்குவதாக அமெரிக்காவுடன் கொழும்பு அரசு செய்யும் உடன்பாடு அமையப் போகின்றது. ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் கைச்சாத்தாவதற்கு முன்பு யுத்தக்கப்பல்கள் வரத் தொடங்கி விட்டன. அமெரிக்காவின் நாசகாரிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வந்து சென்றுள்ளன. இந்தியாவின் நவீனபோர்க்கப்பல் ஒன்று விரைவில் இலங்கை வரவிருக்கின்றது. பதினைந்து வருட இடைவெளியின் பின்னர் இலங்கை வர இருக்கும் முதலாவது யுத்தக் கப்பலாக இதுவாக அமையும் என்று கூறப்படுகின்றது.

சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் சர்வதேச எடுப்புக்கள் இவ்வாறாக இருக்க தாய்லாந்து நாட்டில் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகள் எந்தக் கட்டத்தில் இருக்கின்றன என்று பார்ப்பின் விடுதலைப்புலிகள் மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு அரசாங்கம் நிபந்தனை ஒன்றை விதித்திருப்பது போன்ற தோற்றத்தை அமைச்சர் பீரிஸ் கடந்த வியாழன் அன்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்து ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களுக்கான திகதியை அறிவித்தவுடன் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கும் அறிவிப்பை அரசாங்கம் நீக்கி விடும் என்பது அமைச்சர் பீரிஸின் பேட்டியில் தொக்கி நிற்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சகல விஷயங்களையும் முழுமையாக அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் இன்னும் முன் வரவில்லை என விடுதலைப்புலிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் திகதியை நிர்ணயிக்க முடியுமா? என்பது தமிழர் தரப்பு நிலைப்பாடு. பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், பொதுக்கட்டிடங்கள், அரச கட்டிடங்களிலிருந்து அரச படையினர் வெளியேற வேண்டும் என்பது புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய விஷயங்களாகும்.

பாடசாலைகள் வணக்கஸ்தலங்களில் இருந்து வெளியேறுவதாக படையினர் கூறிக் கொண்டாலும் இன்னும் முழுமையாக

## யாழ்ப்பாண நிலவரம்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தளமாக அமையக்கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் கொள்ளும். காரணம் புரிந்துணர்வு போர் நிறுத்த உடன்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு முரணாக கடற்படை புலிகளுக்கு நிபந்தனைகளை விதிப்பதும் அதையே அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்த முயற்சிப்பதும் புலிகளைப் பெருஞ்சினத்துக்கு உள்ளாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவகத்தில் புலிகள் சுதந்திரமாக நடமாடவும் அரசியல் பணியாற்றவும் கடற்படை நெருக்கடிகளை உருவாக்கி வருவதானது திட்டமிட்டதொரு சதி நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

அரசியல், இராஜதந்திர நெருக்குதல்கள் மூலம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு அராங்கத்தை நெருக்கடிக்குள் சிக்க வைத்திருக்கின்ற புலிகளுக்கு தீவகத்தில் எழுந்துள்ள இந்த நிலை முக்கியமான சவாலாகவே அமைந்துள்ளது. இதில் புலிகள் எடுக்கப் போகும் எந்த நடவடிக்கையும் ஒன்றுக்கு பலமுறை யோசிக்க வேண்டியளவுக்கு நெருக்கடிகளை உருவாக்கக் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு றிப்போர்ட்

(பத்தாம் பக்கத் தொடர்ச்சி) புலிகள் அமைப்பை எச்சரிக்கும் கருத்துக் கண்ணோட்டங்களை முன் வைப்பவராகவே இருந்து வருகின்றார். இந்நிலையில் இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ள நினைக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தமிழீழ விடுதலைப்புலிகள் சந்தேகக் கண்ணோடு பார்ப்பார்கள் என்றே நம்ப முடியும்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்படவுள்ள புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் சமரச முயற்சிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தும் மற்றும் சமரச நடவடிக்கைகளைத்திசை திருப்பும் ஒன்றாகவே இருக்கலாகாது என்பதையே உறுதி செய்ய வேண்டும்.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாளியை உடைப்பது போல சமரச முயற்சிகள் முன்னேற்றங்கண்டு வரும் போது அதனை பாழ்படுத்துவதாக அமெரிக்கா இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் அமைந்து விடுமோ என்பதே அரசியல் அவதானிகளின் அம்சமாக இருக்கின்றது.

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.
(905) 653 - 3000 (416) 266 - 9919

## IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

### குடிவரவுச் சேவைகள்
**சாம் நாகேந்திரா**
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

**ROBERT I. BLANSHAY**
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge / Wellesley)*
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

**SAM NAGENDRA**
**TEL: (905) 405-9615**
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**



நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

# Vitaplex

## சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

தலைமுடி உதிர்தல், சொடுகு, எண்ணைத்தன்மை போன்றவற்றை எளிதில் அகற்றி உங்கள் தலைமயிருக்கு புத்துயிர் அளிக்கின்றது.




குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்க்கூடிய ஒரே ஒரு சம்போ அன் கன்டிஷனர்

**Vitaplex Shampoo $9.99**
**Vitaplex Conditioner $9.99**
**Vitaplex Shampoo Plus Conditioner $18.99**
Applicable Taxes Extra

### பாவிக்கும் முறை

தலைமயிரை நன்றாக நனைத்தபின் **Vitaplex** சம்போவை சிறிதளவு கையிலெடுத்து தலையில் இட்டு நன்றாக தேய்த்து 30 வினாடிகளின் பின் நன்றாகக்கழுவவும் பின்னர் **Vitaplex**கன்டிஷனரையும் சம்போ போன்று தலையில் வைத்து முழுகவும்.
இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் சிறந்த பலனை வெகு விரைவில் பெறலாம்.

### பலா பலன்கள்

1. பக்க விளைவற்றது.
2. தலைமயிர் பளபளப்பாகவும், தடிப்பாகவும் வளர உதவும்.
3. மண்டையோட்டில் எவ்வித படிவுகளையும் படியவிடாது.

## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T. P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நிகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜீபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபீனா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஜயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸ்சாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |






உங்கள் உடல், உள நலம் பேண

## வைத்திய நிலையம்

## டாக்டர் யசோ தர்மரத்தினம்
**குடும்ப வைத்தியர்**
*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

**Dr (Mrs) YASHO THARMARATNAM**
**(MBBS, MD), (CCFP)**

## FAMILY DOCTOR




**2466 Eglinton Ave. East, Unit 03**
**Scarborough, ON M1K 5J8**
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**

# இரத்தத்தின் தீவு

31

சில ஆண்டுகளின் பின் புலிகள் மற்றொரு சக்தி வாய்ந்த குண்டொன்றைக் கொழும்பில் வெடிக்க வைத்தனர். அன்று மாலை நான் சி.என்.என். அலுவலகத்தில் இருந்தேன். மறுநாள் சி.என்.என். இல் உத்தியோக பூர்வமாக இணைந்து கொள்ள இருந்தேன். அப்போது மாலை 6 மணி.சகலருமே அலுவலகத்தை விட்டு வெளியேறி விட்டனர். அப்பொழுது தொலைபேசி ஒலித்தது. நான் எடுத்தேன். சி.என்.என். இன் தலைமையகம் இருந்த அட்லாண்டாவில் இருந்து அந்த அழைப்பு வந்தது. அழைத்தவர் என்னைக் கேட்டார்.

'கொழும்பில் சற்று முன்னர் குண்டொன்று வெடித்தது உங்களுக்குத் தெரியுமா? 'எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அப்போது தான் நான் அலுவலகத்திற்கு வந்து எனது விபரக்கோவைகளை மேசை மீது வைத்திருந்தேன். 'நல்லது கொழும்பில் குண்டொன்று வெடித்துள்ளது.

குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கமுடியுமா? " நிச்சயமாக என்று நான் கேள்வியாக இருக்குமென நான் நினைத்தேன். ஆனால் அடுத்த கேள்வி வரும்போது எனது இதயம் படபடவென அடித்துக் கொண்டது. மற்றைய நிருபர்கள் போல் நான் ஏன் பதிலளிக்கவில்லையென அவர் நினைத்திருக்கலாம். ஆனால் அந்த இரண்டு நிமிடங்களும் தமது இருப்பை தமது முக்கியத்துவத்தை மனிதத்துவத்தை எவ்விதம் பயன்படுத்துவது என்ற உணர்வை உறுதிப்படுத்துபவையாக அவை அமைந்திருந்தன. இறுதியாக 'இது அனிதா பிரதாப் புதுடில்லியிலிருந்து தெரிவித்தவை. அவர் எமக்கு சம்பவங்களை விபரித்தார்' என ஒலித்தது. நான் தொலைபேசியைக் கீழே வைத்தேன். ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். திரும்புவம் தொலைபேசி ஒலித்தது. வளைந்து சுருண்டு கிடக்கும் பாம்பு போன்ற திகிலுணர்வை அந்தத் தொலைபேசி எனக்கு ஏற்படுத்தியது. அதனை எடுக்கப் பயமாக இருந்தது. இது அட்லாண்டாவிலிருந்து வந்திருக்கும் மற்றொரு அழைப்பாக இருக்குமோ?-இன்னொரு தடவை கேள்வி கேட்கப் போகிறார்களோ? அங்கிருந்து சுலபமாக நழுவிப்போயிருக்கலாம். ஒருவருக்கும் தெரிந்திருக்காது.

ஆனால் நான் தொலைபேசியை எடுத்தேன்.

விட்டுப்போவதற்கெனச் சண்டையிட்டால் நான் முரட்டுத்தனமானவள் என யூகிக்கிறேன். ரஞ்சன் விஜேரட்ணவுடனான சந்திப்பு இந்த எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் நான் சண்டையிடுபவள் என்பது உண்மையல்ல. அது சிரிப்புக்கிடமானது. சண்டையிடுவதற்கான சக்தியும் எனக்கில்லை.

காரை நிறுத்தினீர்கள் என்று சொல்ல வேண்டும்' என்று கூறினேன்.

'விவாதிக்கவேண்டாம். நீ ஒரு மடத்தனமான மனுஷி! காரை விட்டு இறங்கு' என்று அந்தப் பையன் உறுமினான். அவனது துவக்கு நுனி என்னை அழுத்தியது. நான் காரை விட்டு இறங்கினேன். நான் அவனை விட உயரம்.பின்னர் அவனை நோக்கி நானும்

# புலிகள், ஆதரவாளர்களை கண்டுபிடிக்க ஈபிஆர்எல் எவ் வை பயன்படுத்திய இராணுவம்

பதிலளித்தேன்.

நில்லுங்கள் என்று அந்தக் குரல் கேட்டுக் கொண்டது. சி.என்.என். இன் இடைநேரச் செய்தி வெளியாகிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். காற்றில் பறப்பது போன்ற திகிலான உணர்வு எனக்கு ஏற்பட்டது. இந்த மாதிரியான ஒன்றை நான் முன்னர் செய்ததில்லை. நான் செய்திகளை எழுதும் பத்திரிகையாளராகவே அதுவரை இருந்துள்ளேன். அமைதியாக மிக உறுதியுடன் எனது அறையில் இருந்தவாறு செய்திகளை, கட்டுரைகளை எழுதுவதே வழக்கம்.

நான் ஒருபோதும் வாயால் பேசுவதில்லை. எனது குரல் உடைந்துவிட்டது. இரத்தம் உறைந்துவிட்டது. அனிதா எங்களுக்கு உங்களால் என்ன கூறமுடியும் என்ற குரல் காதில் ஒலித்தது.

நான் உங்களுக்கு எதையும் கூறவிரும்பவில்லை என்று கூறவேண்டும் போல் இருந்தது. நான் எதனையும் ஆயத்தப் படுத்தவில்லை. நான் இப்போது தான் வந்து சில விபரக்கோவைகளை வைத்துள்ளேன்.

நாளைக்குத் தான் உத்தியோகபூர்வமாக சி.என்.என்.இல் இணையவுள்ளேன். அதனைத் தான் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன் என்றேன்.

நெருக்கடிகள் வரும்போது எனது தொழிலில் நான் மிகவும் கருத்தூன்றிச் செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அவ்வப்போது

அது அட்லாண்டாவிலிருந்து வந்த அழைப்பல்ல. யாரோ ஒருவர் இன்னுமொரு உடனடி ஒலிபரப்புக்காக விடுத்த அழைப்பு. அது சி.என்.என். இன் உப தலைவர் எட்டேனரிடமிருந்து வந்த அழைப்பு. அந்த மனிதர் தான் என்னை வேலைக்கு அமர்த்தியிருந்தார்.

அனிதா நீங்கள் மிகவும் சிறப்பாகச் செய்திருக்கின்றீர்கள். நீங்கள் பதிலளித்த

**அனிதா பிரதாப்**

விதம் என்னை மிகவும் கவர்ந்தது. இந்த வழியிலேயே நாங்கள் கேள்வி - பதில் நிகழ்ச்சிகளை வழங்கலாம். அது பார்ப்போருக்கு மிகவும் ஆர்வத்தை ஏற்படுத்தும். ஆனால் கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள். துரிதமாகக் கதைக்கவேண்டாம். ஆட்களுக்கு விடயங்கள் தெரியாது. அத்துடன் இந்தியத் தொனியில் நீங்கள் பேசுவது அவர்களுக்குப் பரிச்சயமாகவும் இருக்காது என்பதை

## இலங்கைத் தீவின் உறுதியான நண்பனாகிவிட்ட யுத்தம்

ஏற்பட்டு விடுகின்றன. அதனால் அவரிடம் சில விடயங்களைக் கூற ஆரம்பித்தேன். சுருக்கமாகக் கூறிவிட்டு அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று தான் நினைத்தேன். ஆனால் அந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இலங்கைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக இரு நிமிடங்களுக்கான பணியை என்னிடம் ஒப்படைத்தார். அதிர்ஷ்டவசமாக இரு தசாப்தங்களாக பல விடயங்கள் எனது மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன. ஆதலால் இரு நிமிடங்களுக்கு விடயங்களைத் தெரிவிப்பது கடினமாக இருக்கவில்லை. ஒவ்வொரு முறையும் கேள்விக்குப் பதிலளித்து முடியும்போது அது தான கடைசிக்

ஞாபகத்தில் வைத்திருங்கள். அது ஒருபுறமிருக்க நீங்கள் அச்சமடைந்திருப்பீர்கள். அதனை ஓரங்கட்டி வைத்துவிட வேண்டும். உண்மையிலேயே அறிவுபூர்வமாகவும் விடயங்களை நன்கு அறிந்த நிலையிலும் நம்பிக்கையுடனும் கதைத்தீர்கள் 'உம் ..யா..க்களும் இருக்கவில்லை. நல்ல வேலை பெண்ணே' என்றார். அவர் என்னைச் சோதனை செய்து பார்த்திருந்தார். ஒரு மாதம் கடந்த பின் அட்லாண்டாவில் அவரை நான் சந்தித்தேன். அவரிடம் நிரம்ப விடயங்களைக் கூறினேன். 'ஓ நீங்கள் மிகவும் முரட்டுப் பெண்' என்று அவர் சொன்னார்.

உயர்வாழ்வு, நீதி, கௌரவம் என்பவற்றுக்காக மட்டுமே எனது போராட்டங்கள் அமைந்திருந்தன. (சூபின் சிரிப்பதை எனக்குக் கேட்கமுடிகின்றது. எப்போதும் சண்டையிடுவார் என்பது ஆச்சரியமில்லை)

1988 இல் யாழ்ப்பாணம் சென்றேன். கொழும்பிலிருந்து கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சென்றேன். அச்சமயம் யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினர் நிலை கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் அங்கிருந்து அநேகமாக ஓடிவிட்டனர். காடுகளுக்குள்ளிருந்தே சண்டையிட்டனர். ஈபிஆர்எல்எவ் என அழைக்கப்படும் தமிழ்க்குழுவொன்றை பொம்மைகளாக இந்தியப் படையினர் பயன்படுத்தினர். புலிக்கெரில்லாக்களையும் அதன் ஆதரவாளர்களையும் கண்டுபிடிப்பதற்காக இவர்களைப் பயன்படுத்தினர். யாழ்ப்பாணத்தைச் சூழ துவக்குகளுடன் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் ஈபிஆர்எல்எவ் நின்றது.

நாங்கள் ஒடுங்கிய வீதியொன்றினூடாகச் சென்று கொண்டிருந்தபோது திடீரென வீடு ஒன்றிலிருந்து ஓடி வந்த இளைஞர் குழுவொன்று காரை மறித்தது. க்ரீச் என்ற ஒலியுடன் சாரதி ஹரி காரை நிறுத்தினார். ஏ.கே.47 ஒன்று ஹரியின் தலையைக் குறி பார்த்தது. காரை விட்டு இறங்குமாறு அவர்கள் ஹரிக்கு கட்டளையிட்டனர். பின் ஆசனத்தில் இருந்த நான், அவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன். என்னையும் காரைவிட்டு இறங்குமாறு மிகக் கடுமையான தொனியில் அவர்கள் எம்மைப் பணித்தனர். இறங்குவதற்கு எந்த முயற்சியும் எடுக்காமல் ஏன் எங்களை நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

வெளியே இறங்கு! என்று அந்தப் பையன்களில் ஒருவர் தனது இயந்திரத் துப்பாக்கியை எனது தலையின் மீது குறிவைத்து நீட்டியவாறு கட்டளையிட்டார். ஹரி ஏற்கனவே கீழே இறங்கிவிட்டார். அவர் நடுங்கிக் கொண்டிருந்தார். 'நான் கீழே இறங்குகிறேன். ஆனால் நீங்கள் ஏன் எனது

உறுமினேன். நான் ஒரு பத்திரிகையாளர். இந்திய நாட்டவர். இந்த மாதிரி என்னை நடத்துவதற்கு உனக்கு என்ன துணிச்சல். எனக்கு விளக்கம் வேண்டும் என்றேன். இதனை நான் சொல்லியவுடன் சடுதியாக அவர் தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்தார். நான் ஆத்திரத்துடனும் அதிகாரத்துடனும் அதனைத் தெரிவித்திருந்தேன். உடனடியாக மற்றைய பையன்கள் இந்தப் பையனை பின்னுக்குத் தள்ளிக்கொண்டு சென்றனர். பின்னர் என்னை சமாதானப் படுத்த முயன்றனர். எமது தோழர் காயமடைந்துள்ளார். இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றது. அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவேண்டும்.உங்களது கார் எங்களுக்குத் தேவையாக உள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதற்காக எனது காரை நீங்கள் திருட வேண்டியதில்லை என்று நான் கூறினேன். எனது காரை அவர்களுக்குக் கொடுத்தால் அதனை மீண்டும் ஒருபோதும் நான் பார்க்கமுடியாது என்பது எனக்குத் தெரியும். ஈபிஆர்எல்எவ் தமிழ் மக்களைப் பல வழிகளில் இம்சைப்படுத்துவதாகப் பல செய்திகள் வந்திருந்தன. கொள்ளையடிப்பது பற்றியும் செய்திகள் வெளியாகியிருந்தன.

நானே அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்கிறேன். உங்களில் ஒரிருவர் அவருடன் காரில் வரலாம். அவரைக் கெதியாகக் கொண்டு வாருங்கள் என நான் கட்டளையிட்டேன். நான் அமைதியடைந்துவிட்டதாகப் பாசாங்கு காட்டிக் கொண்டு அதேசமயம் அதிகாரத் தொனியில் கதைப்பதாக பாவனை செய்தேன்.

தமது தோழனை அவர்கள் கொண்டு வந்தனர். துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தபோது அந்த நபரின் துவக்கு தற்செயலாக வெடித்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. காரின் பின் ஆசனத்தில் இருந்து தமது மடிகளில் காயமடைந்தவரை வைத்திருந்தனர். நான் முன் ஆசனத்தில் ஏறிக்கொண்டேன். இந்திய இராணுவத்தின் மருத்துவ முகாமொன்றுக்குச் சென்று அவர்களை அங்கே இறக்கிவிட்டோம்.

1990 கோடை காலம். நான் மட்டக்களப்புக்கு சென்றேன். கிழக்குக் கரையோரப் பட்டினமான மட்டக்களப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. மீண்டும் போர் ஆரம்பமானதையடுத்து 'ரைம்' இற்காகச் செய்தி சேகரிக்கச் சென்றேன். இந்தியர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். ஆனால்

# பலப்படுத்தப்படும் படை நிலைகள்: பலவீனமான சமாதான நகர்வுகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தடையை நீக்கியது முதல் நாடு முழுவதும் இரு தரப்பினரும் எதுவித அனுமதியும் இன்றி சுதந்திரமாக நடமாட அனுமதித்தமை வரை அவர் எடுத்த துணிவான முடிவுகள் எவரும் எதிர்பார்த்திராத ஆதிர்ச்சியூட்டும் நடவடிக்கைகளே.

இதேபோல் நோர்வே அனுசரனையுடன் பேச்சு வார்த்தைக்கான நகர்வுகளையும் இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில்



இருகட்சி ஆட்சி நடைபெறும் அதே வேளை. சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக எதிர்கட்சியைச் சார்ந்தவர் இருக்க அதிகாரங்கள் எதுவுமற்ற பிரதமர் தன் போக்கில் நகர்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

இவரது நகர்வுகள் சமாதானம் நோக்கியதாகவே பார்வைக்குத் தென்படுகின்ற போதிலும் மறுபுறத்தில் யுத்தத்திற்குத் தயாராகும் முயற்சிகளும் நடைபெறுவதாகவே தெரிகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை இவற்றுக்குத் தடையாக அமையவில்லை என இவர்கள் இதற்குக் காரணம் கூறுகின்றனர். அப்படியானால் இப்புரிந்துணர்வு ஒப்பந்தமும் மறுபுறத்தில் யுத்தத் தயாரிப்பிற்கு சாதகமானவகையிலேயே தயாரிக்கப்பட்டுளளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**ஆட்திரட்டல்**

படைகளுக்கு ஆட்களைத் திரட்டும் முயற்சிகள் தீவிரமாக அதேவளை பகிரங்கமாக நடைபெற்று வருகின்றது. இராணுவத்திற்கு முதற்கட்டமாக பத்தாயிரம் பேரைத் திரட்ட தேர்வுகள் நடைபெறுகின்றன. படைகளில் ஏற்பட்ட வெற்றிடங்களையே நிரப்ப மட்டுமே இவ் ஆட்திரட்டல் மேற்கொள்ளப் படுவதாக பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது.

உண்மையில் சமாதானம் மீது. தமிழ்மக்கள் ஏற்றக் கொள்ளக்கூடிய ஓர் நியாயமான தீர்வை வழங்கப் போவதாக அரசு சொல்லி வருகின்றது. அப்படித் தமிழ்மக்கள் தட்டிக் கழிக்காத ஓர் தீர்வை வழங்குவோம் என்ற நம்பிக்கை இவர்கள் மனங்களில் இருக்குமேயானால் இவ்வாறான பெரும் ஆட்திரட்டல்களில் இவர்கள் தீவிரம் காட்டுவதற்குப் பதிலாக படைக்குறைப்பையும் பாதுகாப்புச் செலவீனக் குறைப்பையும் அல்லவா மேற்கொண்டிருக்க வேண்டும். கடந்த ஆட்சிக்காலங்களில் படைகளுக்கான ஆட்திரட்டல்கள் தோல்வியில் முடிவடைந்தமைக்கு யுத்தமே காரணமாக இருந்தது. படைகளில் இருந்தவர்கள் தப்பி ஓடுவதற்கும் இதுவே காரணமாயிற்று. இதனால் ஆட்திரட்டலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தி சமாதானம் என்ற நிலையைத் தோற்றுவித்து ஆட்திரட்டலுக்கு இக்காலப் பகுதியை சாதகமாகப் பயன்படுத்த ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனரா?

இராணுவத்திற்கு ஆட்திரட்டலை மேற்கொள்ளும் அதேவேளை முல்லைத்தீவு முதல் பொத்துவில் வரையான கரையோரப் பகுதிகளில் உள்ள படை நிலைகள் படையினரால் பலப்படுத்தப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாநாட்டிலும் புதிய புதிய காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. பனை. தென்னை மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டு நில மட்டத்துடனான அதிபாதுகாப்புக் கூடிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் கடற்படை மற்றும் விமானப்படைகளையும் பலப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. யுத்தக் கப்பல்களைக் கொள்வனவு செய்வதிலும் கடற்படைக்கென தனியாக ஆட்களைத் திரட்டுவதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுபோலவே விமானப்படையையும் விரிவுபடுத்தவும் விமானப்படைத் தள விஸ்தரிப்புக்கான காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. மொத்தத்தில் கடந்த ஆட்சிக காலத்தின் போது நடைபெற்ற மூன்றாம் கட்ட ஈழப்போர் ஸ்ரீலங்காவின் முப்படைகளுக்கும் பெரும் ஆள். ஆயுத இழப்புக்களை ஏற்படுத்தியதுடன் பல வருடகாலமாக ஆக்கிரமிக்கப்பட்டு முகாம்களாக் கப்பட்டிருந்த பிரதேசங்களையுமே புலிகளிடம் இழக்கும் நிலையை ஏற்படுத்தியது. இது சர்வதேச மட்டத்திலேயே புலிகளின் அதிவேக வளர்ச்சியை புடம்போட்டுக் காட்டியது. இவை ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்கே தெரியும் என்பதுடன் புலிகளை இராணுவ ரீதியில் என்றுமே வெற்றி கொள்ள முடியாது என்ற யதார்த்தத்தையும் புரிய வைத்திருக்கும்.

இதனால் இவர் தான் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் உடனடியாக மோதல்களில் இறங்காது படையணிகளைப் பலப்படுத்தும் அதேவேளை புலுகளைப் பலவீனப் படுத்தும் திட்டங்களையும் தயாரித்து அதற்கு அமைவாகவே செயற்படத் தொடங்கியுள்ளார்.

புலிகளை எதிர்த்தால் அது தமிழ்மக்களை எதிர்ப்பதாகவே அமையும் என்பதால் அதனை மனதில் கொண்டு தமிழ்மக்களுக்கு இருந்து வரும் அழுத்தங்களை விலக்கி அவர்களுக்குத் தேவையானவற்றைத் தடையின்றி வழங்குவதன் மூலம் அவர்களை தன்வசப்படுத்தலாம்.

அதேவேளை மக்கள் புலிகளிடம் இருந்து விலகுவர். புலிகள் தனிமைப்படுத்தப்படுவர். பின்னர் புலிகளை இலகுவாக வெற்றி கொள்ளலாம் எனத் தப்புக்கணக்குப் போட்டுள்ளார் என்பது போலவே இவரது போக்குகள் அமைகின்றன. படைப்பலத்தை அதிகரிக்கும் அதேவேளை நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்கச் சர்வதேச உதவிகளையும் இவர் மறைமுகமாகப் பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இதன் நோக்கிலானதே திருமலை எண்ணெய்க்குதங்களை இந்தியாவிற்கும் வான்பரப்பையும் துறைமுகங்களையும் அமெரிக்காவிற்கும் குத்தகைக்கு வழங்கும் திட்டங்களாகும். அமெரிக்க யுத்தக் கப்பலான இதன் வருகையும் இதனை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

உலகிற்கு இவற்றின் நோக்கம் வேறு என இவர்கள் கற்பிக்க முனைந்தாலும் தமிழ மக்களுக்கு இவற்றின் உண்மை நோக்கம் தெளிவாகவே தெரிந்துவிடும். அதனால் தான் ஆரம்பம் முதல் ரணில் விக்கிரமசிங்கவின் ஒவ்வொரு அசைவையும் மக்கள் சந்தேகக் கண் கொண்டே நோக்கி வருகின்றனர்.

மக்கள் சந்தேகிப்பது போல் மீண்டும் ஒரு பாரிய யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான தயார்படுத்தல் காலமாக இவ் இடைவெளியைப் பயன்படுத்தி சர்வதேச உதவிகளுடன் மீண்டும் ஒரு யுத்தத்தை இவர் தமிழ்மக்கள் மீது தொடுப்பாரானால் அதன் விளைவுகளை நாடு சந்தித்தேயாக வேண்டும். ஏனெனில் தமிழ்மக்களை எவரும் எளிதில் ஏமாற்றி விட முடியாது. தமிழ்மக்களது இரத்தத்தில் நீச்சலடித்தவர்களை. நீச்சல் அடிக்கத் துடித்தவர்களை வாழ விட்டதும் கிடையாது. இது புலிகளின் காலம். இதைக் கடந்தகால அனுபவங்கள் அனைவருக்கும் உணர்த்தியேயுள்ளது.

# எம்.பி. நியமனம் தொடர்பாக தமிழ்க்கூட்டமைப்பு புலிகளிடம் காவடி

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

குசைதாசன் விடயத்தில் கருத்தொருமிப்புக் கண்டு சுமூக முடிவெடுக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது. இவ்வாறு தம் மறைந்த தலைவரின் இடத்தை நிரப்புவது பற்றி கூட்டணியினர் முட்டி மோதிக் கொண்டிருக்கையில் பழம்பெரும் தமிழ்கட்சியான காங்கிரஸ் தனக்கே இந்த நியமனம் என்ற வலியுறுத்தி வருகிறது.

தேசிய உறுப்பினர் பட்டியலில் திரு சிவசிதம்பரம் பெயருக்கு அடுத்தபடியாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமரகுருபரன் பெயரே உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி காங்கிரஸ் தனது கோரிக்கைக்கு நியாயம் கேட்கின்றது. இதையொட்டிய விண்ணப்ப மகஜர் ஒன்றைத் தமிழ்காங்கிரஸ் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை தேசிய உறுப்பினர் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருந்த முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ் .பிரமுகரும் இந்நாள் ரெலோ பிரமுகருமான அபுயூசுபர் தனக்கே நியமனம் என்று வன்னிப்பகுதி புலித்தலைவர்களுக்கு தூது விட்டுள்ளார். ஆனால் சென்ற தேர்தலில் திருமலை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவரும் ரெலோ அமைப்பின் தலைவருமான பிரபல சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தனக்கே இந்தப் பதவி உரியது என்று வலியுறுத்தி வருகிறார். ஸ்ரீகாந்தாவும் இதையொட்டி விடுதலைப்புலிகளிடம் ஆதரவு தேடி வருகின்றார்.

இது போதாதென்று ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு தோல்வி கண்ட அதன் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நியமிக்கப்படுவதற்கு விடுதலைப்புலிகளின் கட்டளையிட வேண்டும் என்று மன்றாட்டமாக மனு ஒன்றை புலிகளின் தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

மனுக்கள் சென்று கொண்டிருக்கும் வேளையில் கூட்டணியின் ஆனந்தசங்கரி மற்றவர்களை முந்திக் கொண்டு கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்தித்து தனது கோரிக்கைக்கு ஆதரவு தேடியுள்ளார்.

ஆனந்தசங்கரியைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் கட்சிப் பிரமுகர்களும் ஒன்றன் பின் ஒன்றாக கிளிநொச்சிக்குத் தத்தமது வேண்டுதல்களையொட்டி காவடி எடுப்பார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. சிவசிதம்பரத்தின் இடத்திற்கு யார் என்பதற்கான முடிவு விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தினாலேயே எடுக்கப்படும் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இது இவ்வாறிருக்க சிவசிதம்பரத்தின் தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் நியமிக்கப்பட வேண்டும் என்று கூட்டணியின் கிழக்கு மாகாண கிளைகள் கோரிக்கை விடுத்துள்ளன.

சிரேஷ்ட தலைவர் ஆனந்தசங்கரி தலைவராக நியமனம் பெறுவது விடுதலைப்புலிகளின் அதிருப்தியைச் சம்பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. செயலாளர் நாயகமான இரா.சம்பந்தன் தொடர்ந்து இப் பதவியை வகித்து வருவார் என்றும் கூறப் படுகின்றது.

## வன்னியில் தலைவர்....

இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவது பாரதூரமான யுத்தநிறுத்த மீறல்களாகும். இந்நிலையில் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக்குழுவிற்கு உத்தியோகபூர்வமாக இது பற்றி முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். இதே சமயம் இச்சம்பவத்தின் பாரதூரமான பின்னணி குறித்தும் பிரதமர் ரணிலிடம் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கும்படி தமிழர் கூட்டமைப்பு எம்.பி.க்களிடம் தமிழ்செல்வன் வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் 7 வருடங்களின் பின் புலிகளின் கலைவிழா

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டு நிகழ்வைக் காண பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டனர். புலிகளின் குரல் வானொலி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டபத்தில் நடை-பெற்ற முத்தமிழ் கலையரங்கம் நிகழ்ச்சியைக் கண்டு களிக்கவே யாழ்ப்பாண மக்கள் திரண்டனர்.

புலிகளின் குரல் கலைஞர்களுடன் தமிழீழத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் இணைந்து வழங்கிய இந்த கலைவிருந்து இரவு 11.00 மணி வரை நீடித்தது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாவீரர் ஜீவமலரின் சகோதரன் கண்ணதாசன் (மிருதங்கக் கலைஞர்) மாவீரன் திசையழகனின் தந்தை மகாலிங்கம் ஆகியோர் ஈகச்சுடரை ஏற்றினர். நிதர்சனம் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அருள்நிலா தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல துறைப் பொறுப்பார் பாப்பா. முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஜெயகுலராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். சங்கநாதம் என்ற நிகழ்வும் இடம்பெற்றது.




-- சோதிடர் தர்மர்

## இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சந்திரன் | சூரியன் ராகு புதன்,சனி சந்திரன் | சுக்கிரன் வியாழன் செவ்வாய் சந்திரன் |
| | இவ்வார கிரகநிலை | | சுக்கிரன் |
| | | | |
| | கேது | | |

## மேடம்

பொருள் இழப்பு, மனநிம்மதிக் குறைவு இருக்கும். செலவு அதிகமாகும். உயர்பதவி நாடி வரும். புத்திரபாக்கியம் அமையும். பூமி சம்பந்தமான வருவாய்களும் கிட்டும். வழக்குகள் வெற்றி தரும். நண்பர்களால் நற்பலன் உண்டாகும். கணவன், மனைவி உறவு நன்றாக அமையும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## இடபம்

குடும்பத் தொல்லைகள் இருந்து வரும். மற்றவர்களால் ஏமாற்றப்பட நேரிடலாம். கோபம் தொல்லை தரும். பிரயாணத்தால் தொல்லைகள் வரும்.தீய பெண்கள் தொடர்பு ஏற்படலாம். அதிகாரிகள் ஆதரவு குறையும். தொழிலில் மேன்மை பெறலாம். வீட்டில் சிலருக்குத் திருமணம் நடக்கும். வியாபாரம் நலம் தரும். வியாழன் நல்ல நாள்.

## மிதுனம்

மனைவி சுகம் கிட்டாது. குடும்பத்தில் உள்ள உறவினர் நோய்வாய்ப்படுவர். கடன் தொல்லை ஏற்பட இடமுண்டு. எதிரிகளிடம் எச்சரிக்கை தேவை. அதிகாரிகள் சந்திப்பு, உதவி என்பன இருக்கும். பிறதேசம் சென்று வாழும் நிலை ஏற்படும். நெருப்பு,விஷம்எ ன்பவற்றால் தொல்லைகள் விளையும். நண்பர் உறவினரால் உதவிகள் கிட்டும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

## கடகம்

தொழிலில் எதிர்பார்த்த நன்மை கிடையாது. பிரயாணத்தில் சங்கடங்கள் ஏற்படும். அதிகாரிகளுடன் முரண்படாது நடந்து கொள்ளவும். எதிர்பாராத செல்வசேர்க்கைக்கு இடமுண்டு. வீடு,வாகனம் சம்பந்தமான நன்மைகள் கிட்டும். கடன் தொல்லை இருக்கும். உடல் நலம் பாதிக்கப்படும். உறவினர் உதவி கிட்டும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## சிம்மம்

எந்தக் காரியத்திலும் தடை தாமதம் ஏற்படும். அமைதியின்மை இருந்து வரும். பொருள் இழப்புக்கும் ஆளாகவேண்டி வரலாம். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சியாக அமையும். நண்பர்களால் நன்மைகள் விளையும். மனைவி மக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். தொழில் முன்னேற்றம் உண்டாகும். கெட்டவர் உறவு உண்டாகும். புதன், வியாழன் நல்லநாட்கள்.

## கன்னி

வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். நண்பர்களிடம் எச்சரிக்கை அவசியம். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பொருள் வரவுக்கும் இடமுண்டு. பெற்றோர்க்கு துன்பம் விளையும். வெளியூர் பயணங்கள் மூலம் நன்மை கிட்டும். பெண்கள் வழியால் நன்மையுண்டு. வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## துலாம்

திருடரால் துன்பம் விளையும். விபத்துக்களைச் சந்திக்க நேரிடலாம். கடன் விவகாரங்களை அவதானமாக் கையாளவும். மனைவி, சகோதரியிடம் மனக் கஷ்டம் ஏற்படும்.தைரியம் தேவை. எதிலும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவும். மனச்சாந்தி ஏற்படும். செல்வாக்கு அதிகரிக்கும். ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

## விருச்சிகம்

நண்பர்கள் மூலம் காரியங்கள் நல்லமுறையில் செய்து முடிக்கலாம். மனைவி, பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பர். மனஅமைதி, பொருள்சேர்க்கையுண்டாகும். பெண்கள் விடயத்தில் அவதானம் தேவை. கண்ணில் நோய் ஏற்பட இடமுண்டு. அதிகாரிகள் உதவி இருந்து வரும். லாட்டரி போன்றவற்றில் சிலருக்கு லாபம் கிட்டும். கணவன், மனைவி உறவு வலுவாகும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## தனுசு

மனைவி பிள்ளைகளுடன் பிணக்கு ஏற்படலாம். எதிர்பார்த்த நன்மை கிட்டாது. தீயபழக்கங்கள் தொல்லைகளை விளைவிக்கும். பிறமாதர் சேர்க்கைக்கும் இடமுண்டு. நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளாத வகையில் நடந்து கொள்ளவும். தொழிலில் கவனம் செலுத்தி நல்ல லாபம் பெறலாம். புதிய நண்பர் சேர்க்கையுண்டாகும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## மகரம்

எதிலும் லாபம் கிட்டும். எதிர்ப்புக்கள் மறையும். தொழில் முன்னேற்றம் இருக்கும். எதைச் செய்தாலும் திருப்தியாக செய்து முடிக்கலாம். பணச்செலவு அதிகரிக்கும். பிறரை நம்பி உங்கள் கடமைகளை ஒப்படை க்கவேண்டாம். நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாத வகையில் நடந்து கொள்ளவும். கணவன்,மனைவி உறவு நலமாகும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## கும்பம்

எதிலும் லாபம் கிட்டும். எதிர்ப்புக்கள் மறையும். தொழில் முன்னேற்றம் இருக்கும். எதைச் செய்தாலும் திருப்தியாக செய்து முடிக்கலாம். பணச்செலவு அதிகரிக்கும். பிறரை நம்பி உங்கள் கடமைகளை ஒப்படைக்க வேண்டாம். நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாத வகையில் நடந்து கொள்ளவும். கணவன், மனைவி உறவு நலமாகும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

## மீனம்

துர்ச்செய்கையால் இடம்மாற வேண்டி வரலாம். வரவு செலவு சமமாகும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாத வகையில் நடந்து கொள்ளவும். மக்கள் உதவுவர். தொழில் வளமாகும். அரசவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

உங்கள் குழந்தைகளின் ஜாதகக் குறிப்புக்களை சரியாகக் கணிக்க

தொடர்பு கொள்ளுங்கள்

சோதிடர் தர்மர்

11 Av de la Commune de paris, 95140 Garges les Gonesse, France.
Tel: 01 39869208

TORONTO TRUCK & FORKLIFT SCHOOL

இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.




| | |
|---|---|
| REXDALE | (416) 675-7500 |
| SCARBOROUGH | (416) 213-2222 |
| BRAMPTON | (905) 457-7565 |
| HAMILTON | (905) 662-9300 |
| MISSISSAUGA | (905) 270-1999 |
| TORONTO | (416) 675-4444 |

**ஈழநாடு**
**EEZHANADU**
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (905) 653- 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
FAX: (905) 653 - 4031



**N.K.S. DRAPERY & BLINDS**

CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)

210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420



# வன்னியில் 25 245 மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை

வன்னிக் கல்வி வலயங்களில் கல்வி விழிப்புணர்வு வாரத்தின் போது மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரத் திரட்டலின் மூலம் ஐந்து கல்வி வலயங்களில் பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 245 என அறியப்பட்டுள்ளது.

கல்வி விழிப்புணர்வு வாரத்தின் முன் இந்த எண்ணிக்கை 21 ஆயிரமாக இருந்தது. இந்த எண்ணிக்கையில் பாடசாலை கல்வியில் இருந்து இடை விலகியோர் 4 ஆயிரத்து 768 ஆவார். ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்கள் 17 ஆயிரத்து 264 பேர்ஆவார். முற்றாக பாடசாலைகளுக்கு செல்லாதோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 213 பேர் ஆவார். இதன்படி முல்லை கல்வி வலயத்தில் 6 ஆயிரத்து 356 மாணவர்களும் துணுக்காய் வலயத்தில் 5 ஆயிரம் பேரும். கிளிநொச்சி வலயத்தில் 10 ஆயிரத்து ஆறு பேரும். மடுக் கல்வி வலயத்தில் 2 ஆயிரத்து 194 பேரும் வவுனியா வடக்கு பிரிவில் 2 ஆயிரத்து 679 பேரும் இந்த வகையில் உள்ளனர்.

இப்புள்ளி விபரத்தை கிராமிய பொருளாதார ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பில் பாடசாலை ஒன்றின் கட்டிடத்தில் இயங்கி வரும் முல்லை வலய கல்விப்பணிமனை மீண்டும் முல்லைத்தீவு நகருக்கு செல்ல வேண்டுமாயின் அதற்கான கட்டிடங்களை அமைக்க 40 இலட்சம் ரூபா வரையான நிதி தேவைப்படுமென முல்லைத்தீவு வலய கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

1990 இல் முல்லைத்தீவு இராணுவத்தளம் விரிவாக்கப்பட்டதால் முல்லை மாவட்ட கல்விப் பணிமனை முற்றாக அழிக்கப்பட்டது. அன்று முதல் அந்த கல்விப் பணிமனை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. முல்லைத்தீவு நகரம் ஓயாதஅலைகள் ஒன்று நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டது.

இங்கு கல்விப்பணிமனையை மீளக் கொண்டு செல்வதாயின் தமக்கு கட்டிடங்கள் முழுமையாக அமைக்கப்பட வேண்டும் எனவும் அதற்கு 40லட்சம் ரூபா தேவையெனவும் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே புனரமைப்பு திட்டங்களை வழங்கிய போதும் அவற்றுக்கு எதுவித நிதியும் வழங்கப்படவில்லையெனவும் கடந்த ஆண்டு திட்டம் ஒன்றுக்கே யுனிசெவ் நிதி அளித்ததாகவும் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க ஏன் அமெரிக்காவிடமும் ஐரோப்பிய நாடுகளிடமும் ஆலோசனை கேட்க வேண்டும்? – வாசு கேள்வி

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் ஏன் பின்னிற்கின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்

புலிகள் மீதான தடையை நீக்க அரசாங்கம் அமெரிக்க. ஐரோப்பிய நாடுகளிடம் ஏன் ஆலோசனை கேட்கின்றது எனப் புரியவில்லை. பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி ஜுன் மாதம் ஆரம்பிக்க முடியாது போனதற்கு புலிகள் மீதான தடை நீக்கப்படாமையே பிரதான காரணம்.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் இந்நாடு அழிந்து விடும் என்று ஜே.வி.பி.யின் விதண்டாவாத பொய்ப்பிரச்சாரத்திற்கு அரசாங்கம் அடிபணிந்து விட்டது என்று தான் கருத வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இன்னமும் தடை நீக்கப்படாமைக்கு என்ன காரணம்.

நாடு பிளவுபடாத ஒரு தீர்வுக்கு புலிகள் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஜனாதிபதியும் ஜே.வி.பி.யும் இணைந்து கட்டவிழ்த்து விடுகின்ற பொய்ப்பிரச்சாரங்கள் சமாதான பேச்சுவார்த்தையை கேள்விக்குறியாக்கியுள்ளன.

அரசாங்க அமைச்சர்கள் சிலரும் விடுதலைப்புலிகள் மீது நம்பிக்கையற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

உண்மையில் சிங்கள அரசாங்கங்களினால் தமிழ்மக்கள் தான் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இம்முறை பேச்சுவார்த்தை தவற விடப்படுமானால் இன்னும் ஒரு ஆண்டில் தமிழீழம் உருவாகி விடும்.

இதனை சிங்கள அரசியல்வாதிகளும் தென்பகுதி மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே விடுதலைப்புலிகளுடன் பேசி நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வழியை ஏற்படுத்த வேண்டும்.

# 7 வருடங்களுக்குப் பின்னர் குடாநாட்டுக் கடலில் மீன்பிடித்த மீனவர்

சுமார் ஏழு வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாக்கடலில் மீன்பிடிக்க மீனவர்கள் 05ம் திகதி புதன்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

இரவு நேர ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காக சுமார் 50 வள்ளங்களில் மீனவர்கள் பிற்பகல் மூன்று மணியளவில் குருநகர் இறங்குதுறையில் இருந்து புறப்பட்டனர்.

கொழும்பில் பாதுபாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கத்தையடுத்தே மீனவர்கள் இரவு நேர ஆழ்கடல் மீன்பிடித்தலுக்குப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் குடாக்கடலில் இருந்து காலை ஆறு மணி முதல் மாலை மூன்று மணி வரை மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை இதுவரை குடாநாட்டில் கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் இலவசஉலர் உணவு நிவாரணம் அடுத்த மாதம் முதல் நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு மாதாந்தம் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது இரவு பகல் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இந்த நிவாரணத்தை அடுத்த மாதம் முதல் நிறுத்தி விட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கின்றது. இது தொடர்பான உத்தரவு யாழ். செயலகத்திற்கு ஓரிரு தினங்களில் விடுக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வன்னி –கிழக்கு கடல் பாதை: புலிகள் கோரிக்கைக்கு அரசு4 நிபந்தனைகள்

வன்னிக்கும் கிழக்குப் பகுதிக்கும் இடையே கடல் வழியாகப் போக்குவரத்துச் செய்ய தனியான பாதை ஒன்றை அமைத்துத் தருமாறு விடுதலைப்புலிகள் விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்பதற்கு அரசு நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது. விடுதலைப்புலிகள் தங்களுடைய பயணம் தொடர்பான செய்தியை 48 மணி நேரத்திற்கு முன்பாக தெரியப்படுத்த வேண்டும். ஆயுதப்படகுகளில் புலிகள் பயணம் செய்ய முடியும். ஆனால் அந்தப் படகில் ஆயுதங்களையோ வெடிமருந்துகளையோ ஏற்றிச் செல்லக்கூடாது.

பயணம் செய்யும் நபர்களுடைய விபரங்களை முன்னதாகவே அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பயணம் செய்யும் படகில் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஒருவரும் உடனிருக்க வேண்டும். இவ்வாறு நான்கு நிபந்தனைகளை அரசு முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான புலிகளின் முடிவு தெரியவில்லை.

# யாழிலில் தென்னிலங்கை சோதிடர்கள்

ஏ9 தரைப்பாதை திறக்கப்பட்ட பின்னர் தென்னிலங்கையில் இருந்து பலவித விடயங்களும் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வருகை தரத் தொடங்கியுள்ளன. இவற்றில் சமீபத்திய வரவாக நினைத்தகாரியம் கூறும் ஜோசியமும் வந்துள்ளது. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் தென்னிலங்கையில் இருந்து வந்த ஜோசியப் பெண்மணியிடம் தாம் நினைத்த காரியம் நிறைவேறுமா? நிறைவேறாதா? என்று அறிவதற்காக ஏராளமான மக்கள் திரண்டிருந்ததைக் காணமுடிந்தது. நீண்டகாலமாக இல்லாதிருந்த இத்தகையவர்கள் மீண்டும் குடாநாட்டுக்கு வரத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் வாகன விபத்தில் உங்கள் தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?**

**SIDNEY FINANCIAL**
AND ACCIDENT BENEFIT SERVICES

SIDNEY K. SITHIRAVADIVEL. B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான
- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்



மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

**இவற்றுடன் உங்கள்**
- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்

JAFFNA UNIVERSITY OF LIBRARY